விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 07 வியாழக்கிழமை (22.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# முதல்வர் விக்கியை விமர்சித்ததால்
# மாகாண சபையில் பெரும் அமளி!

## நிலைமையை கட்டுப்படுத்த சபை ஒத்திவைப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதம் நேற்று இடம்பெற்ற நிலையில், குறித்த விவாதத்தில் உரையாற்றிய உறுப்பினர்கள் சிலர் பட்ஜெட் தொடர்பில் விவாதிக்காமல் முதலமைச்சரை அரசியல் ரீதியாக விமர்சித்தமையால் ஆளுங்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்று சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. நிலைமையை கட்டுப்படுத்த சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் ஒரு மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## 12 இந்திய மீனவர் கைது!

(மன்னார்)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 12 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் தெற்கு கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையின

23ஆம் பக்கம் பார்க்க...

## சிங்களவர்களின் கோரிக்கைகள் குப்பையில் இடப்படுகின்றன

### நீதியமைச்சர் விஜயதாச

(மட்டக்களப்பு)

மட்டகளப்பில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு, சமூகங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்துகின்றார் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள மங்களராமய தலைமை பௌத்த பிக்குவான அம்பிட்டிய சுமனரத்ன தேரரை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனநாயகவாதி சம்பந்தன்

### ஜே.வி.பி. புகழாரம்

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண அதிகாரங்கள் தொடர்பில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு கருத்துக்களை முன்வைத்த போதிலும்

02ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம் மீள்குடியேற்றம் முதலமைச்சர் விளக்கம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் கடந்த மூன்று வருடங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் மககளுக்கு காணி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவலை முதலமைச்சர் வெளியிட்டுள்ளார். நேற்று முன்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சியை மாற்றியமைக்காக இந்தியா வருந்தும்!



### கோத்தபாய

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்துள்ள சீனாவின் ஆதிக்கத்தை தடுக்கும் நோக்கில்

23ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணை கோரும் அறிக்கை கையளிப்பு மேலும் காலதாமதம்!

(கொழும்பு)

யுத்த குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச்

23ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் கொலை வழக்கின் சாட்சி விசாரணை நிறைவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் சாட்சி விசாரணைகள் நேற்று நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 20 நாட்கள் விசேட ஜூரி சபையால், கொழும்பு மேல் நீதிமன்ற பிரதம நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் ரணில் திருப்பதியில் தரிசனம்

(சென்னை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்பதி திருமலை கோவிலில் நேற்று சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டார்.

இலங்கையில் இருந்து விமானம்மூலம் நேற்று மாலை சென்னை வந்த அவர்,

23ஆம் பக்கம் பார்க்க....

## யானைக்கு வைத்த பொறியில் வைத்தவரே சிக்கி உயிரிழப்பு

### வவுனியாவில் பரிதாபம்

(மல்லாவி)

வவுனியா நீலியாமோட்டை கிராமத்தில் யானைக்கு வைக்கப்பட்ட மின்சாரப் பொறியினுள், மின்சாரப் பொறியை வைத்தவரே, சிக்கி உயிரிழந்துள்ள சம்வம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா மாவட்டத்தில் உள்ள நீலியாமோட்டை கிராமத்தில்

23ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு மக்கள் இராணுவத்திடமிருந்து உதவியை பெற்றால்

# ஆயிரம் வருடங்கள் சென்றாலும் இராணுவத்தை வெளியேற்ற முடியாது!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்கள் இராணுவத்திடமிருந்து உதவியை பெற்றால் ஆயிரம் வருடங்கள் சென்றாலும் இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்ற முடியாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 71 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மதான விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ், வடக்கு மாகாணத்தில் இரண்டு இலட்சம் இராணுவம் இருப்பதாக உறுப்பினர் ரவிகரன் கூறுகின்றார். அவ்வாறு இருந்தாலும் அந்த இராணுவத்தை வெளியேற்ற காலம் எடுக்கலாம். இராணுவத்தை வெளியேறுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண முதலமைச்சரும் பேசிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

எனினும் இராணுவத்தை வெளியேற்ற காலம் எடுக்கலாம் எனவே, அதுவரை இராணுவத்திடமிருந்து நாங்கள் உதவிகளை பெறலாம், இராணுவத்தில் நல்ல பொறியியல் படையணி உள்ளது. அதன் உதவிகளையும் நாங்கள் பெறலாம். அண்மையில் கூட நெல்லியடி சந்தை தீப்பிடித்த போது குறித்த தீயை இராணுவத்தினர் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு



தொடர்பு: Dr.K.கிருபாகரன்
Cell : 077 973 8802
Ph : 021 224 2102

(7114)



## ஊர்க்கோழிகள் விற்பனைக்கு

ஊர்ச் சேவல்கள், பேட்டுக் கோழிகள் ஒரு மாத கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**0763488645**

No.5, அருளம்பலம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(6717)


## ஜனநாயகவாதி...

புதிய அரசியல் அமைப்பு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் கூறுவது ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடாகும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இது குறித்து கருத்து வெளியிடுகையில், அதிகார பரவலாக்கல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் முக்கியமான ஒரு காரணியை முன்வைத்துள்ளது.

அதாவது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறான ஒரு நிலைப்பாட்டில் இருக்கவில்லை. வடக்கு கிழக்கின் சர்வஜன வாக்கெடுப்பை பற்றி மட்டுமே முன்னர் பேசினார்கள்.

ஆனால் இப்போது முழு நாட்டின் பூரண ஒத்துழைப்புடன் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதை தெரிவித்துள்ளார். ஆகவே எதிர்க்கட்சி தலைவர் ஜனநாயகவாதி என்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3.10)


## NEW SCIENCE WORLD

### CHEMISTRY-2019 (A/L) NEW SYLLABUS

**த.சிவகுமார் B.Sc, PGDE**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:-**
**23.12.2016 (வெள்ளி 9.00AM)**

மாதாந்த தொடர்போட்டிப் பரீட்சை,
கடந்த கால வினா-விடை
வகுப்புக்கள் Theory
உடன் நடைபெறும்.

(சி-6828)



## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 22.11.2016 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
அமரர்
**சுந்தரலிங்கம் தனலெட்சுமி** அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 23.12. 2016 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.15, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

இங்ஙனம்
கணவர் அ.சுந்தரலிங்கம்
T.P:-021 222 0074

(7118)


## மரண அறிவித்தல்

### அமரர் வர்ணிஜா கிருஷ்ணகுமார்

(யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி
க.பொ.த உயர்தரப் பிரிவு (A/L Com 2018) மாணவி)



கனகாம்பிகைக்குளம் இல.155 ஐ பிறப்பிடமாகவும் 43/1 பூநாறிலேன் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணகுமார் வர்ணிஜா அவர்கள் 21.12.2016 புதன்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.155 கனகாம்பிகைக் குளம் கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (22.12.2016) முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-குடும்பத்தினர்
இல.155, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.
0771630971

(இ-6826)


## NEW SCIENCE HALL

**கன்னாதிட்டி றோட் யாழ்ப்பாணம்.**
**A/L 2019 தொழில்நுட்ப பிரிவு**
**தமிழ், ஆங்கில மொழி மூலம்**

**தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

திரு.R.சரவணன்
B.Sc IN BIO TECHNOLOGY
M.Sc IN BIO TECHNOLOGY

**பொறியியல் தொழில் நுட்பவியல்**

திரு.B.அருண்குமார்
HNDE MECHANICAL ENGINEERING
(MANIPAY HINDU COLLAGE)

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**

திரு.S.பகீரதி
B.Sc IN AGRICULTURE TECHNOLOGY AND MANAGEMENT (PERADENIYA)
M.Sc IN HORTICULTURE

குறிப்பு:-செய்முறைப் பாட விளக்கங்களுடன் கூடிய கற்றல்

**ஆரம்பம்:-23.12.2016**
**வெள்ளிக்கிழமை பி.ப 3.00**

(C-6823)



## தொழில்நுட்பவியல்-2019

Bio-Tech
E-Tech

**DMI யாழ்.நகர்**

- தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி
- Royal Examination Centerன் மாதாந்தப் பரீட்சை
- Multimedia ஊடான கற்பித்தல்

ஆரம்பம்:-07.01.2017 சனி
காலை 9.00AM

(சி-6821)

## சமஷ்டி அரசியலமைப்பை கொண்டுவந்து

# ஒற்றையாட்சியை நாசமாக்க கூட்டு எதிரணி இடமளிக்காது

## தினேஷ் குணவர்த்தன கடும் எதிர்ப்பு

*(கொழும்பு)*

***புதிய அரசியலமைப்பில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பரிசீலனை செய்து ஒற்றையாட்சியை நாசமாக்க அரசு முற்படுமாயின் அதற்கு எதிராக கூட்டு எதிரணி மக்கள் சக்தியைத் திரட்டி பாரிய எதிர்ப்பைத் தெரிவிக்கும் என கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். அதேவேளை அவ்வாறான ஒரு அரசியல் அமைப்பை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்கவும் மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.***



2017ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ள புதிய யாப்புத் தொடர்பில் அரசுக்குள் இதுவரை உறுதியான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வைக் கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளதாகவும் ஐ.தே.கவினர் விடுதலைப்புலிகளுடனும் இதனையே அன்று பேரம் பேசியதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒற்றையாட்சியின் அடிப்படையிலேயே தீர்வு தொடர்பில் அன்று முதல் வலியுறுத்தி வந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், தற்போதைய சூழலிலும் சுதந்திரக் கட்சி எவ்வாறான முறையில் தீர்வை வழங்குவது என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்பது தெளிவாக விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சக்தியைக் கொடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய சமஷ்டி முறையிலான அரசியலமைப்பை கொண்டுவர முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என தினேஷ்குணவர்த்தனமேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

# வாசுதேவக்குருக்களின் வெளியேற்றத்தை சித்தன்கேணி மக்கள் தடுக்க வேண்டும்!

சித்தன்கேணி சிவன்கோவில் சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் அவர்களுக்கும் தற்போதைய நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவர் கௌரவமாக ஆலயத்தைவிட்டு விலக இருப்பதாக அறிந்தேன் மிகுந்த மனவேதனையாக இருந்தது.

சிவஸ்ரீ வாசுதேவக்குருக்கள் அவர்களைப்பற்றி வடக்கு இந்து மக்கள் நன்கறிவர். சிவாச்சாரியார் கடமையுடன் மிக இளவயதில் சமயத்தொண்டிலும் பொதுத்தொண்டிலும் முன்நிற்பவர். தனது ஆலயக்கடமைகளுக்கு அப்பால், சமய சமூக தொண்டுகளை பரந்த அளவில் ஆற்றிவருபவர். சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும் பின்னர் வீணாகான குருபீடம் மூலமும் சமய சமூக சேவையாற்றுபவர். அவருடைய சேவையையும் அதற்கு ஆலயமும் அருகிலுள்ளோரும் வழங்கிய ஆதரவையும் கண்டு எத்தனை மகிழ்வடைந்தோம்.

இவரல்லவா குரு இதுவல்லவா ஆலயம் இவர்களல்லவா பெருமக்கள் என எத்தனை பெருமையடைந்தோம். அத்தனையும் வீணாவதோ. பாரதியார் சொன்னதுபோல் நல்லதோர் வீணை செய்து அதை நலன் கெடப் புழுதியில் எறிவதுண்டோ...? ஆலயத்தின் தற்போதய நிர்வாகத்தினரின் புரிதல் இல்லாமை காரணமாக ஆலயப் பூசையைவிட்டு பெருந்தன்மையுடன் விலகிக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

பரம்பரை பரம்பரையாக ஆராதித்த தெய்வத்தை எத்தனை மனநோவுடன் அவர் பிரிய முன்வந்திருப்பார். ஆலயப்பொதுச்சபை கூடி நன்மை தீமைகளை ஆராய்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதே பொருத்தமானதாக இருக்கும். இல்லையேல் இது ஏனைய சிவாச்சாரியர்கள் மனதிலும் காயத்தை ஏற்படுத்தும். சமய சமூக சேவைக்காக தன்னையும் தன் குடும்பத்தையும் அர்ப்பணித்து சேவையாற்றிய ஒருவருக்கு இத்தனை சோதனையானால், நமக்கேன் வம்பு என அவர்கள் பாட்டில் வாளாவிருக்க இது வழி வகுக்கலாம் என்பதே எனது ஆதங்கம்.

அந்தண சமூக மேம்பாட்டுக்காக உழைப்பவர்களில் ஒருவன் என்பதாலும் அதன் மூலம் ஆலயக்கடமைகள் சிறக்கவேண்டும் எனும் அவாவுள்ளவன் என்பதாலும் மற்றைய ஆலயங்களுக்கும் அந்தணர்களுக்கும் இது உதாரணமாகிவிடக்கூடாது எனும் ஆதங்கத்தில் இதை எழுதுகிறேன்.

அவ்வாலயத்தை அடித்தளமாக வைத்து சமூக சேவையில் அவருடன் கலந்து கொண்டவர்களே! பயன் பெற்றவர்களே! அவ்விழாக்களில் கலந்து கொண்ட பெரியோர்களே! அரச அதிகாரிகளே! ஆதீன முதல்வர்களே! சற்றுச் சிந்தியுங்கள். சிவாச்சாரியர்கள் ஆலயத்தில் அப்படிச் செய்யவேண்டும் இப்படிச் செய்யவேண்டும் என பத்திரிகைகளில் எழுதும் சமயாபிமானிகளே! சிவஸ்ரீ வாசுதேவக்குருக்களின் சேவை மேலும் வளரவேண்டுமானால், அவரைப்போல் அந்தணர்கள் உருவாகவேண்டுமானால், இதில் எமது பங்களிப்பும் தேவை. சித்தன்கேணி ஒரு கிராமமாக இருக்கலாம். சிவன்கோவில் அவர்களின் பரிபாலனைத்துக்குட்பட்டதாக இருக்கலாம். ஆனால் சிவஸ்ரீ வாசுதேவக்குருக்களின் சேவை சமயத்துக்கும் சமூகத்துக்குமாக இருந்ததென்பதை மறுக்கமுடியாது.

ஆதலால் இதில் ஊர்ப் பெரியவர்கள் உடனடியாக பொதுக்கூட்டத்தைக் கூட்டி நல்லதொருசேவை தொடர வழிவகுக்கவேண்டும். இடைக்கால நிர்வாகமொன்றையாவது ஏற்படுத்தி ஆவனசெய்வேண்டும் என பொறுப்புள்ள அரச அதிகாரியாக கடமையாற்றி பொதுச்சேவை செய்பவன் எனும் உரிமையுடன் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவாச்சாரியரொருவர் காலத்துக்கு காலம் மாறும் எத்தனை நிர்வாக சபையைக்கண்டிருப்பார். எந்த நிர்வாகசபையானாலும் கூட தனது காலம் முடிந்தவுடன் போய்விடும். ஆனால் போன சிவாச்சாரியார் திரும்பி வருவாரா?

ந.சதாசிவஐயர்
ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்.

## 15 இலட்சம் கடிதங்கள் தேக்கம்

தபால் சேவை ஊழியர்கள் மேற்கொண்டுள்ள அடையாள பணிப்பகிஸ்கரிப்பின் காரணமாக நேற்று முன்தினம் நாடு முழுவதும் 15 இலட்சம் கடிதங்கள் தேங்கிக் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் ஊதியம் உள்ளிட்ட 7 விடயங்கள் குறித்து திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி 48 மணிநேர அடையாள பணிப் பகிஸ்கரிப்பில் நாடுமுழுவதுமுள்ள தபால் சேவை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நாடு முழுவதும் தபால்சேவை முடங்கியதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

இந்த நிலையில், தமது கோரிக்கைகளுக்கு இன்னும் 14 நாட்களுக்குள் தீர்வு கிடைக்கவில்லையாயின் தொடர் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தயார் என தபால் சேவை ஊழியர்கள் சங்கத்தினர் எச்சரித்துள்ளனர். (இ-3-10)

## நிதி அமைச்சில் கண்ணிவெடி

நாம் பொறுப்பேற்ற போது கண்ணிவெடியாலேயே நிதி அமைச்சு உருவாக்கப்பட்டிருந்தது. அது எப்போது வெடிக்கும் என்று நாம் அறிந்திருக்கவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஒரு பகுதி மக்களுக்கு வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுகததாச உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நிதி அமைச்சிலுள்ள கண்ணிவெடியிலிருந்து வயர்களை நீக்குவதுபோல இந்த ஓரிரு வருடங்களில் நாம் வயர்களை அகற்றியுள்ளோம். இப்போது அந்த கண்ணிவெடி வெடிக்காது என்பதை நாம் அறிந்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3-10)

# 'வெற்றி நிச்சயம்'
## மாதாந்தத் தொடர் பரீட்சை - மார்கழி 2016
## க.பொ.த (உ/த) - 2018 உயிரியல் பிரிவு

NEW SCIENCE WORLD VICTORY MUST Brown Road, Jaffna.

**Bio Streem** — **Chemistry & Physics Average Rank list**

| St.Id | Full Name | School Name | Stream | Chemistry | Physics | Average | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 2225 | Arulpiragasam Anpuchselvam | J/ Jaffna Hindu College | Bio | 78 | 88 | 83 | 1 |
| 2086 | Sivabalan Paviththiran | Ki/ Kilinochchi Maha Vidyalayam | Bio | 77 | 87 | 82 | 2 |
| 2218 | Subramaniam Subasan | J/ Jaffna Hindu College | Bio | 91 | 73 | 82 | 2 |
| 2495 | Nimalan Birunthapan | J/ Jaffna Hindu College | Bio | 90 | 73 | 81.5 | 4 |
| 2156 | Vaishnavi Kannathasan | J/ Vembadi Girls High School | Bio | 78 | 84 | 81 | 5 |
| 2135 | Kamsika Kunaratnam | J/ Chavakachcheri Hindu College | Bio | 76 | 79 | 77.5 | 6 |
| 2912 | Thirucheselvam Dinojan | J/ Chavakachcheri Hindu College | Bio | 78 | 77 | 77.5 | 6 |
| 2359 | Suventhira Aruchunan | J/ Vembadi Girls High School | Bio | 70 | 83 | 76.5 | 8 |
| 2039 | Mahendrarajah Janakan | J/ Jaffna Hindu College | Bio | 75 | 76 | 75.5 | 9 |
| 2134 | Kavippiriyah Kanakeswaran | J/ Meesalai Veerasingam C. College | Bio | 80 | 69 | 74.5 | 10 |
| 2222 | Saranka Sathiyakumar | J/ Vembadi Girls High School | Bio | 69 | 80 | 74.5 | 10 |
| 2027 | Mahalingam Kiritharan | J/ Jaffna College | Bio | 72 | 73 | 72.5 | 12 |
| 2002 | Kasthury Paramananthan | J/ Vembadi Girls High School | Bio | 69 | 75 | 72 | 13 |
| 2221 | Abirami Chandrakumar | J/ Vembadi Girls High School | Bio | 77 | 67 | 72 | 13 |
| 2414 | Thiagachandiran Thuwaragan | J/ Jaffna Hindu College | Bio | 73 | 70 | 71.5 | 15 |
| 2114 | Khajenthine Kulanayagam | J/ Vembadi Girls High School | Bio | 76 | 65 | 70.5 | 16 |
| 2329 | Lathankini Ganesharasa | J/ Vembadi Girls High School | Bio | 62 | 78 | 70 | 17 |
| 5305 | Nunmila Thushyanthan | J/ Vembadi Girls High School | Bio | 70 | 70 | 70 | 17 |
| 2403 | Kirujika Rajenthirakumar | J/ Thirukudumpa Kanniar Madam | Bio | 69 | 70 | 69.5 | 19 |
| 2113 | Dharmika Skandarajah | J/ Vembadi Girls High School | Bio | 59 | 79 | 69 | 20 |
| 2238 | Kodeeswaran Viththagan | J/ Jaffna Hindu College | Bio | 66 | 72 | 69 | 20 |
| 2012 | Edwin Joy Vithushan | J/ St. Johns College | Bio | 70 | 67 | 68.5 | 22 |
| 2085 | Kathirkamanathan Saajinthan | J/ Jaffna Hindu College | Bio | 60 | 77 | 68.5 | 22 |
| 2001 | Millenni Krishanthi Mariyathasan | J/ Vembadi Girls High School | Bio | 61 | 75 | 68 | 24 |
| 2165 | Kiruthika Ravithas | J/ Skandavarodaya College | Bio | 76 | 60 | 68 | 24 |
| 2181 | Abisiha Karunananthan | Kn/ Pallai Central College | Bio | 71 | 65 | 68 | 24 |
| 2294 | Rishmee Lesleybaskarathevan | J/ Vembadi Girls High School | Bio | 63 | 73 | 68 | 24 |
| 2335 | Kameliya Juvitran | J/ Vembadi Girls High School | Bio | 71 | 64 | 67.5 | 28 |
| 2362 | Jeviththana Kamalachandran | J/ Vembadi Girls High School | Bio | 68 | 67 | 67.5 | 28 |
| 2471 | Tharsika Kanganathan | J/ Vembadi Girls High School | Bio | 65 | 70 | 67.5 | 28 |
| 2081 | Navarasa Sangeerthanan | J/ Kokuvil Hindu College | Bio | 69 | 65 | 67 | 31 |
| 2057 | Grecian Jenoshan | J/ St. Henry's College, Ilavalai | Bio | 64 | 69 | 66.5 | 32 |
| 2111 | Kishanthiga Nesarajah | J/ Vembadi Girls High School | Bio | 61 | 72 | 66.5 | 32 |
| 2372 | Mohanathas Dayas | J/ Jaffna Hindu College | Bio | 68 | 65 | 66.5 | 32 |
| 2575 | Thaakshajini Rajasekaran | J/ Vembadi Girls High School | Bio | 63 | 70 | 66.5 | 32 |
| 2119 | Dulasika Kannathasan | J/ Vembadi Girls High School | Bio | 71 | 61 | 66 | 36 |
| 2006 | Abiramy Raguthas | J/ Manipay Ladies College | Bio | 68 | 63 | 65.5 | 37 |
| 2020 | Abiramy Kanagasabai | J/ Vembadi Girls High School | Bio | 65 | 66 | 65.5 | 37 |
| 2074 | Sivapalan Senthuran | J/ Puttur Sri Somaskanda College | Bio | 66 | 65 | 65.5 | 37 |
| 2105 | Abinaya Seyone | J/ Jaffna College | Bio | 64 | 67 | 65.5 | 37 |
| 2250 | Shangeetha Kumaraguru | J/ Jaffna College | Bio | 60 | 71 | 65.5 | 37 |
| 2037 | Thevathasan Gowrishankar | J/ Jaffna Hindu College | Bio | 71 | 59 | 65 | 42 |
| 2082 | Sivakaran Piragaas | J/ Kokuvil Hindu College | Bio | 63 | 67 | 65 | 42 |
| 2472 | Subana Thavarajan | J/ Vembadi Girls High School | Bio | 65 | 65 | 65 | 42 |
| 2639 | Fathima Safira Issadeen | Trincomalee Pulmoddai C.College | Bio | 65 | 65 | 65 | 42 |
| 2299 | Thadchajiny Kathirkamanathan | J/ Jaffna Hindu Ladies College | Bio | 65 | 64 | 64.5 | 46 |
| 2042 | Ratnasingam Sriraam | J/ Atchuvely Central College | Bio | 65 | 63 | 64 | 47 |
| 2293 | Abinaya Satgunarajah | J/ Vembadi Girls High School | Bio | 60 | 68 | 64 | 47 |
| 2389 | Sivaraja Vinothan | Mu/ Mallavi Central College | Bio | 70 | 58 | 64 | 47 |
| 2544 | Nithiyananthan Thunkeesan | J/ Jaffna Hindu College | Bio | 64 | 64 | 64 | 47 |
| 2030 | Thayanesan Sanjeevan | J/ St. Patricks College | Bio | 63 | 64 | 63.5 | 51 |
| 2334 | Paaskaran Paarththeepan | J/ Kokuvil Hindu College | Bio | 66 | 61 | 63.5 | 51 |
| 2496 | Rajakoone Chriswin | Mn/ St. Xavier's Boys College | Bio | 63 | 64 | 63.5 | 51 |
| 2167 | Thamilini Premruban | J/ Jaffna Hindu Ladies College | Bio | 54 | 72 | 63 | 54 |
| 2247 | Thenuka Kirupaharan | J/ Vembadi Girls High School | Bio | 56 | 70 | 63 | 54 |
| 2249 | Abinaya Sriharan | J/ Jaffna Hindu Ladies College | Bio | 60 | 66 | 63 | 54 |
| 2914 | Gowsiya Balasubramaniam | J/ Chavakachcheri Hindu College | Bio | 51 | 75 | 63 | 54 |
| 2106 | Priyatharshini Nagasenan | J/ Jaffna College | Bio | 60 | 65 | 62.5 | 58 |
| 2344 | Mahendran Sobanan | J/ Jaffna Hindu College | Bio | 67 | 58 | 62.5 | 58 |
| 2568 | Ashotha Ariyarasa | J/ Vembadi Girls High School | Bio | 62 | 63 | 62.5 | 58 |
| 2679 | Pranavi Hue Lowrence Tenarence | J/ Kokuvil Hindu College | Bio | 59 | 65 | 62 | 61 |
| 2171 | Kasthuri Vasanthan | Chundikuli Girls College | Bio | 60 | 63 | 61.5 | 62 |
| 2424 | Sathiyanathan Pugalon | J/ Jaffna Hindu College | Bio | 65 | 58 | 61.5 | 62 |
| 2442 | Gayathiry Ananthan | J/ Vembadi Girls High School | Bio | 56 | 67 | 61.5 | 62 |
| 2149 | Aathirai Manivannan | J/ Manipay Ladies College | Bio | 58 | 64 | 61 | 65 |
| 2638 | Farsana Mohamed Buna | Trincomalee Pulmoddai C. College | Bio | 55 | 67 | 61 | 65 |
| 2173 | Vinothini Jeganathan | J/ Vaddu Hindu College | Bio | 71 | 50 | 60.5 | 67 |
| 2525 | Kulasingam Ajilavan | J/ Jaffna Hindu College | Bio | 56 | 65 | 60.5 | 67 |
| 2905 | Kiriyaliny Vallipuram | J/ Chavakachcheri Hindu College | Bio | 50 | 71 | 60.5 | 67 |
| 2921 | Palachandran Sankeethan | J/ Meesalai Veerasingam C.College | Bio | 58 | 63 | 60.5 | 67 |
| 2186 | Sajimeera Rajagopal | J/ Jaffna Hindu Ladies College | Bio | 61 | 59 | 60 | 71 |
| 2483 | Vivekanantham Ageeth | J/ Jaffna Hindu College | Bio | 60 | 60 | 60 | 71 |
| 2629 | Sutharsika Sivalingam | J/ Manipay Ladies College | Bio | 61 | 59 | 60 | 71 |
| 5306 | Dayani Sivakumar | J/ Vembadi Girls High School | Bio | 61 | 59 | 60 | 71 |
| 2628 | Ushanthiny Uthayakumar | J/ Manipay Ladies College | Bio | 63 | 56 | 59.5 | 75 |
| 2387 | Tharuka Janakan | J/ Vembadi Girls High School | Bio | 65 | 53 | 59 | 76 |
| 2546 | Thavamohan Arunthavan | J/ Jaffna Hindu College | Bio | 60 | 58 | 59 | 76 |
| 2624 | Maathangi Gobalakrushnan | J/ Jaffna College | Bio | 55 | 63 | 59 | 76 |
| 2058 | Tharurnarasa Tharanitharan | J/ Jaffna Hindu College | Bio | 44 | 73 | 58.5 | 79 |
| 2078 | Mogan Krishanth Fidel Castro | J/ Jaffna College | Bio | 56 | 61 | 58.5 | 79 |
| 2133 | Anusija Perijathampy | J/ Vaddu Hindu College | Bio | 66 | 50 | 58 | 81 |
| 2063 | Varatharajah Kajapavan | J/ Jaffna Hindu College | Bio | 60 | 55 | 57.5 | 82 |
| 2029 | Kunapala Vithusan | Mu/ Udaiyarkaddu Maha Vidyalayam | Bio | 59 | 55 | 57 | 83 |
| 2076 | Krushnamoorththy Jishakaran | J/ Puttur Sri Somaskanda College | Bio | 57 | 57 | 57 | 83 |
| 2591 | Sameena Jeyakumar | J/ Vembadi Girls High School | Bio | 63 | 51 | 57 | 83 |
| 2922 | Nagendraen Naveensangar | J/ Chavakachcheri Hindu College | Bio | 52 | 62 | 57 | 83 |
| 2243 | Sobitha Satgunarasa | J/ Vaddu Hindu College | Bio | 60 | 53 | 56.5 | 87 |
| 2220 | Sulogika Sivakumar | J/ Chavakachcheri Hindu College | Bio | 54 | 58 | 56 | 88 |
| 2235 | Kajalaxme Pushpakaran | J/ Vembadi Girls High School | Bio | 61 | 51 | 56 | 88 |
| 2339 | Tharsana Visuvasam | J/ Vembadi Girls High School | Bio | 65 | 47 | 56 | 88 |
| 2601 | Thamnika Thavarasa | J/ Vembadi Girls High School | Bio | 60 | 52 | 56 | 88 |
| 2375 | Pusparasa Charles | Mu/ Mullaithivu Maha Vidyalayam | Bio | 60 | 51 | 55.5 | 92 |
| 2408 | Geeththana Lingeswaran | J/ Vembadi Girls High School | Bio | 55 | 56 | 55.5 | 92 |
| 2610 | Tharshana Raveendran | J/ Jaffna Hindu Ladies College | Bio | 64 | 47 | 55.5 | 92 |
| 2168 | Reka Selvaratnam | J/ Jaffna Hindu Ladies College | Bio | 50 | 60 | 55 | 95 |
| 2356 | Mathuja Sivakaran | J/ Jaffna Hindu Ladies College | Bio | 57 | 53 | 55 | 95 |
| 2573 | Abirami Thiagarajah | J/ Vembadi Girls High School | Bio | 48 | 62 | 55 | 95 |
| 2902 | Viththaky. S | J/ Chavakachcheri Hindu College | Bio | 44 | 66 | 55 | 95 |
| 2904 | Anosooya Ratnasabapathy | J/ Chavakachcheri Hindu College | Bio | 43 | 67 | 55 | 95 |
| 2260 | Sajitha Sivapathasundaram | J/ Vembadi Girls High School | Bio | 47 | 62 | 54.5 | 100 |
| 2923 | Thangavadivel Vigishan | J/ Meesalai Veerasingam C.College | Bio | 42 | 67 | 54.5 | 100 |
| 2412 | Darshika Varatharasan | J/ Vembadi Girls High School | Bio | 61 | 47 | 54 | 102 |
| 2395 | Ajantha Balachanthiran | J/ Jaffna Hindu Ladies College | Bio | 48 | 59 | 53.5 | 103 |
| 2224 | Thulasini Sivagnanam | J/ Vembadi Girls High School | Bio | 73 | 33 | 53 | 105 |
| 2253 | Thennila Mathimaaran | J/ Vembadi Girls High School | Bio | 39 | 67 | 53 | 105 |
| 2268 | Priyanka Thavanesan | J/ Chandikuli Girls College | Bio | 61 | 45 | 53 | 105 |
| 2390 | Seshaki Vijayabaskar | J/ Mahayana College | Bio | 54 | 52 | 53 | 105 |
| 2061 | Thirukumaran Majooran | J/ Jaffna Hindu College | Bio | 49 | 56 | 52.5 | 109 |
| 2094 | Thanarakavi Ketheeswaran | J/ Vembadi Girls High School | Bio | 58 | 47 | 52.5 | 109 |
| 5308 | Hamshika Selvakumar | J/ Vembadi Girls High School | Bio | 62 | 43 | 52.5 | 109 |
| 2091 | Vigithra Rementhiran Amalan Sai | J/ Ilavalai Kanniyarmadam M.V | Bio | 51 | 53 | 52 | 112 |
| 2239 | Keerththana Sivapatham | J/ Chundikuli Girls College | Bio | 48 | 56 | 52 | 112 |
| 2251 | Abisajini Gnanachandran | J/ Vembadi Girls High School | Bio | 54 | 50 | 52 | 112 |
| 2512 | Vanththini Karunakaran | J/ Vembadi Girls High School | Bio | 46 | 57 | 51.5 | 115 |
| 2552 | Sriyathas Thuvarakan | J/ Kokuvil Hindu College | Bio | 46 | 57 | 51.5 | 115 |
| 2913 | Vijina Paskaran | J/ Varany Central College | Bio | 33 | 70 | 51.5 | 115 |
| 2005 | Varshika Ramkumar | J/ Vembadi Girls High School | Bio | 58 | 44 | 51 | 118 |
| 2399 | Vithushana Kumar | J/ Vembadi Girls High School | Bio | 49 | 53 | 51 | 118 |
| 2633 | Vyravanathan Senthalan | Kn/ Pallai Central College | Bio | 35 | 67 | 51 | 118 |
| 2003 | Thangarasa Krishanth | J/ Jaffna Hindu College | Bio | 50 | 51 | 50.5 | 121 |
| 2008 | Mahalingam Pavithran | Mu/ Puthukkudiyiruppu C. College | Bio | 52 | 49 | 50.5 | 121 |
| 2009 | Aruniya Kamalanathan | J/ Vembadi Girls High School | Bio | 52 | 49 | 50.5 | 121 |
| 2102 | Suganthini Sriskantharaja | J/ Jaffna Hindu Ladies College | Bio | 51 | 50 | 50.5 | 121 |
| 2281 | Janani Thevalingam | J/ Vembadi Girls High School | Bio | 49 | 52 | 50.5 | 121 |
| 2446 | Nishali Kasinathan | Mn/ Siththivinayagar Hindu College | Bio | 46 | 55 | 50.5 | 121 |
| 2478 | Srikamalanathan Jathusan | J/ Jaffna Central College | Bio | 49 | 52 | 50.5 | 121 |
| 2024 | Thanapalasingam Purusoth | Ki/ Kilinochchi Maha Vidyalayam | Bio | 47 | 53 | 50 | 128 |
| 2191 | Dhushiyanthiy Thanabalasingam | J/ Victoria College | Bio | 48 | 52 | 50 | 128 |
| 2283 | Nishanthika Paripooranan | J/ Vembadi Girls High School | Bio | 44 | 56 | 50 | 128 |
| 2694 | Aksaiya Srikumar | Mu/ Semmalai Maha Vidyalayam | Bio | 59 | 41 | 50 | 128 |
| 2915 | Piula Sivanesan | J/ Meesalai Veerasingam C. College | Bio | 47 | 53 | 50 | 128 |
| 5311 | Keerthana Kirupakaran | J/ Kokuvil Hindu College | Bio | 49 | 51 | 50 | 128 |

23.12.2016 சுபநேரம் காலை 6.25 இல் இருந்து அனுமதிகள் வழங்கப்படும். சுபநேரத்தில் வகுப்புக்கள் ஆரம்பமாகி பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.

**New Science World**

Physics: **R. Kumaran, R.Kugan** | Chemistry: **Dias, T. Sivakumar** (C-6825)

New Science World


NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

**New Science World**

**T.P: 077 336 4055**

**2019 A/L**
**கணித, உயிரியல் பிரிவு**

**தமிழ்மொழி மூலம்**

**பௌதிகவியல்**
திரு. R. குமரன் M.Sc
திரு. R. குகன் B.Sc

**இரசாயனவியல்**
திரு. டயஸ் B.Sc (Hons), Spl.in chem
திரு. K.T. சிவகுமார் B.Sc, PGDE

**உயிரியல்**
திரு. S. பொன் திவாகரன் B.Sc (Hons)
திரு. V. உமாசங்கர் B.Sc, PGDE
திரு. T. கஜேந்திரன்

**இணைந்த கணிதம்**
திரு. S. செந்தில்ராஜ் B.Sc, PGDE

**English Medium**

**Physics**
Mr. R.Kumaran M.Sc

**Chemistry**
Mr. Dias B.Sc (Hons) Spl.in che.

**Biology**
Mr. V. Umashanger B.Sc, PGDE
Mr. T. Kajenthiran

**Com.Maths**
Mr. T. Shanjeevan B.Sc (Hons), Dip. in English (Lecturer in University)

ஆரம்பம்
**23.12.2016**
**New Science World**
பிறவுண் றோட்,
நாவலர் றோட் சந்தி.

# முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பெற விரும்பும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான விண்ணப்பம் கோரல்



## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்:-

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது. அதன் பிரகாரம் முதற்கட்டமாக உடனடியாக பத்தாயிரம் (10,000) **முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை** மிகவிரைவில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள், உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் இவ்வீடுகளுக்கு 30 வருடகால உத்தரவாதத்தை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதுடன், குறைந்தபட்சம் 60-70 வருடகால பயன்பாட்டுக்குரியதென்றும் இந் நிறுவனத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-

- சூரியக்கல மின்சார வசதி
- குழாய் நீர்க்கிணறு
- சமையல் எரிவாயு அடுப்பு – சமையலறை அலுமாரி (Pantry Cupboard)
- மின்விசிறி – 03
- இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரத்தைப் பெறுவதற்கான கம்பிகளை (wiring) வீட்டில் பொருத்துதல்.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம்,
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படும் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வீடுகளைப் பெற விரும்புவோர் இந்த விளம்பரத்தில் இருக்கும் விண்ணப்பப்படிவத்தையோ அல்லது உங்கள் பிரதேச செயலகத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்தையோ பூர்த்திசெய்து 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட கிராம அலுவலரின் அத்தாட்சியுடனும், பிரதேச செயலாளரின் ஒப்பத்துடனும் உங்கள் பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பித்து உறுதிச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். அந்த விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.





## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. குடும்பத் தலைவரின் முழுப் பெயர் : ..........................................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................
3. தற்போதைய முகவரி : ..........................................
4. கிராம அலுவலர் பிரிவு : ..........................................
5. பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................
6. நிரந்தர முகவரியும் வதிவிட முகவரியும் : ..........................................
7. குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை : ..........................................
8. காணி தொடர்பான விபரம்
   - 8.1. காணி அமைந்துள்ள முகவரி : ..........................................
   - 8.2. கிராம அலுவலர் பிரிவு : ..........................................
   - 8.3. பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................
   - 8.4. உடனடியாக வீடமைக்கும் நிலையில் அக்காணி உள்ளதா? : ஆம் / இல்லை
   - 8.5. நீங்கள் வசிக்கும் காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டைக்கட்டுவதற்கு அனுமதியை அளிக்கின்றீர்களா? : ஆம் / இல்லை

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துவதோடு மேற்படி வீட்டுத்திட்டத்தின் கீழ் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு எனது பூரண சம்மதத்தினையும் என்னால் மேலே குறிப்பிடப்பட்ட காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு எனது பூரண சம்மதத்தினையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................................
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல்

விண்ணப்பதாரியினால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் அத்தாட்சிப்படுத்துவதுடன் இக்குடும்பம் உள்ளக இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் என்றும் இக்குடும்பத்திற்கு முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை வழங்குவது உகந்ததென்றும் சிபார்சு செய்கின்றேன்.

.............................. ..............................................
திகதி கிராம அலுவலரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தல்

சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

.............................. ..............................................
திகதி பிரதேச செயலாளரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

செயலாளர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
இல.356 B, காலி வீதி
கொழும்பு-03.






சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 22 ஆம் ஆண்டு கலைவிழாவில் மாணவர்களது கலை நிகழ்வையும் மாணவர்கள் நிலைய ஸ்தாபகர் கு.மகாலிங்கத்தினால் கௌரவிக்கப்படுவதையும் பங்கு பற்றியவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகம் ஆகியவற்றின் செலவீன தலைப்புகளுக்கு வடக்கு மாகாண சபை அங்கீகாரமளித்துள்ளது. வடக்கு மாகாண சபையின் 70 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது முதலமைச்சர் அமைச்சின் வரவு-செலவுத் திட்டத்தை முதலமைச்சர் முன்மொழிந்தார், இதேபோன்று பிரதம செயலக அலுவலக செலவீன தலைப்புக்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவை இரண்டும் உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டன. இதில் முதலமைச்சர் அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 2430.611 மில்லியன், மூலதன செலவீனமாக 301.5 மில்லியனும், பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு மீண்டுவரும் செலவீனமாக 872.78 மில்லியனும் மூலதன செலவீனமாக 393.38 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் அமைச்சில் பல்வேறு புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதோடு, சுகாதாரத் துறைக்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் முதலமைச்சர் அமைச்சிற்கு கீழ் வரும் துறைகளான புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகாரம் என்பவற்றுக்கான நிதி இம்முறை ஒதுக்கப்படவில்லை. இவற்றுக்கான திணைக்களங்கள் உருவாக்கப்படாமையே நிதி ஒதுக்கப்படாமைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

# தமிழ் மக்கள் திருப்திப்படும் அரசியல் யாப்பு வெளிவரப் போவதில்லை-சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் திருப்திப்படும் அரசியல் யாப்பு வெளிவரப்போவதில்லை என வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். வடமாகாண சபையின் 70ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையில் அவைத தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. அவைத தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தினால் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையாக, இலங்கைஜனநாயகசோசலிச குடியரசின் அரசியலமைப்பு மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் ஆகியவற்றில் காணப்படும் பதவி பெயர்கள் பொருத்தமற்றவையாக காணப்படுவதால் அவற்றை பின்வருமாறு மற்றம் செய்ய வேண்டும் எனவும் இத்தகைய பதவி பெயர்கள் காணப்படும் ஏனைய சட்டங்களிலும், விதிகளிலும் இந்த மாற்றங்கள் இடம்பெறுவதற்கான சட்ட திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது.

இந்த பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியின் அதிகாரத்தின் ஊடாக ஆளுநர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால், ஆளுநர்களே இருக்கக் கூடாது என தெரிவிக்கின்றோம். அந்த வகையில், மத்திய மாகாண ஆளுநருக்கும் எமக்கும் இடையில் வானொலி ஒன்றில் கருத்து தெரிவிக்கும் முகமாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அந்த கலந்துரையாடலின போது, மத்தியமாகாண ஆளுநரின் கருத்துக்களை பார்க்கும் போது, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் யாப்பு எந்தக்காலத்திலும் வெளிவரப்போவதில்லை என்றும் தமிழ் மக்களின் சம்மதம் அந்த அரசியல் யாப்பிற்குள் இருக்காது. மேலும் குறித்த பிரேரணையில் 1987 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் திருத்தத்தை கோருவதாக அமைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவருவதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. இவ்வாறான நிலையில் இப்படியான பிரேரணை ஒன்று அவசியமற்றது.

எனினும் அவைத்தலைவர் இப்போது இருக்கும் அரசியலமைப்பில் திருத்தம் ஒன்றை ஏற்படுத்துமாறு பிரேரணை ஒன்றை கொண்டுவந்துள்ளார். எல்லாமே தெரிகின்றது, பழைய அரசியலமைப்பை தான் தூசி தட்டி எமக்கு தரப்போகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அவைத்தலைவர், குறித்த பிரேரணையை கொண்டுவருவதற்கான உரிமை தமக்கு உண்டு எனவும் குறித்த தவறுகளை சுட்டிக் காட்ட வேண்டிய பொறுப்பு தமக்கு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-4)




# போட்டி முடிவுகள்

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட "பண்பாட்டு விழுமியங்களை காப்போம்"

கட்டுரைப் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு யே.பமினா கிறிஸ்ரியன்-(மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு), 2 ஆம் பரிசு செ.டிலக்ஷனா-(8 ஆம் வட்டாரம், மண்டைதீவு), 3 ஆம் பரிசு- ஜோ.லிண்டா- உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்)

பாராட்டுப் பெறுவோர்

அன்ரன் யோகதாஸ்-(யா/அம்பன் அமெரிக்க மிஷன் செம்பியன்பற்று வடக்கு, தாழையடி), பத்மசேனன் பாலசுதன் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம், பல்வராயன்கட்டு, முழங்காவில்), எஸ்.அறோட் (புனித கிளாரட் குருமடம், நீர்கொழும்பு), அ.டினேஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்), மேரி அபிஷா அன்ரன் அருள்ராஜ் (யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம், நெடுந்தீவு), வானதி செங்கதிர் செல்வன் (யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சிவபாலு வேனுஜா (யா/பரு.மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை). (இ)

# ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் நாளை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, "இலக்கை அடைய மறு பிறப்பெடுத்துத் தவம் செய்ய வேண்டும்" எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை நிகழ்த்தப்படவுள்ளது. (இ-10)

# கேள்வி கோரல் குழு ஒன்றை வடக்கில் அமைக்க வேண்டும்

உறுப்பினர்கள் கோரிக்கை

வடக்கு மாகாணத்திற்கென கேள்வி கோரல் குழு ஒன்றை அமைக்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். வடக்கு மாகாண சபையின் எழுபதாவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது கருத்து தெரிவித்த சுகிர்தன், கடந்த வரவு -செலவுத் திட்டத்தின் போதும் வலியுறுத்தியிருந்தேன்.

வடக்கு மாகாணத்திற்கு பொதுவான கேள்வி கோரல் நடைமுறை இருக்க வேண்டும். கேள்வி கோரலில் முறைகேடு ஊழல் இருப்பதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனை பிரதம செயலாளரின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு அமைச்சுக்களும் தமக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கடந்த ஆண்டு தெரிவு செய்யும் போது ஒவ்வொரு விதமாகச் செயற்பட்டனர். அவ்வாறு இருக்கக் கூடாது' என்று ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் வலியுறுத்தினார்.

ஆளும் கட்சி உறுப்பினர் இ.இந்திரராசா, ஒரே மாவட்டத்தில் ஒரே பொருளை இரு வேறு திணைக்களங்கள் இரு வேறு விலைக்கு - அதுவும் மிகப் பெரிய வித்தியாசத்தில் கொள்வனவு செய்துள்ளனர் என்று குற்றம் சுமத்தினார். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் முதலமைச்சர், அவைத் தலைவர் உள்ளிட்டோருக்கு கடந்த காலத்தில் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் இல்லை என்று குறைபட்டுக் கொண்டார் ஆளும் கட்சி உறுப்பினரான ம.தியாகராசா.

நாம் வாழ்வாதார உதவிக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றோம். சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பயனாளிகளை கடைக்கு நேரில் அழைத்துச் சென்று, உங்களுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் விரும்பியதை எடுங்கள் என்று சொல்கின்றார்கள். இது சரியான நடவடிக்கை அல்ல' என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் குற்றச்சாட்டை முன்வைத்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன், மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுக் குழு இருப்பதைப் போன்று மாகாண விலைக் கட்டுப்பாட்டுக் குழு இருக்க வேண்டும். இதன் மூலம் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்றார்.

மாகாணத்துக்கான கேள்வி கோரல் குழுவை உருவாக்குமாறு இரண்டு ஆண்டுக்கு முன்னர் கேட்டேன். இதுவரை நடவடிக்கை இல்லை. மேலும் நாம் ஒதுக்கீடு செய்யும் நிதியில் யாழ்ப்பாணத்தில் பொருட்களை வாங்கி வவுனியாப் பயனாளிக்கு விநியோகிக்கின்றனர். எமது மாவட்டத்திலும் வர்த்தக நிலையங்கள் இருக்கின்றன. அங்குள்ள வர்த்தகர்கள இதனை எம்மிடம் கேட்கின்றனர்.

எனவே அந்தந்த மாவட்டங்களிலேயே பொருள் கொள்வனவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று வவுனியா மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார். (இ-4)






யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகம் மற்றும் 51 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வருடாந்த நத்தார் தினமும் கரோல் நிகழ்வும் கடந்த 19 ஆம் திகதி இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணம் சந்தன மாதா தேவாலயத்தில் இடம்பெற்றது. (படங்கள்:-பொ.ஷோபிகா)

# கருணாநிதி நலம் பெறவேண்டும் இலங்கை ஜனாதிபதி வாழ்த்து



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணா நிதி நலம் பெறவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துச்செய்தியை அனுப்பியுள் ளார்.

கருணாநிதி, சுகயீனம் காரணமாக சென்னை காவேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தநிலையில் அங்கு விஜயம் செய்த ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், தாம் இலங்கை ஜனாதி பதியினதும் மக்களினதும் வாழ்த்துச்செய்தியை எடுத்து வந்துள்ளதாக குறிப்பிட்டதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (இ-3-10)

# ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவு உத்தியோகத்தர் படுகொலை

## சி.சி.ரி.வி.காட்சிகள் கிடைத்தன

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு பிரதானியான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்கவின் சாரதியின் படுகொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் தொடர்பிலான சி.சி.ரி.வி. காட்சிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள் ளன. குறித்த சந்தேகநபர் கொலை நடந்த தினத்தில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் காட்சி அருகில் இருந்த வியா பார நிலையமொன்றின் சி.சி.ரி.வி யில் பதிவாகியுள்ளதாக பொல ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் முகமூடி தலைக்கவசம் அணிந்திருந்ததனால், அவரை அடையாளம்காணும் பணியில் பொலிஸார் தீவிர நடவடிக்கை முன்னெடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது. குறித்த நபர் தான் பயணித்த மோட்டார் சைக் கிளை மின்னேரிய குளத்தில் போட்டு விட்டுச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் அவ்விடத்தால் வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-3-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 10 1932



மறைவு 24 11 2016

எமது அன்புத் தெய்வம்

### அமரர் திருமதி சின்னத்துரை-புவனேஸ்வரி(புவனம்)

கடந்த 24.11.2016 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புத் தெய்வமாகிய அமரர் திருமதி சின்னத்துரை புவனேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 22.12.2016 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 24.12.2016 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் புதல்வர்களில் ஒருவரான சின்னத்துரை வேதவனம் "நிருபவனம்" (பண்டாரவன்னியன் சிலையடி கற்சிலைமடு) அவர்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தாயாரின் மரணச் செய்தியை எல்லோருக்கும் உடனடியாக தெரிவிக்க முடியாமல் போனதையிட்டு மனம் வருந்துகின்றோம். எனவே அன்றைய தினம் வரத்தவறியவர்களும் தயவு கூர்ந்து இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குலவிளக்காகிய எமது தாயாரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் குறிப்பாக இவ்வேளையில் அனைத்து உதவிகளும் எமக்குப் புரிந்துதவிய ஒட்டுசுட்டான் ப.தெ.வ.அ.கூ.சங்க தலைவர், செயலாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்களுக்கும் மற்றும் தொடர்ந்து உணவு, சிற்றுண்டி, தேநீர் வழங்கியவர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


பண்டாரவன்னியன்
சிலையடி,
"நிருபவனம்"
கற்சிலைமடு
ஒட்டுசுட்டான்.

(குடும்பத்தினர் சார்பாக)
சி.வேதவனம் (பாலு) (மகன்) பொது முகாமையாளர் முல்/மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாஜம் புதுக்குடியிருப்பு (077 678 7338)
சி.அமிர்தலிங்கம் (சன்னதி) (மகன்) கிளை/முகாமையாளர் ஒட்டுசுட்டான் ப.தெ.வ.அ.கூ.சங்கம் கற்சிலைமடு (077 530 3255)
சி.சாந்தலிங்கம் (லிங்கம்) (மகன்) 3ஆம் வட்டாரம் முள்ளியவளை.

(6275)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 04 1940



மறைவு 22 11 2016

### திரு. வேலுப்பிள்ளை சோமசேகரம்

ஆண்பிள்ளை பிறந்த போது அகம் மகிழ்ந்த நீரோ அவர்களின்
அநியாய இறப்பதனைத் தாங்காது ஆண்டவனடி சேர்ந்தீரோ!
உம் மனதறிந்த மனைவியோ மதிகெட்டு உள்ளமது நொந்து
உருக்குலைய தந்தையாம் தசரதன் போன்றல்லவோ
தாங்காத புத்திர சோகத்தால் நீர் இறந்தீர்
விண்ணுலகம் சென்றிட்ட உம் பிள்ளைகளைக்காண
விருப்புடனே இறை அடிதான் சேர்ந்தீரோ! உங்கள் ஆத்மா சாந்தி
வெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7100)

## இராசி பலன்

22.12.2016
(மார்கழி 07, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
நவமி பின்னிரவு 1.43 மணிவரை
அத்தம் முன்னிரவு 10.13 மணிவரை
சுபநேரம் 7.55-9.25 மணிவரை
இராகுகாலம் 1.55-3.25 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி, உத்திரட்டாதி | | |
| சுக் | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு சந் |

**மீனம்** சிறப்பாக பணிகளைச் செய்து பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.

**மேடம்** கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் உறுதுணை புரிவர்.

**இடபம்** எதிர்காலத்திற்கான முக்கிய திட்டங்களை தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தாய்வழி உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கடகம்** வெற்றி வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** பகையொன்று நட்பாகலாம், செய்யும் காரியங்களில் உங்களின் திறமை மேம்படும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு** உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர், தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** உள்ளம் மகிழும் வகையில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**துலாம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழக்கமான பணியை இன்று மாற்றியமைப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் கூடும்.

**கன்னி** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினர் மனம் கோணாமல் நடந்து கொள்வது நல்லது.

'செட்டிகுளம் மக்களின் பொருளாதாரத்தில் கவனம் செலுத்து'

# கேள்வி கோரலை மாவட்ட ரீதியில் கோராது செட்டிகுளத்தில் கோர வேண்டும்




வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையினால் நெல்சிப் திட்டத்தில் அமைக்கப்பட்ட சந்தை கட்டடத்தொகுதியை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரலை மாவட்ட ரீதியில் கோராது செட்டிகுளம் பிர தேசத்தில் கோரவேண்டும் என தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில்நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட சந்தை கட்டடத்தொகுதி வளாகத்தில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளூர் வியாபாரிகளின் வயிற்றில் அடிக்காதே, உள்ளூர் பொருளாதாரத்தை அதிகரி, செட்டிகுளம் பிரதேச அதிகாரிகளே செட்டிகுளம் மக்களின் பொருளாதாரத்தில் கவனம் செலுத்து ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப. சத்தியசீலன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என கொடுத்த உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. இதே வேளை பிரதேச சபை யின் செயலாளரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. (2-15-250)

# பதிவாளர் அலுவலகக்கட்டடம் வவுனியாவில் நேற்று திறப்பு

வவுனியா மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கான அலுவலகத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர குணவர்த்தன திறந்து வைத்துள்ளார். குறித்த அலுவலகம் நேற்று பதன்கிழமை காலை 9.30 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய கட்டடம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதன் மூலம் மாவட்டத்தின் பிறப்பு, திருமணம், இறப்பு, காணி ஆகியவற்றின் செயற்பாடுகள் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் இனி வரும் காலங்களில் தங்களிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் காலதாமதம் இன்றி பெற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களானசிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸ்தான், அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, அரச அதிகாரிகள்எனப்பலரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15-250)




# கட்டுவலைகளை கடலில் இருந்து அகற்றுவதற்கு முயன்றமைக்கு எதிராக மக்கள் திரண்டு வீதி மறியல்





(மல்லாவி)

மன்னார் - பனங் கட்டிக்கொட்டு கிராம மக்கள் அணிதிரண்டு வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை, 6.15.மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

குறித்த கிராம மக்கள் தென் கடல் பகுதியில் கட்டுவலைத் தொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் மீனவர்களின் கட்டுவலைகளை கடலில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மன்னார் கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் மேற் கொண்டதை அடுத்தே, எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர.

மன்னார் பிரதான பால வீதியில் ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனால் நேற்றுக் காலை 6.15 மணி முதல் மன்னாரில் இருந்து வெளி மாவட்டத்திற்கு செல்லும் அனைத்து போக்குவரத்துச் சேவைகளும் பாதிப்படைந்துள்ளன.

இதன்போது மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஆயினும் உரிய அதிகாரிகள் இந்த இடத்திற்கு வந்து தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தென் கடல் பகுதியில் உள்ள கட்டுவலைகளை அகற்ற மாட்டோம் என உறுதிமொழி வழங்க வேண்டும் என கோரிக்கையை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விடுத்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் ஆகியோர் மீனவர்களுடன் கலந்துரையாடி வழங்கிய வாக்குறுதிக்கமைய மக்கள் தமது போராட்டத்தை கைவிட்டுக் கலைந்து சென்றனர். (2-15)

வன்னி வலம்

# வேலையில்லாப் பிரச்சினையை அரசு தீர்க்க முன்வரவேண்டும்

## நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுங்கள்

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினை என்பது பெரிய பிரச்சினையாகவுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் அதனை தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது, எமது மாவட்டத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை தீர்த்து அபிவிருத்தி நோக்கி பல வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. அது பற்றி நாங்கள் பாராளுமன்றத்திலும் பல தடவை கூறியிருக்கின்றோம். குறிப்பாக வடக்கு, கிழக்கைப் பொறுத்த வரை வேலையில்லாப் பிரச்சினை என்பது பெரியதொன்றாகும். இன்று நாடு முழுவதும் உள்ள ஒரு பொதுவான பிரச்சினையாக இது இருந்தாலும், வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் இங்கு இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு முடிந்தளவிற்கு வேலைவாய்ப்பை பெறும் வகையில் இங்குள்ள சிற்றூழியர் நியமனம் உட்பட ஏனைய நியமனங்களை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சைக் கேட்டுக் கொள்கின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறுகின்ற அபிவிருத்திப் பணிகளில் மத்திய அரசாங்கமும் நாங்களும் இணைந்து அபிவிருத்தி வேலைகளை செய்ய வேண்டும் என்பது உட்பட பல விடயங்களை செய்வதாக பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்து ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார். ஆகவே, இந்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு சிரேஷ்ட அமைச்சர் என்ற ரீதியில் 'அவரும் அந்தக் கூட்டத்தில் ஒரு முக்கியமானவராக இருந்தார்.

எனவே, எங்களுடைய பிரதேசத்தில் இருக்கின்ற வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அவர் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (2-250)




யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதியின்றி காணப்படும் கொக்கிளாய் பிரதேசத்தில் உள்ள அ.த.க. பாடசாலை மாணவர்கள் 50 பேருக்கு வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் துணை தவிசாளர் சஜீவனால் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கனடா வாழ் அன்பரினால் ஜேர்மனியில் உள்ள கையில் புறோன் கந்தசுவாமி கோவிலூடாக அனுப்பிய நிதி உதவியில் இருந்து இப்பிரதேச கிராம சேவையாளரின் வேண்டுகோளுக்கிணங்க இப் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையிலான 50 மாணவர்களு க்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:- பொ.சோபிகர்)

# போதைப்பொருள் பாவனையால் குடும்ப வன்முறைகள் அதிகம்

## மதுசாரத்திற்கு எதிரான இளைஞர் அணித் தலைவர் தெரிவிப்பு

போதைப்பொருள் பாவனை காரணமாக அதிகளவான குடும்ப வன்முறைகள் இடம்பெறுகின்றன என மதுசாரத்திற்கெதிரான இளைஞர் அணியின் தலைவர் ரி.பிறேம்ராஜ் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் கட்டளைகளுக்கு அமைவாக சமுதாயம்சார் சீர்திருத்த திணைக் களத்தினால் சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தப் படுவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப்பணிப்பாளர் செ.ஜோறொசாந் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வளவாளராக கலந்துகொண்ட ரி.பிறேம்ராஜ் கூறுகையில், அதிகளவான குடும்ப வன்முறைகளுக்கு மூலகாரணிகளாக மது பாவனை காணப்படுகின்றது. மது பாவனையானது பலரது உயிர்களைக்கொல்லுகின்ற அதே வேளை மேலும் புதியவர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்குகின்றது.எனவே இது தொடர்பில் நாங்கள் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்தப்போதைப்பொருள் பாவனையென்பது எங்களைச் சூழவுள்ள சமூகத்தில் இருந்து இல்லாதொழிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்கள் எல்லோரிடத்திலும் உள்ளது.

எனவே இதில் நாங்கள் விழிப்பாக இருந்து இந்த சமூகத்தை பாதுகாக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (2-15)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பாரதிபுரம் வைஎம்சிஏ வீதிப்பகுதியில் ஆயிரத்து 850 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் வைஎம்சிஏ வீதிப்பகுதியில் கடந்த 19 ஆம் திகதி ஆயிரத்து 850 மில்லிக்கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

---

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் 11 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு இருபத்தி ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் 11 போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கடந்த 19 ஆம் திகதி கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இருபத்தி ஐயாயிரம் ரூபா ஆபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

---

கிளிநொச்சி பூநகரி வெட்டுக்காடுப்பகுதியில் இரண்டு கிலோ ஆமை இறைச்சி வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி வெட்டுக்காடு பகுதியில் இரண்டு கிலோ ஆமை இறைச்சி வைத்திருந்த ஒருவரை கைது செய்த பூநகரிப் பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கல்லாறு கிராமத்தில் ஆற்றுமணல் ஏற்றி பயணித்த உழவு இயந்திரங்கள் மாட்டின

## தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் நீதிமன்றில் இன்று ஆஜர்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் கிராமத்தில் அனுமதிப்பத்திற்கு முரணான வகையில் ஆற்றுமணல் ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு எட்டு மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரின் விசேட சுற்றி வளைப்பின் போதே அனுமதிப்பத்திரத்திற்கு முரணாக ஆற்று மணலை எடுத்துச் சென்ற உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் சம்பவத்தின் போது, கைதான சந்தேகநபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் இன்று வியாழக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்கள் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மாணவி தீ மூட்டி தற்கொலை

(பரந்தன்)

கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் பகுதியில் 17 வயது மாணவி ஒருவர் தீ மூட்டி தற்கொலை செய்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30இற்கும் நான்கு மணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது என உறவினர்கள் தெரி விக்கின்றனர். தனக்குத்தானே தீ மூட்டியுள்ளதாகவும், சம்பவ இடத்திலேயே மாணவி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




கனகாம்பிகைக்குளத்தைச் சேர்ந்த (வயது- 17) மாணவியே இவ்வாறு உயிரை மாய்த்தவராவார். குறித்த மாணவியின் தந்தை இறுதி யுத்த காலத்தில் இறந்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-312-15)




# தொழிற்பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு உபகரணங்கள்



சமூக சேவைகள் திணைக்களம ஊடாக தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் திணைக்களம் ஊடாக தொழிற்பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் தவவேந்திரன் தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு சமூக சேவைகள் திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காவேரிக்காலமன்ற பணிப்பாளர் வணபிதா. ஜோசுவா கலந்து கொண்டு சிறப்பித்தார். வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைகளத்தின் நிதிப்பங்களிப்புடன் சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக வீட்டு மின்னிணைப்பு, வாகனத்திருத்துநர் மற்றும் தையல் பயிற்சி நெறிகளை பெற்றவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தொழிற்பயிற்சி உத்தியோகத்தர் ரமேஸ், மாற்றுவலுடையோர் சங்கத்தலைவர் நேசன், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# முல்லையில் காந்தி சிலை அமைக்க முயல்வது ஏன்?

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கேள்வி

(பரந்தன்)

பிரதேச சபையின் அனுமதியில்லாமல் முல்லைத்தீவு நகரில் காந்தி சிலை அமைக்கப்படுவது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரிலே பண்டாரவன்னியன் சிலையை அமைப்பதற்கு ஒன்றரை வருடங்களாக சட்டரீதியான அனுமதிகள் பெற்று அதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவர் பிரதேச சபையின் அனுமதிகள் பெறாமல் இரவோடிரவாக காந்திக்கு சிலை அமைப்பது பொருத்தமற்றது. ஏனெனில் அகிம்சையினைப் போதித்த காந்திக்கு முல்லைத்தீவில் சிலை அமைப்பதன் அவசியம் என்ன? முல்லைத்தீவிற்கு காந்தி என்ன செய்தார்? எனவும் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

அகிம்சை ரீதியாக போராடிய தியாகி திலீபன், திலீபனுடன் முல்லைத்தீவில் உண்ணாவிரதமிருந்து ஆபத்தான நிலையில் காப்பற்றப்பட்ட திருச்செல்வம் ஆகியோருக்கு சிலை அமைப்பதை விடுத்து காந்திக்கு சிலை அமைப்பதன் அவசியம் என்ன? அது கூட பிரதேச சபையின் அனுமதி பெறாமல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் ஒருவரே சிலை வைக்க முயல்வது பிழையான விடயம். அனுமதியற்ற முறையில் புத்தர் சிலைகளை வைக்கும் பிக்குகளுக்கும் எம்மவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் உள்ளது எனவும் அவர் கேட்டார்.

இதேவேளை முல்லைத்தீவு நகரில் அமைக்கப்படும் காந்தி சிலைக்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லை என கரைதுறைப்பற்றின் பிரதேச சபையின் செயலாளர் கூட்டத்தில் தெரிவித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நிதி மூலகங்கள் கிடைத்தாலும் எல்லாவற்றிற்கும் அனுமதிகள் பெறப்பட வேண்டுமெனத் தெரிவித்தார். முல்லைத்தீவில் ஆங்கிலேயக் கோட்டையினைத் தகர்த்தெறிந்து பீரங்கிகளையும் கைப்பற்றிய மாவீரன் பண்டாரவன்னியனுக்கு சிலை அமைப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில் பிரதேச சபையின் அனுமதி கூடப் பெறாமல் முல்லைத்தீவு நகரில் அகிம்சைவாதி காந்திக்கு இரவிரவாக சிலை அமைக்கப்பட்டுள்ளது என ரவிகரன் தெரிவித்தார். (2-312)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2016–13.01.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



***சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று விரும்பும் கும்ப ராசி நேயர்களே!***

உங்களின் மார்க்ழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் தைரியகாரகன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே தைரியமும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு அதிகரிக்கும். தன்னிச்சையாகச் செயற்பட்டு சில காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முக்கிய புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர்.

சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே தொழிலில் எதிர்பார்த்த அளவிற்கு இலாபத்தைக் கொடுக்கப் போகிறார். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, வாங்கவேண்டியதை வாங்க வேண்டுமென்ற கவலை இனி அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.

அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் அடிக்கடி உடல்நிலைத் தொல்லைகள் உருவாகலாம். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்ளுங்கள். குருவின் பரிபூரண பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ள முன் வருவீர்கள். ஆதாயம் தரும் தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். மாமன், மைத்துநர் வழி ஒத்துழைப்போடு சேமிப்பு உயரும்.

சப்தமாதிபதி சூரியன் இலாப ஸ்தானத்தில் புதனோடு இணைந்திருக்கிறார். புதன் உங்கள் ராசியைப் பொறுத்தவரை பஞ்சம அஷ்டமாதிபதியாவார். எனவே அந்த புதன் வக்ரம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு யோகம் தான். பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டும் நீங்கள் எடுத்த முயற்சிகளில் அநுகூலம் கிடைக்கும். மங்கள ஓசை மனையில் கேட்க உறவினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும்.


சந்திர பலம் நன்றாக இருப்பதாலும், சூரிய பலம் இலாப ஸ்தானத்தில் இருப்பதாலும் அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். இம்மாதம் வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும். ஆனைமுகப் பெருமான் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் மேற்

## வழிபாட்டால் வளர்ச்சி கூடும்!

கொள்வது நல்லது. ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தில் இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களையும் செய்வது உகந்தது. ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப்பெருமானை வழிபட்டு வாருங்கள். அனைத்து நலன்களும் வந்துசேரும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 19ஆம் திகதி விருச்சிக ராசிக்கு புதன் செல்கிறார். வக்ர இயக்கத்தில் புதன் செல்லும் பொழுது தொழில் மாற்றுச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் செய்ய முன்வருவர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மாமன், மைத்துநர் வழியில் மங்கள நிகழ்ச்சி நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். அதிகாரிகளால் அநுகூலம் கிடைக்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவர்.




பூர்வீகச் சொத்துகளை விற்பதில் இருந்த தகராறுகள் அகலும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் ராசியிலேயே சுகாதிபதி சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சீராகும். அனைத்து காரியங்களிலும் அநுகூலம் கிடைக்கும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும். இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். தந்தை வழியில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். உத்தியோகத்தில் பணிநிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். பல பணிகள் பாதியில் நிற்கிறதே என்ற கவலை இனி அகலப் போகிறது. திடீர் தன லாபம் உண்டு.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம் திகதி தனுசு ராசிக்கு, புதன் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதி 11இல் சஞ்சரிக்கும் பொழுது, வரவு, செலவும் சமமாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவிற்கு வரும். பல முறை பஞ்சாயத்துகள் வைத்தும், காரியம் கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சி காண்பர். சூரிய பலத்தின் விளைவாக அரசியல்வாதிகளுக்கு நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

இம்மாதம் ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வளர்ச்சி கூடும் மாதமாகக் கருதலாம். குரு அஷ்டமத்தில் சஞ்சரித்து தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் தேவைக்கேற்ற பணம் வந்துகொண்டே இருக்கும். பயணங்களால் பலன் உண்டு. ஜென்மத்தில் செவ்வாய் இருப்பதால் ஒரு சில சமயங்களில் முன் கோபம் அதிகரிக்கலாம். முன் கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்லவும். வீடு மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் உன்னத உயர்வு காண்பர். சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். நடராஜர் தரிசனம் நன்மையை தரும்.



***எதிர்காலம் இனிமையாக யோசித்துச் செயற்படும் மீனராசி நேயர்களே!***

உங்களது மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து ராசியைப் பார்க்கிறார். எனவே பார்க்கும் குருவால் பலன்கள் அதிகமாகவே கிடைக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும். காரியத் தாமதங்கள் அகலும். பொருளாதார நிலை உயரும். புதிய திருப்பங்கள் பலவும் காணப் போகிறீர்கள். வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வழிபிறக்கும்.

மாதத் தொடக்கத்தில் 6இல் ராகு நின்று குரு கேந்திரத்தில் இருக்கிறார். எனவே அஷ்டலட்சுமி யோகம் செயற்படப் போகிறது. 8 லட்சுமிகளும் இல்லம் தேடிவந்து அருள் வழங்கப் போகும் இந்த நேரத்தில், வங்கிச் சேமிப்பு உயரும். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். தங்கு தடைகள் தானாக விலகும். மங்கள ஓசையும், மழலையின் ஓசையும் மனையில் கேட்க வழிபிறக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். உடன்பிறப்புகள் உங்கள் கரத்தை வலுப்படுத்துவர். கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும்.

சனி 9 இல் சஞ்சரிப்பது ஒரு வகைக்கு நன்மைதான். உங்கள் ராசிக்கு 11,12 இற்கு அதிபதியானவர் சனி பகவான். இலாபாதிபதியான சனி 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பெற்றோர் வழியில் பிரியம் கூடும். அவர்கள் மூலமாக புதிய தொழிலுக்கு மூலதனம் கிடைக்கலாம். செய்யும் தொழிலை விரிவுபடுத்திப் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள முன்வருவீர்கள். ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர். அதிகாரப் பதவியில் உள்ளவர்களால் அநுகூலம் கிடைக்கும்.

12இல் ராகு இருப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆலய வழிபாட்டில் அக்கறை செலுத்துவீர்கள். திருப்பணிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பொதுவாக இம்மாதம் வியாழக்கிழமை

## குழப்பங்கள் அகலும்!

தோறும் விரதம் இருந்து குருபகவானை வழிபடுவது நல்லது. தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் வண்ணத்தில் வஸ்திரம் அணிவித்து வந்தால், நெஞ்சம் மகிழும் சம்பவம் நிறையவே நடைபெறும்.

குறிப்பாக இம்மாதம் இறைவன் படியளக்கும் திருநாள் வருவதால், அன்றைய தினம் சிவாலயம் சென்று சிவபிரானையும், உமாதேவியையும் வழிபட்டு வருவது நல்லது. ஆருத்ரா தரிசன நாளில் நடராஜப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். நலம் யாவும் வீடு வந்து சேரும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசிக்கு டிசெம்பர் 19ஆம் திகதி வக்ர இயக்கத்தில் புதன் செல்கிறார். இதன் விளைவாக மாற்றங்களும், நல்ல ஏற்றங்களும் வந்து சேரப் போகின்றது. 4,7இற்கு அதிபதியான புதன் 9இல் சஞ்சரிக்கும் பொழுது, பெற்றோர் வழியில் இருந்த




பிரச்சினைகள் அகலும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். ஒரு சிலருக்கு கடல் தாண்டும் முயற்சி வெற்றிபெறும். வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கவேண்டும். எண்ணியவர்களுக்கு, பணிபுரியும் இடத்திலிருந்து அனுப்பி வைப்பர். மாமன், மைத்துநர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்கு, சுக்ரன் செல்கிறார். இதன் விளைவாக சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு வாகனம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கியிருக்கும். அந்த ஆவல் பூர்த்தியாகும் நேரமிது. அஞ்சல் வழியில் மேற்படிப்பு படிக்கும் யோகம் உண்டு. தந்தை வழி உறவில் ஏற்பட்ட தகராறுகள் தானாக விலகும். தங்கம், வெள்ளி வாங்கி மகிழ உகந்த நேரமிது.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம் திகதி தனுசு ராசிக்கு, புதன் செல்கிறார். இதன் விளைவாகப் பத்திரப் பதிவில் இருந்த தாமதங்கள் அகலும். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து ஆனந்தப்படுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். குடும்ப வருமானம் உயர பிள்ளைகள் வழியிலும் உதிரி வருமானங்கள் கிடைக்கும். பெற்றோர்களின் மணிவிழா மற்றும் பவளவிழாக்களை நடத்திப் பார்க்க முன்வருவீர்கள். இம்மாதம் அனுமன் ஜெயந்தியன்று அனுமனை வழிபட்டு ஆனந்தம் காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் நினைத்தது நிறைவேறும் மாதமாகும். பணக்கவலை தீரும். உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதரர்களால் விரயம் ஏற்படும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் உண்டு. மக்கள் செல்வங்கள் மாலை சூடி மகிழும் வாய்ப்பு உருவாகும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பதவி வாய்ப்புகள் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். வியாழன் தோறும் குருவை வழிபடுவது நல்லது. ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜரை வழிபட்டால் நல்லது நடக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளும், பதவி உயர்வும் கிடைக்கும்.

(முற்றும்)

# மாணவரின் அறிகை விருத்தியில் வாசிப்புத்திறனை ஊக்குவித்தல்

மொழி என்பது ஓர் இன மக்களின் முழுமையின் பிரதிபலிப்பு. உளவியலாளர் கருத்துப்படி அகக்காட்சி, மனவெழுச்சி, ஆராயும் திறன், ஆக்கும் திறன் ஆகிய வற்றை வளர்க்கும் சக்தி கொண்டது. மனிதனின் எல்லாவித வளர்ச்சிக்கும் அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாகும். உலகை ஒன்றாக காண்பதே கல்வி என்ற ஔவைப் பிராட்டியின் கருத்து தற்காலக் கல்வியியலாளர்களையே மலைக்கச் செய்கிறது.

அறிவுவளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது பண்பாடு. பண்பாட்டின் அங்கமாகவே மொழி விளங்குகிறது. பிறந்த குழந்தையானது தன்னை விருத்தி செய்து கொள்ளவும் தனது கருத்துக்களை சொல்லவும் விளங்கிக் கொள்ளவும் சூழலை அறியவும் மொழியைக் கருவியாகக் கொள்கிறது. குழந்தையின் தீர்க்க உணர்வு வளர்ச்சியானது அக்குழந்தையின் சமூக நிலைப்பட்ட பேச்சின் நேரடிப் பயன்பாடாகும். குழந்தையின் புலமை வளர்ச்சி என்பது சிந்தனைக்கான வழிமுறையில் அதாவது மொழியாட்சியிலேயே தங்கியுள்ளது என்பது 'விகொட்ஸ்கி' அவர்களின் கருத்தாகும். அந்தவகையில் பிள்ளையின் மொழிவிருத்தியிலே வாசிப்பின் முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் மொழியமைப்பே அச் சமூகத்தின் குழந்தை கற்றுக்கொள்வதையும் எவ்வாறு கற்றுக் கொள்கின்றது என்பதையும் எதிர்காலத்தில் எந்த வரையறையினுள் அது தன் கற்றலைச் செய்யப்போகிறது என்பதையும் தீர்மானிக்கின்றது. குழந்தையின் எண்ணக்கரு வளர்ச்சி மொழியினாலேயே வளம் பெறுகிறது. மொழிவளம் இல்லையேல் சிந்தனை வளம் இருக்காது. தாய்மொழி வழியாக அந்த வளம் மிகும்போது அது பண்பாட்டுப் பலத்தையும் ஆளுமை உறுதிப்பாட்டையும் வழங்குகிறது.

அந்தவகையில் இன்றைய மாணவர்களே நாளை மலரப் போகும் சிறப்பான சமுதாய முன்னேற்றத்தின் அடித்தளம் என்பதை அனைவரும் மனதில் நிலைநிறுத்திக் செயற்பட வேண்டிய காலமிது.

வீட்டுச் சூழலில் இருந்து பாடசாலைச்சூழலை அடைகின்ற மாணவர்களுக்கு அச்சுறுத்தாத மகிழ்வான நட்புச்சூழலை அமைத்துக் கொடுத்தால் அது அவர்களுக்கு ஆற்றலை வளர்த்தெடுக்கும். கற்றலை இனிமையாக்கும் கருத்து செறிவூட்டும் மாணவர்கள் நாட்டின் நம்பிக்கை நட்சத்திரங்கள்.

அத்தகைய மாணவர்களில் பலர் பரீட்சைக்காகவும் பதவிகளுக்காகவும் மட்டுமே படித்துவிட்டு குறுகிய வட்டத்திற்குள்ளே வாழ்ந்து ஓய்ந்து போகும் சூழல் இனியும் உருவாகக்கூடாது என்பதற்காகவே நல்ல நூல்கள் உருவாகின. புத்தகம் வாயிலாக புதுவாழ்வு அடைந்தவர்களும் புகழ்பெற்றவர்களும் வரலாற்றில் இன்றும் நின்று நிலைத்திருக்கிறார்கள். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையிலே பழக்கத்தின் மூலம் தமது உள்ளார்ந்த ஆற்றலை வளர்த்துக் கொள்வதுடன் புதுமை புனையும் வல்லமையும் வளர்ப்பது வாசிப்பு மட்டுமே.

அமெரிக்க கல்வி மேதையான ஜோன் டூயியின் கருத்தை நாம் இங்கு நோக்க வேண்டும். தான் பெற்றுள்ள அறிவையும் ஆற்றலையும் இன்று பிறந்து வளரும் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்தி மனித சமூகம் மேற்கொள்ளும் பல்வேறு சேவைகளின் தொகுப்பே கல்வி என அவர் கூறுவார்.

இன்று அபரிமிதமான தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்தினாலும் இயந்திர மயமான வாழ்க்கை முறையாலும் வாசிப்புப் பழக்கம் எம் மத்தியில் மிக அருகிப்போய் விட்டது என்றே கூறலாம். மாணவர்கள் மட்டுமின்றி ஆசிரியர்கள், பெற்றோர், ஏனைய துறைசார் அணியினர் எனப்பலரும் வாசிப்பதற்கு நேரத்தை செலவிடத் தயங்குகின்றனர்.

நேரமின்மை, வேலைப்பளு, சோர்வு, காலம் தாழ்த்துதல், ஆர்வமின்மை, இலக்கற்ற நிலை, மன அழுத்தம் பொருளாதார நிலை, இக்கட்டான குடும்பச் சூழல் என்பன வாசிப்பின் மீதான நாட்டத்தை குறைக்கின்றன. இதனால் வீணான நேரச் செலவு, கொலை கொள்ளை, பெண்களை இம்சைப்படுத்துதல், வன்செயல்கள், பெற்றோர், பெரியோரை அவமதித்தல், பொறுப்பற்ற தன்மை, பல்வேறு மட்டங்களிலும் ஊழல்கள், மனிதப் பண்புகளை உதாசீனம் செய்தல் போன்ற பொருத்தப்பாடற்ற நிலைமைகள் மாணவரிடத்திலும் சமூக மட்டத்திலும் தோன்றக் காரணமாகின்றன.

இன்று மாணவர்கள் அடைவு மட்டத்தை எய்த முடியாமலிருப்பதற்குக் காரணம் ஒழுங்கான வாசிப்புப் பழக்கமின்மையே. தேடிக்கற்றல், சுயகற்றல் போன்ற விடயங்கள் குறைந்தவர்களே மெல்லக்கற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பாடசாலைகள் சிலவற்றிலும் தேர்ச்சி நிலை குற்றுயிரும் குறை உயிருமாக துடித்துக்கொண்டிருப்பதற்கான பின்னணியில் நிறைய விடயங்கள் உள்ளன. எழுத்துப்பிழைகள் மலிந்து, ஒலி பேதங்கள் பிறழ்ந்து வாசிப்புப் பண்பாடு அருகிப்போய் ஆக்கத்திறன் முயற்சிகள் குன்றிய நிலையில் ஆசிரியரின் கற்பித்தல் பணியானது மிகவும் சிரமமானதாகவே இருக்கும். இதனால் ஆசிரியர் பொறுப்புணர்ச்சி மிக்கவராகவும் மாறிச் செல்லும் உலகின் மாற்றங்களை எதிர்கொள்ளத் தேவையான தேடலுடன் மாணவர்களையும் வாசிப்பின் பால் தூண்டுவதற்கு வழிகாட்டுபவராக விளங்க வேண்டும். மலர் தோறும் சென்று தேனெடுக்கும் வண்டினைப் போல பல் வகை இலக்கியங்களையும் நுகர முயல வேண்டும்.



சிறுபராயம் முதலே நூல்களை வாசிக்கும் போது பின்வரும் உத்திகளைக் கையாள்வது சிறந்தது.

✹ ஒரு மொழியில் இருக்கும் ஒலிகளை (வார்த்தைகளை) புரிந்து கொள்ளுதல்.

✹ அந்த மொழியை இயல்பாகப் பேசுபவரைப் போல வார்த்தைகளையும் ஒலிக்குறிப்புக்களையும் திரும்பவும் உச்சரித்தல்.

✹ சிறு வாக்கியங்களையும் சொற்றொடர்களையும் உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படை இலக்கண விதிகளை புரிந்து கொள்ளுதல்.

✹ எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குத் தேவையான வார்த்தை அறிவினை வளர்த்துக் கொள்ளுதல்.

✹ மொழிக்குரிய எழுத்துக்களை பிரித்தறியவும் உச்சரிக்கவும் கற்றுக்கொள்ளுதல்.

✹ ஹ. எழுத்துக்களை எழுதி வாசிக்கக் கற்றல்.

✹ எழுத்துக்கூட்டி வார்த்தைகளை வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல்.

✹ சிறு பந்தியினை வாசித்து அதனை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.

✹ மொழியில் காணக்கிடைக்கும் கடந்தகால, நிகழ்கால இலக்கியங்களை படித்து அறிதல்.

சிறந்த நட்பை விட பொறுக்கி எடுக்கப்பட்ட சில புத்தகங்களின் உறவு நமக்கு அதிகமான நன்மையை அளிக்கும் என்கிறார் கோல்டன் என்ற நல்லறிஞர். இலத்திரனியல் ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும் வெளியாகின்ற செய்திகள் நடப்பியல் சார்ந்த விடயங்களைவாசிப்பதன்மூலம் அறிவை இற்றைப்படுத்திக் கொள்ளலாம்.

சொந்த அனுபவங்களின் வாயிலாகப் பெறும் அறிவைக் காட்டிலும் பலர் தமது அனுபவங்கள் மூலமாக திரட்டித் தந்திருக்கும் நூல்களினால் பெறும் அறிவு மேம்பட்டதாக இருக்கும். இதனைத்தான் திருவள்ளுவர், கற்றனைத் தூறும் அறிவு என்கிறார். அறிவு விளக்கம் பெற ஞானத்தின் உச்சத்தை அடைய பெரும்பாலும் நல்ல நூல்களே காரணமாக இருக்கின்றன. நாமாகவே கற்றறிதலின் மூலம் புதிய அனுபவங்களைப் பெறமுடியும். புத்தகங்களோடு வாழ்பவர்கள்தான் மனித வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் வலிமையைப் பெறுவார்கள் என்பதுநாம் கண்டறிந்த உண்மை.

இதனாலேயே 'நூல்களைக் கட்டுங்கள். இல்லையெனில் சிறைச்சாலைகளை கட்ட வேண்டி வரும்' என்றான் மாவீரன் நெப்போலியன். உங்களிடம் பத்து ரூபாய் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டால் நான் ஒரு புத்தகம் வாங்கிப் படிப்பேன் என்றார் மாபெரும் மேதை A.P.J அப்துல் கலாம். மனிதனை மனிதனாக மாற்றுவது நல்ல நூல்களே.

வாசிப்புப்பயனளிக்க வேண்டுமானால் பின்வரும் வழிமுறைகள் பேணப்பட வேண்டும்.

✹ நன்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோளுடன் வாசித்துப் பழக வேண்டும்.

✹ வாசிப்பு வெறுமதி வாய்ந்ததாக இருக்க வேண்டுமெனில் வாசிப்பதில் ஓர் ஒழுங்கு முறையான தொடர்ச்சிப்போக்குத் தேவை.

✹ சிரத்தையின்றி வாசிப்பதனாலும் ஒழுங்குமுறையின்றி பிறரின் நெருக்கீட்டிற்காக வாசிப்பதில் எவ்வித பயனும் இல்லை.

✹ நாம் உண்ணும் போது சத்தானவற்றையும் சுவையானவற்றையும் தேர்ந்தெடுத்து உண்பதைப் போல் நல்ல நூல்களையே தெரிவுசெய்து வாசிக்க வேண்டும்.

✹ எமது துறை யாது ? படிப்பதன் குறிக்கோள் என்ன? என்பவற்றை முற்கூட்டியே வரையறுத்துக் கொண்டு அவற்றுக்கேற்ப நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள் என்பவற்றை வாசிக்கலாம்.

✹ வாசிப்பு தேவை யொன்றினைஏற்படுத்தினால்தான் அங்கு ஆர்வம் உண்டாகும். ஆர்வம் முயற்சியை ஊக்குவிக்கும், ஊக்கம் ஒருவனை செயலில் ஈடுபடுத்தும். மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்ற உந்துதல்வாசிக்கத்தூண்டும்.

✹ தினந்தோறும் வாசிப்பதற்கென்று நேரம் ஒதுக்கப்படல் வேண்டும். அதனைச் சரியாகவும் கண்டிப்பாகவும் வாசிப்பிற்குப் பயன்படுத்த வேண்டும்.

✹ வாசிப்பின்போது வாசிக்கும் விடயத்திலே மனம் ஒன்றித்தல் அவசியம் என்பதை மாணவர்கள் உணரும் போது தான் வாசிப்புப் பயனுடையதாக இருக்கும்.

தேர்ந்த வாசிப்பு பயிற்சியினால் பல்வேறு நன்மைகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

✹ வாசிப்பு பழக்கத்தை பின்பற்றுவதால் புதிய புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

✹ சொற்களஞ்சியத்தை பெருக்கிக் கொள்ள முடிகிறது.

✹ புதிய கலைச் சொற்களைச் சேகரிக்கலாம்.

✹ பேச்சாற்றல் சிறக்கும்.

✹ சிந்தனை, கற்பனையாற்றல் அதிகரிக்கும்.

✹ ஆளுமை அதிகரிக்கும்.

✹ புத்தியும் விவேகமும் சிறந்து விளங்கும்.

✹ மனஅழுத்தம் குறையும்.

✹ மனித விழுமியப் பண்புகள் மேம்பாடடையும்.

எனவே அரிய ஆற்றலையும் புதிய பார்வையையும் மிகுந்த வலிமையையும் உயரிய நீதிகளையும் இனிய வாழ்வையும் நெடிய புகழையும் தரவல்ல வாசிப்புத் திறனை மேம்படுத்தி உயரிய இலக்கினை அடைய அனைவரும் முயற்சிப்போம்.

திருமதி. வி.கருணாரட்ணா,
ஆசிரியர்
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ்
றோ.க . மகளிர் வித்தியாலயம்.

# வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் ஒளிவிழா நிகழ்வு







இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முன்னிட்டு முதலமைச்சரின் அமைச்சினால் நேற்று முன்தினம் 20ஆம் திகதி ஒளிவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்ட பொது நிலையினர் கழக இயக்குநரும் நீதி சமாதானக் குழு இயக்குநருமாகிய அருட்தந்தை ரவிச்சந்திரன் கலந்து கொண்டு வாழ்த்துச் செய்தியை அனைவருக்கும் தெரிவித்தனர். இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், பிரதம கணக்காளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அமைச்சின் அலுவலர்களாலும் யாழ். சென்.ஜேம்ஸ் பாடசாலை மாணவிகளாலும் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கு

## தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் தண்டப் பணம் செலுத்த விசேட ஏற்பாடு

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாக, போக்குவரத்து ஒழுங்குகளை மீறியோருக்கான தண்டப்பணத்தை செலுத்திக் கொள்ள முடியாதவர்களுக்கு விசேட ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.



இதன்படி, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றில் விசேட காரியாலயமொன்று நேற்று முன்தினம் முதல் செயற்படுவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், தேவையான வசதிகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் செய்து கொடுக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-3-10)




அஞ்சல் அலுவலர்கள் மேற்கொண்ட போராட்டம் காரணமாக நேற்றைய தினம் கரவெட்டியில் உள்ள அஞ்சல் அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. (இ-60)

## டெங்கு தொடர்பில் விழிப்பாக இருங்கள்

மழைகாலம் என்பதனால் இக்காலத்தில் டெங்கின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

டெங்கு நுளம்புக் குடம்பிகள் பரவக் கூடிய வகையில் ரயர்கள்,சிரட்டைகள்,போத்தல்கள் என்பவற்றை வைக்காது தண்ணீர் நிரம்பாதவாறு பாதுகாக்குமாறும் நுளம்புகுடம்பிகள் உற்பத்தியாகும் என சந்தேகிக்கப்படும் இடங்களை அழிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.மேலும் மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ச்சியான காய்ச்சல் இருக்குமாயின் அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறும் அவர்கள் மேலும் கோரியுள்ளனர். (இ-60)

## மரண அறிவித்தல்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சரவணமுத்து இராசம்மா அவர்கள் 2016.12.18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அமரர் சரவணமுத்துவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலன்- கந்தி தம்பதியினரின் அன்பு மருமகளும், அன்னபூரணம், லோகேஸ்வரன் (இலங்கை மின்சார சபை), சுவிஸ் வாழ் பரமேஸ்வரன், சர்வேஸ்வரன், பரிபூரணம் (ஹொலண்ட்) லண்டன் வாழ் தங்கேஸ்வரன், பகீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாராயணன் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 22.12.2016 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவேரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(711)

தகவல்:
குடும்பத்தினர்.
077 045 0254

### அகலிப்பு வேலைகளுக்காக வீதி மூடப்பட்டிருக்கும்

வீதி அகலிப்பு வேலைகளுக்காக இன்று தொடக்கம் 30.12.2016 வரை வேலணை-ஊர்காவற்றுறை வீதியின் வேலணைச் சந்தியிலிருந்து புளியங்கூடல் சந்தி வரை உள்ள 3 கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி மூடப்பட்டிருக்கும்.

இக்காலப்பகுதியில் சகல மக்களும் புளியங்கூடல் - சரவணை வீதி ஊடாகவும் யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறை வீதி ஊடாகவும் போக்குவரத்தினை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



(7000)

பிறப்பு:-12.07.1942
இறப்பு:-22.12.2011

வைத்திய கலாநிதி
மரிசலீன்பிள்ளை
மரியதாசன் (JP)
(பேரின்பம்- வல்வெட்டித்துறை)
சுகாதார வைத்திய அதிகாரி
(2001-2011)
யாழ். மாநகர சபை)



அன்புள்ள அப்பா
அன்பால் அரவணைத்து கரங்களில் ஏந்தி
கனிவோடு பேசி எமக்காகவே வாழ்ந்தவரே
கடமையின் வடிவமாய்; வைத்தியராய்
இறைவழி நின்று நேர்வழியில் உன்னதமாய் வாழ்ந்த
உண்மை அன்பின் ஒளியே
இன்னமும் தேடுகின்றோம்! வாடுகின்றோம்.

ஆவேமரியா
72, கோயில்வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்.

# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

காலத்தின் தேவை கருதி இன்றைய உலக மயமாகலுக்கு ஏற்ப மாணவர்களுக்கு வழிகாட்டி அவர்களை உலக அரங்கிலும் தாய் நாட்டிலும் நல்ல கற்ற மனிதர்களாகவும் அதேவேளை சிறந்த மனிதவளமாகவும் அவர்கள் அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கு ஏற்றவர்களாக மாற்றும் பொறுப்பு அதிபர், ஆசிரியர், பெற்றோர் மற்றும் கல்வி ஆர்வலர் அனைவர்களது கைகளிலும் தங்கியுள்ளமை இங்கு குறிப்பிடக்கூடிய ஒன்று. இந்த வகையில் க.பொ.த சாதாரணதரத்தில் தோற்றிய அனைத்து மாணவர்களும் க.பொ.த.உயர்தரத்திற்கு செல்ல முடியாது இருக்கின்ற அதேவேளை செல் லும் மாணவர்கள் உரிய பாடத் தெரிவுகளை கைக்கொள்ளாத காரணத்தினால் உயர்தரம் நிறைவடையும் போது பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதிலும் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி ஏனைய வேலை வாய்ப்புக்களிலும் பல இடர்களை எதிர்கொள்வது கண்டறியப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் இம் மாணவர்களின் மூன்றாம் நிலை கல்வியில் பாடத்தெரிவு என்பது மிகவும் முக்கியமான ஒன்று. கடந்த தசாப்தங்களாக எமது மாணவர்கள் கலைத்துறை பாட தெரிவுகளையே கூடிய பங்கு தெரிவு செய்வதனால் பல்கலைக்கழக அனுமதியிலும் மற்றும் வேலைவாய்ப்புக்களிலும் பல பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இதற்காக பாடத் தெரிவு என்பது உலக அரங்கிற்கு ஏற்ப எம் மாணவர்களினால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

வடபுலம் தமிழர்கள் பூர்வீகமாக வாழும் பிரதேசம்.முன்னைய காலங்களில் ஆங்கில மொழியிலும் கணித, விஞ்ஞான துறைகளிலும் கொடிகட்டிப்பறந்தவர்கள் அதிகளவு வைத்தியர்கள் ,பொறியியலாளர்கள் இங்கிருந்து நாடு பூராகவும் மாத்திரமன்றி சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சேவையாற்றிய வரலாறு எம்மவரிடம் உண்டு. இந்த நிலையில் க.பொ.த சாதாரண தரத்தில் தங்களது கற்றலை நிறைவு செய்த மாணவர்களுக்கு உயர்தரம் என்றவுடன் எந்தத்துறையை தெரிவு செய்வது என்பதில் சரியான வழிகாட்டல்கள் கிடைப்பதில்லை என பலராலும் குறைகூறப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. அதனை நிவர்த்திக்கும் வகையில் வடமராட்சி மாணவர்களின் நன்மை கருதி முதல் முறையாக வடமராட்சி லயனஸ் கழகம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் துறைசார் வல்லுநர்களின் உதவியுடன் மாபெரும் இலவச கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர். விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் , லயன்ஸ் கழக 306 பீ 1 மாவட்ட ஆளுநர் லயன் வைத்திய-கலாநிதி தியாகராஜா மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சு.ரவீந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகவும் லயன் கலாநிதி .ச. பாலகுமார் மருத்துவபீடம் , பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா - பீடாதிபதி தொழில்நுட்பபீடம் , பேராசிரியர் தி.வேல்நம்பி, பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் , பேராசிரியர் கு.மிகுந்தன் - பீடாதிபதி பட்டப்படிப்புகள் பீடம் , கலாநிதி. அ.அற்புதராஜா - பீடாதிபதி, பொறியியல் பீடம், இ. அன்னலிங்கம் - பட்டயக்கணக்கறிஞர் , ஓய்வுநிலை பேராசிரியர் மா.சின்னத்தம்பி - கல்வியியற்றுறை மற்றும் லயன் கலாநிதி செ. சேதுராஜா - வலயத்தலைவர் - இளைப்பாறிய அதிபர் ஆகியோர் வளவாளர்களாகவும் கலந்து பல கருத்துக்களையும் முன் வைக்கவுள்ளனர். இதில் மாணவர்கள் தவறாது கலந்து கொண்டு பயன பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது.

பாடத்தெரிவு என்பது திணிக்கப்படாது எதிர்கால தேவைகளை நிறைவு செய்வதாகவும் எமக்கும் தேசத்திற்கும் வேண்டிய விஞ்ஞான கணித அறிவுள்ளவர்களையும் சிறந்த வைத்தியர்கள், சிறந்த ஆய்வாளர்கள், சிறந்த கணித விற்பன்னர்கள், சிறந்த பொறியியலாளர்கள் என பலருமே எமக்கு தேவையாக உள்ளனர். இத்தகைய பாடத் தெரிவுகளுக்கு சில தடைகள் இருப்பது போல் தெரிகின்றது. அவற்றுள்

- மாணவர்கள் கணித,விஞ்ஞான துறைகளை கற்பதில் ஆர்வம் காட்டாது ஏனைய துறை கற்பதற்கு இலகுவானதெனக் கருதுகின்றனர்.
- பெற்றோர்களின் விருப்பங்கள் பிள்ளைகள் மீது திணிக்கப்படும் சந்தர்ப்பங்கள் நடைபெறுதல்
- மாணவர்கள் தங்கள் சகபாடிகள் தெரிவு செய்யும் துறையை தெரிவு செய்வது இலகுவானதெனக் கருதுதல்
- பாடசாலைகள் மற்றும் கல்விசார் அமைப்புக்கள் இதற்கான வழிகாட்டல்களை உரிய காலத்தில் வழங்காமை.
- க.பொ.த சாதாரண தரப்பரீட்சை நிறைவடைந்தவுடன் மாணவர்களுக்கு துறைசார் தெரிவுகளுக்கு கால அவகாசம் வழங்கப்படாது உடனடியாகவே வகுப்புக்கள் தொடங்கப்படுதல்
- கணித, விஞ்ஞான துறையை விட அண்மையில் அறிமுகமான தொழில்நுட்ப துறை இலகுவானதென கருதுகின்றமை தற்போது அத்தெரிவில் கணித, விஞ்ஞானம் கற்கக்கூடிய தகுதி உள்ள மாணவர்களும் இணைகின்ற நிலைமை
- இவற்றுடன் எதிர்காலத்தில் கணித, விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு அதிகளவில் வாய்ப்புக்களை வேலைவாய்ப்பிலும் உயர் கல்வியிலும் வழங்கும் என்பதனை அறியாது உள்ளனர்.

எனவே எமது பிரதேசங்களில் கணித, விஞ்ஞானத்துறை வலுப்படுத்தப்படவேண்டும். உயர்தரத்தில் கணித,விஞ்ஞானத் துறையை கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன் இதுவரை காலமும் உள்ளது போன்ற பிரபல உயர்தர ஆசிரியர்கள் உருவாக்கப்படாது விட்டால் வேறு யாரும் எங்கள் இடத்தினை பிடித்து விடும் சாத்தி யங்கள் கூட உண்டு. எனவே இதனை எம் இனத்தவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இத்தகைய பல காரணிகளுடன் இன்னும் ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தரம் 10 இல் மாணவர்களுக்கு தெரிவுப்பாடங்கள் மூன்று துறைகளை மையப்படுத்தியதாக உள்ளது. இத்தெரிவின்போதும் மாணவர்களும் பெற்றோர்களும் பிள்ளைகள் 9ஏ எடுத்தால் மாத்திரம் போதும் எனக் கருதி ஆங்கில இலக்கியம, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், வர்த்தகமும் கணக்கீட்டு கல்வியும் போன்ற பாடங்களைத் தவிர்த்து இலகுவான பாடத்துறைக்குள் செல்கின்றனர். இது அவர்களது தூர நோக்கற்ற சிந்தனையே. இதனை மாணவரதும் பெற்றோரதும் தெரிவாக விடாது பாடசாலைகள் வழிகாட்ட வேண்டிய தேவை உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே எமது சமூகத்தின் இன்றைய தேவை கலை, வர்த்தகத் தெரிவினை காட்டிலும் கணித, விஞ்ஞான தெரிவு என்பதனை அனைத்து பொறுப்புள்ளவர்களும் உணர்ந்து செயற்பட வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். இக்கருத்தரங்கு மாணவர்களுக்கு வெட்டுப் புள்ளிகளை தீர்மானிக்கும் பாடத் தெரிவுகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் தொடர்ந்து தங்கள் உயர்கல்வியை தொடர்வதற்கான ஓர் அடித்தளத்தினை அமைப்பதற்கு வழிகாட்டுவதாகவும் அமையவுள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய சிறப்பம்சம் ஆகும். எனவே இதில் கஷ்டங்களை பார்க்காது மாணவர்கள் தவறாது பங்கு கொண்டு பயன்பெறுமாறு வடமராட்சி லயன் கழகம் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

லயன் என்.தேவராஜா, அதிபர்,
யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி

ஹோட்டல் பாடசாலை

தமிழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி RAILWAY இல் இருந்து மிகவும் பிரசித்தி பெற்ற ISO/QMS சான்றிதழ் உள்ள HOTEL SCHOOL இப்போது 96/1 KANDY ROAD யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

- சர்வதேச சமையற்கலை INTERNATIONAL COOKERY
- உணவு வகைகளைப் பரிமாறுதல் FOOD -BERVERAGE SERVICE
- விருந்தினர் வரவேற்பு Front office/ RECEPTION OPERATION
- ஹோட்டல் பராமரிப்பு HOTEL HOUSE KEEPING

கப்பற் சேவைக்குத் தேவையான CDC பயிற்சி கொழும்பில்
F/B/F.01.H.K COURSES FROM 2017 JANUARY

FREE! FREE! FREE!

ஆரம்ப பாடசாலை ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டம் (ஆங்கிலம்)
A.M.I.MONTESSORI TEACHER TRANING
HEAD OFFICE
JULISTON LANKA INTERNATIONAL
இல.01 வீரசிங்கம் ஒழுங்கை, காலி வீதி, பாணந்துறை.
தொலைபேசி இல.
038 428 1499/ 038 567 1582.
E-Mail:juliston@ isplanka.lk / Web-www Juliston lanka .com
(7108)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1985 இந்து, நட்சத்திரம்: மிருகசீரிடம், உயரம்: 175cm, தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில், தொ.இ: B/6642
- பிறப்பு: 1988 இந்து, நட்சத்திரம்: பரணி, உயரம்: 174cm, தகைமை/தொழில்:BSc/. விரிவுரையாளர், தொ.இ: B/6646
- பிறப்பு: 1989 இந்து, நட்சத்திரம்: பூராடம், கி.பா: 9செவ் 12 இல், உயரம்: 5'6", தகைமை/தொழில்:QSசவுதி, தொ.இ: B/6649
- பிறப்பு: 1981 இந்து, நட்சத்திரம்: கேட்டை, கி.பா: 42, உயரம்: 5'7", தகைமை/தொழில்:O/L/கமம், தொ.இ: B/6651

இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1988 இந்து, நட்சத்திரம்: பூரம், கி.பா: 104 செவ் 7 இல், உயரம்: 5'3", தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர், தொ.இ: G/2944
- பிறப்பு: 1984 இந்து, நட்சத்திரம்: ரோகினி, கி.பா: 40, உயரம்: 5'1", தகைமை/தொழில்:MAAT/ உதவிக்கணக்காளர், தொ.இ: G/2953
- பிறப்பு: 1988 இந்து, நட்சத்திரம்: உத்தராடம், கி.பா: 58, உயரம்: 5'1", தகைமை/தொழில்:BFA, எதிர்பார்ப்பு: சைவபோசனம், தொ.இ: G/2973
- பிறப்பு: 1988 இந்து, நட்சத்திரம்: சுவாதி, கி.பா: 43செவ் 7 இல், உயரம்: 157cm, தகைமை/தொழில்:BSc, தொ.இ: G/2981

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# தமிழர்களையோ, முஸ்லிம்களையோ அடக்கி ஆள்வதற்கு நினைக்கவில்லை

## ஞானசார தேரர் கூறுகிறார்

தமிழர்களையோ, முஸ்லிம்களையோ அடக்கி ஆள்வதற்கு நாம் நினைக்கவில்லை எனப் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார். அனைவரும் இந்த நாட்டில் இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்த நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷ, மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் மற்றும் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்தபோது,

"கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இம்மாகாணத்தில் சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நாம் நீதி அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் எடுத்துக் கூறியுள்ளோம். இந்த நாட்டில் அனைத்து மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன என்பதையும் நாம் அறிவோம் என்றார்.

"யுத்தத்துக்கு முன்னர் இம்மாவட்டத்தில் வாழ்ந்த சிங்களக் குடும்பங்கள் தற்போது மீளக்குடியேறுவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. தற்போது இங்கு அவர்களால் வாக்களிக்கவும் முடியவில்லை. கிழக்கு மாகாணத்தில் சிங்களப் பெளத்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட வேண்டும்.

அவர்கள் யுத்தத்துக்கு முன்னர் வசித்த பகுதிகளில் மீளக்குடியேற வசதி செய்யப்பட வேண்டும். இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பாடுபட்டு வருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பாடுபடுகின்றார். இந்த நல்லிணக்க முயற்சிக்கு நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சேவைகள் முடக்கம்; மக்கள் அவதி



(யாழ்ப்பாணம்)

தபால் ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டம் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இடம் பெற்றுள்ளது. யாழ்.பிரதான தபால் நிலையம் உட்பட அனைத்து சேவைகளும் முடங்கியதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

48 மணி நேரம் இந்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார். 10 வருடங்களாக தபால் திணைகளத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதாக அதிகாரிகள் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தனர். எவ்வாறாயினும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமையின் காரணமாக இந்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக எச். கே. காரியவசம் தெரிவித்தார். (இ-4)

## புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு விழா இன்று

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நீராவியடியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன் பிரதம விருந்தினராகவும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி இராமநாதர் சத்தியேந்திரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் நாகராசா மகேந்திர ராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார். (இ

## வெள்ளைப்பிரம்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தின் போது இரு கண்களினதும் பார்வையை இழந்த 75 முன்னாள் போராளிகளுக்கு வெள்ளைப்பிரம்பு வழங்கும்படி வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் யாழ். வணிகர் கழகத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் யாழ். வணிகர் கழகத்தினால் 75 வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்படவுள்ளன என வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ

## ATM திறப்பு விழா

இலங்கை வங்கி கொடிகாமம் கிளையின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் (ATM), வாடிக்கையாளர் சேவைக்காக இன்று காலை 9.30 மணியளவில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் எம்.ஜே. பிரபாகரனால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (இ

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 934

லக்ஷனா




விதுஷன்




சங்கவி





சுவேதா




வினிதா




கம்சிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அதிகாரமிக்க அமைச்சரை உருவாக்கும் திட்டத்துக்கு ஸ்ரீல.சுதந்திரக்கட்சி எதிர்ப்பு



(கொழும்பு)

அதிகாரமிக்க அமைச்சர் ஒருவரை உருவாக்கும் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கின்றது என பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். “இவ்வாறு அதிகார அமைச்சர் ஒருவரை உருவாக்கும் வகையிலான செயற்பாட்டுக்கு சுதந்திரக் கட்சி எந்த வகையிலும் ஆதரவளிக்காது.

அதிகார அமைச்சர் ஒருவரின் செயற்பாட்டினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை சுதந்திரக் கட்சி நன்கு அறியும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கும் இதுவே காரணம். எனினும் நாட்டுக்கு துரித கதியல் முதலீடுகளை கொணடு வரக்கூடிய சட்ட ரீதியான ஏற்பாடுகளை செய்ய கட்சி ஆதரவளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# இலங்கைக்குள் இன்னொரு நாடு



## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

**சீன நிறுவனத்திற்கு 15 ஆயிரம் ஏக்கர் காணியை வர்த்தக நடவடிக்கைகளுக்காக வழங்குவதால் நாட்டிற்குள் இன்னொரு நாடு உருவாகுமென கூட்டு எதிர்க்கட்சி எச்சரித்துள்ளது.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் விவசாய நிலத்தை சீன நிறுவனத்திற்கு வழங்குவதால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுமெனவும் தெரிவித்தார். நாட்டிற்கு வரும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை மகிந்த ராஜபக்ஷ வழங்குவார. அதில் அவருக்கு மகிழ்ச்சியே.

எனினும் நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கும், முதலீடுகளை வரவேற்பதற்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது.

இந்த திட்டம் தொடர்பில் அப்போதையை அரசாங்கத்தின் கொள்கையை மகிந்த ராஜபக்ஷ மிகத் தெளிவாக சீன அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த திட்டத்தை 750 ஏக்கரிலேயே ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடியிருந்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# ஜப்பான்-இலங்கை இடையே பாதுகாப்பு கலந்துரையாடல்




(கொழும்பு)

ஜப்பான்-இலங்கை இடையே பாது காப்பு ஒத்துழைப்புக் கலந் துரையாடல் நேற்று முன் தினம் கொழும்பில் உள்ள இலங்கை பாதுகாப்பு அமை ச்சில் இடம்பெற்றது.

பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் அழைப்பின் பேரில், ஜப்பானிய பாதுகாப்பு உயர்மட்டக் குழுவொன்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இருதரப்பு மற்றும் பரஸ்பர நலன்கள், முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டுள்ளது.

இலங்கை தரப்பில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவ, கடற்படை, விமானப் படைத் தளபதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

ஜப்பான் தரப்பில், டோக்கியோவில் இருந்து வந்திருந்த, உயர்மட்டக் குழுவினருடன், கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்.அட்சுகிரோ மொரோரேயும் பங்கேற்றார்.

இலங்கை - ஜப்பான் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல் முதலமுறையாக நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# கொழும்பு வாழ் மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகள்



(கொழும்பு)

கொழும்பு வாழ் மக்களுக்காக அடுத்த இரண்டு வருடங்களில் 65 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதியளித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஒரு பகுதி மக்களுக்கு வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய போதே நிதி அமைச்சர் மேற்ண்டவாறு தெரிவித்தார்.

“எனது வீடு” என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் கொழும்பிலுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய எதிர்வரும் 2 வருடங்களில் கொழும்பிலுள்ள மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வீட்டு உரிமையை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# இன்று ஒரு தகவல்

## பொது இடங்களில் மனைவியை நடத்துவது எப்படி?

வீட்டிற்குள் கணவன்- மனைவி எப்படி நடந்து கொண்டாலும் பொது இடங்களில் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும் என உலகம் எதிர்பார்க்கிறது. அப்படிப்பட்ட எதிர்பார்ப்பில் தவறேதும் இல்லை.

ஒரு திரையரங்கிலும் சரி, ரயில் பயணத்திலும் சரி ஒரு திருமணத்தில் கலந்துகொள்ளும் போதும் சரி, எந்த இடமாக இருந்தாலும் எல்லை காப்பது அவசியம்.

முதலில் உடல் நெருக்கத்தைக் குறைத்துக் கொண்டு விடவேண்டும். கையைப் பிடிப்பதும் கட்டியணைப்பதும் பார்ப்பவர்களுக்கு அதுவும் நம் பண்புக்குச் சரிப்பட்டு வராது .அதுமட்டுமல்ல பார்க்கும் சிறு உள்ளங்கள் கலங்கிப் போகும். கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போய்விடும்? வீடு போவதற்குள் என்ன அவசரம்? புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர்கள் தாம் இப்படி என்றால் சில நடுத்தர வயதினருக்குக் கூட இது தெரிவதில்லை.

பொதுஇடத்தில் மனைவியைக் கோபித்துக் கொள்ளக்கூடாது என்பது மிக முக்கியம். சில பேருக்குத் தாழ்வு மனப்பான்மை உண்டு. மனைவியின் பேச்சை நான் கேட்பதில்லை என்பதை எப்படியாவது வெளிப்படுத்த எண்ணுவார்கள். பலர் இருக்கும்போது மனைவி எதிர்த்துப் பேசமாட்டாள் என்ற நம்பிக்கையில் இதுதான் தருணம் என்று சத்தமிடுவார்கள்.

குணக்கேடான மனைவியைப் பலர் முன்புதான் திருத்த முடியும். மனைவியைப் பற்றிக் குறைபட்டுக் கொள்வதை விட்டுவிட்டு எல்லார் முன்பும் கொஞ்சமும் செயற்கை இல்லாமல் பாராட்ட வேண்டும். இதைச் சரிவரச் செய்யாவிட்டால் கேலி செய்வதாக மனைவி மட்டுமல்ல,மற்றவர்களும் புரிந்துகொள்வார்கள். எனவே விழிப்புத் தேவை.

மனைவியாக ஓர் இடத்திற்கு விரும்பி அழைத்துப் போனால் (உதாரணமாக மனைவியின் தோழி திருமணம்) மனைவியை நாம் அதிகம் கண்டுகொள்ள வேண்டியதில்லை. மாறாக நம்முடைய நண்பரின் திருமணம் என்றாலோ, என்ன ஜானகி! காத்து இங்கே நல்லா வருது. இங்கே வந்து உட்காரு; இப்போ சாப்பிடுவோமா நேரம் ஆகட்டுமா? என்றெல்லாம் சுருக்கடையான விசாரிப்புகள் மிக முக்கியம். முடிந்தால் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லியும் கவனிக்கச் சொல்லலாம். (மனைவிக்குத் தெரியாமல்)

முடிந்தவரை எல்லாரிடமும் அறிமுகப்படுத்தலாம். இதில் மூன்று அனுகூலங்கள் இருக்கின்றன.

1. நமக்குத் தெரியாத நண்பரோ, நண்பியோ பா இவருக்கு இல்லை என்கிற நம்பிக்கையை அது வளர்க்கும்.

2. நம்மை அறிமுகம் செய்யவே வெட்கப்படுகிறார். நம்மை மதிப்பதே இல்லை. நாம் அவ்வளவு மோசமாகவா இருக்கிறோம்? அல்லது நடந்து கொள்கிறோம் என்ற உணர்வு ஏற்படாது.

3. அறிமுகம் செய்யும் போதெல்லாம் மனைவியைப் பாராட்ட நிறையச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. (உதாரணம் என் மனைவி நல்லாவே சமைப்பா- நீங்க தைரியமா சாப்பிட வரலாம்)

கண்ணில்படும் பெண்களைப் பார்ப்பது தவறல்ல தான். ஆனால் மனைவிகூட இருக்கும்போது கொஞ்சம் கூடுதல் எச்சரிக்கை உணர்வு தேவை. பெரும்பாலும் பொது இடங்களில் கணவன் பார்வை மீது தான் மனைவியின் பார்வை இருக்கும். இது பல கணவர்களுக்குத் தெரிவது இல்லை.

வாடி போடி என்று வீட்டினுள் பேசினாலும் பொது இடங்களில் வேண்டாம்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் வீட்டில் பாத்திரம் பறப்பதைத் தவிர்த்து விடலாம்.

**லேனா தமிழ்வாணன்**

# ஆட்சிமாற்றத்தை ஆதரித்தமைக்காக இந்தியா வருந்தும்

## கோத்தபாய கூறுகிறார்



மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசாங்கம் சீனாவுடன் கூட்டாக இணைந்து செயற்படுவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நிச்சயம் குழப்பத்துக்கு உள்ளாக்கியிருக்கும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் முன்னைய அரசாங்கம் சீனாவுடன் உறவு வைத்திருந்ததை இந்தியா கடுமையாக எதிர்த்தது. அதனால் தான், 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது, எதிர்க்கட்சிகளைப் பலப்படுத்தியது.

முன்னைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சீனாவின் திட்டங்களை இந்தியா விரும்பவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. தலைமையிலான எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு அளித்தமைக்காக இந்தியா வருந்த வேண்டும்.

போர் நடந்த காலத்திலும் போருக்குப் பிந்திய காலத்திலும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருந்தது என்பதை இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் அண்மையில் வெளியிட்டுள்ள நூலில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால், மேனனை அடுத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பொறுப்பேற்ற அஜித் டோவல் முற்றிலும் வித்தியாசமான நிலைப்பாட்டை எடுத்தார்.

இலங்கையுடனானஉறவுகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடுகள் குறித்து இரண்டு முறை விளக்கமளிக்கப்பட்டது.

சீனாவின் 1.4 பில்லியன் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை நிறுத்துமாறு இந்தியா கோரியது. இந்தியாவின் அந்த கோரிக்கை நியாயமற்றது.

சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் துறைமுக அதிகார சபை இணைந்து கூட்டு முயற்சியாக அமைக்கப்பட்ட கொழும்பு அனைத்துலக கொள்கலன் முனையத்தை, இலங்கை பொறுப்பேற்க வேண்டும் என்றும் இந்தியா கோரியது.

இந்த முனையத்தில் 85 வீத உரிமையை சீன நிறுவனம் கொண்டிருந்தது. எஞ்சிய 15 வீதமே துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானது.

சீனாவின் நிதியில் மேற்கொள்ளப்படும் எல்லா உட்கட்டமைப்புத் திட்டங்களையும், நிறுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று அஜித் டோவல் என்னிடம் கூறினார். அம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கையின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கை ஒரு சிறிய நாடு, உங்களுக்கு இதுபோன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தேவையில்லை என்றும் அஜித் டோவல் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தின் மூலம் இந்தியாவினால் தனது நோக்கத்தை அடைய முடியவில்லை.

2015 ஜனவரியில் ஆட்சியைக் கைப்பற்றியவுடன், சீனாவைப் பகைத்துக் கொண்ட தற்போதைய அரசாங்கம் இப்போது சீனாவைத் திருப்திப்படுத்த முனைகிறது.

துறைமுக நகரத்திட்டம் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்பாடு இருதரப்புக்கும் இடையில் பலமான உறவு இருப்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# பஞ்சணைக்குள் 13 இலட்சம் சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன

நான்கரைக் கோடி ரூபாய் பெறுமதியான சமார் 13 இலட்சம் சிகரெட்டுக்களை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் கடத்துவதற்கு முயன்ற புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரை கைது செய்துள்ளதாக சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சீனாவிலிருந்தே இந்த சிகரெட்டுக்களை அந்த வர்த்தகர் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயன்றுள்ளார்.

பஞ்சணைக்குள் பதுக்கி வைத்தே சிகரெட்டுக்களை கடத்தியுள்ளதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-3-10)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 17

"இறுதியாக பெங்களூரில் சிவராசன் இருந்த வீடு சுற்றி வளைக்கப்பட்ட போதும் உடனடி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. 20 மணி நேரம் வேண்டும் என்றே தாமதம் செய்தார்கள். மயக்க மருந்துக்காகத்தான் காத்திருந்தார்கள் என்றால் அதை டில்லியில் இருந்து இந்திய இராணுவ விமானத்தின் மூலம் பெங்களூருக்கு எடுத்து வர ஒரு மணிநேரம் போதுமே. ஏன் இந்த நாடகம் நடத்தினார்கள்? சிவராசனை உயிருடன் பிடிப்பதை தவிர்த்தார்கள்."



மே 23 ஆம் திகதி அன்றே சிவராசன் எங்களைச் சந்தித்தார். மே 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் எங்களோடு திருப்பதிக்கு வந்து திரும்பினார். அதன் பிறகு என் கணவரை இரண்டு தடவை சந்தித்தார். என் தம்பியையும் போய்ப் பார்த்தார்.

மே 25 முதல் ஜூன் 7 வரை என் கணவரையும் விசாரணை கண்காணிப்புக்குள் இருந்த வேறு சிலரையும் மூன்று நான்கு தடவை சிவராசன் சந்தித்ததாக சி.பி.ஐயினர் கதை எழுதிவைத்து உள்ளனர். இந்த இடத்தில், சி.பி.ஐ. சொன்ன மற்றொரு கதையையும் பார்ப்போம்.



சுபா - சிவராசன் சடலமாக..

ஜூன் மாதம் 7ஆம் திகதி அன்று சிவராசன், சுபா, சாந்தன், என் கணவர், நான் ஆகிய ஐந்து பேரும் அடையாறு அஷ்டலட்சுமி கோயிலில் ஒன்றாகச் சந்தித்து பேசிக்கொண்டதாகவும், அப்போது சுபாவுக்கு அங்கே இருந்த வைத்தியசாலையில் சிகிச்சை அளித்ததாகவும் ஒரு கதையை சொல்லியிருக்கிறார்கள். இந்த கதையின்படி பார்த்தால்கூட நாங்கள் எல்லோரும் ஒன்றாகத் தான் இருந்தோம்.

மற்றவர்களை விடுங்கள். என்னை அலுவலகம் வந்து விசாரித்தார்கள். தொடர்ந்து கண்காணித்தார்கள். அதன் பேரில் என்னிடம் வந்து போய்கொண்டிருந்த என் கணவரையும் பின்தொடர்ந்திருப்பார்கள். அப்படி இருக்கும்போது சிவராசன் உட்பட நாங்கள் எல்லாம் ஒன்றாகப் பலமுறை சந்தித்துக்கொண்ட போது மட்டும் ஏன் பின்தொடராமல் சி.பி.ஐ. அதிகாரிகள் விட்டார்கள்? ஏன் பிடிக்காமல் விட்டார்கள்?

ஒன்று எங்களை எல்லாம் பின்தொடர்ந்து கண்காணித்ததாகச் சொல்வது பொய்யாக இருக்க வேண்டும். அல்லது தெரிந்தே சிவராசனை பிடிக்காமல் விட்டது உண்மையாக இருக்க வேண்டும். அப்படித்தானே.? எங்களில் யாரையாவது ஒருவரை பின்தொடர்ந்து கண்காணித்திருந்தாலும் சிவராசனை பிடித்திருப்பது சாத்தியம்தானே? பிறகு ஏன் சிவராசனை பார்த்து சி.பி.ஐ. விலகி விலகி ஓடிக்கொண்டிருந்தது என்பதற்கு, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுசாமியின், 'ராஜீவ் காந்தி படுகொலை. தூக்குக் கயிற்றில் நிஜம்' என்ற புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் எல்லாமும் விளங்கும்.

இதுதவிர, சிவராசனை கைது செய்யக்கூடிய மேலும் பல வாய்ப்புகள் நிறைய இருந்தன. சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைமையிடமான மல்லிகை கட்டடத்தில், ராஜீவ் கொலையாளிகளைப் பற்றித் தகவல் தருவதற்கு என்றே பல தொலைபேசி எண்களை அறிவித்திருந்தார்கள். அந்தத் தொலைபேசிகளைக் கேட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பதற்கு என்று ஒரு அதிகாரிகள் குழுவைப் போட்டிருந்தார்கள். அவர்கள் யாருக்குமே தமிழ் சுத்தமாக தெரியாது. ஆங்கிலமும் தெரியவில்லை. தெலுங்கு மற்றும் இந்தி தெரிந்தவர்களை மட்டுமே நியமித்திருந்தார்கள். திட்டமிட்டு வேண்டும் என்றே அப்படி செய்திருக்கிறார்கள். இதை சி.பி.ஐயில் இருந்த ஆய்வாளர் ஜெபமணி மோகன்ராஜ் இணையத்தளம் ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில், 'தமிழ்மொழி தெரியாத அதிகாரிகளைத்தான் அந்த இடத்தில் வைத்திருந்தார்கள்' என ஆதங்கத்தோடு அம்பலப்படுத்தியிருக்கிறார். அதாவது, சிவராசன் குறித்த செய்திகளை சி.பி.ஐ. அறிய விரும்பவில்லை என்றே தெரிகிறது.

ஓகஸ்ட் 19ஆம் திகதி அன்றுதான் சிவராசன் - சுபா பெங்களூரில் தற்கொலை செய்து கொண்டதாக சொன்னார்கள். இடைப்பட்ட 2 மாதங்களில் சிவராசனை உயிருடன் பிடிப்பதற்கு எத்தனையோ வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக சாட்சியங்கள் உள்ளன. ஆனால், ஒவ்வொரு முறையும் மயிரிழையில் தப்பிவிட்டார் என்பது போல், அதாவது இருந்த இடத்தைவிட்டு சிவராசன் தப்பிப் போன மறுகணமே அங்கு போனதாக சொல்லிக்கொண்டார்கள். ஏன அந்த கண்ணாமூச்சி நாடகம்?

இறுதியாக, பெங்களூரில் சிவராசன் இருந்த வீடு சுற்றி வளைக்கப்பட்ட போதும் உடனடி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. 20 மணி நேரம் வேண்டும் என்றே தாமதம் செய்தார்கள். மயக்க மருந்துக்காகத்தான் காத்திருந்தார்கள் என்றால் அதை டில்லியில் இருந்து இந்திய இராணுவ விமானத்தின் மூலம் பெங்களூருக்கு எடுத்து வர ஒரு மணிநேரம் போதுமே. ஏன் இந்த நாடகம் நடத்தினார்கள்? சிவராசனை உயிருடன் பிடிப்பதை தவிர்த்தார்கள்.

அதுதான் உண்மை. 'சிவராசனை உயிருடன் பிடிக்க சி.பி.ஐ. விரும்பவில்லை' என்று இந்த வழக்கில் கைதாகி தூக்குத் தண்டனை பெற்று பிறகு விடுதலையான பெங்களூர் ரங்கநாத் நன்றாகவே தெளிவுபடுத்தி உள்ளார்.

(வலிகள் தொடரும்...)

# ஜேர்மனியில் கிறிஸ்மஸ் சந்தைக்குள் லொறியை ஏற்றியது ஐ.எஸ்.தீவிரவாதி



## விசாரணையில் புதிய தகவல்

ஜேர்மனியில் 12 பேர் பலியான விபத்தில் கிறிஸ்மஸ் சந்தைக்குள் லொறியை ஏற்றியது ஐ.எஸ். தீவிரவாதி என தெரிய வந்துள்ளது.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில் கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி சந்தை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை அங்கு கூடிய ஏராளமான மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கான பொருட்களை வாங்கி கொண்டிருந்தனர்.

அப்போது அதிவேகமாக வந்த ஒரு லொறி கிறிஸ்மஸ் சந்தைக்குள் புகுந்தது. கடைகள் மீது மோதியது. அதில் லொறி சக்கரத்தில் சிக்கிய பலரின் உடல்கள் நசுங்கின.

இச்சம்பவத்தில் 12 பேர் பலியாகினர். 24 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

ஜூலை 14ஆம் திகதி நைஸ் நகரில் பிரெஞ்ச்ரிவைராவில் நடந்தது போன்று இருந்தது. அதில் ஐ.எஸ். தீவிரவாதி ஒருவன் கூட்டத்துக்குள் லொறியை ஏற்றி 86 பேரை கொன்றான். அதே போன்று இச்சம்பவமும் நடந்துள்ளது. ஆனால் இது விபத்து என பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். அந்த லொறியை செலுத்திய 23 வயது நபரை கைது செய்தனர்.

விசாரணையில் அவன் பாகிஸ்தானில் இருந்து ஜேர்மனிக்கு அகதியாக வந்து தஞ்சம் அடைந்தவன் என தெரிய வந்தது. அவன்லொறியை ஏற்றி பொதுமக்களை கொன்றதற்கான போதிய ஆதாரம் இல்லாததால் விபத்து என முடிவு செய்து அவனை பொலி ஸார் விடுவித்தனர்.

இதற்கிடையே ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய 'அமாப்' என்ற செய்தி நிறுவனம் ஒரு தகவல் வெளியிட்டது. அதில் 'ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் வீரன் பெர்லினில் படுகொலையை நிகழ்த்தியிருக்கிறான். அமெரிக்க கூட்டணி நாடுகளை சேர்ந்த மக்களை குறி வைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க நட்பு நாடான ஜேர்மனி, ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தகவலால் லொறியை ஏற்றிய பாகிஸ்தான் அகதி ஒரு ஐ.எஸ். தீவிரவாதி என தெரிய வந்துள்ளது. எனவே அவனை மீண்டும் தேடி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஜேர்மனி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே பொது மக்கள் மீது ஏற்றப்பட்ட லொறியின் சாரதி இருக்கை அருகே ஒருவர் சடலமாகக் கிடந்தார். போலந்து நாட்டை சேர்ந்த அவர் லொறி சாரதியாக இருக்கலாம். அவரை சுட்டுக்கொன்று விட்டு லொறியை கடத்தி வந்து தாக்குதல் நடத்தியிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

எதிர்வரும் 2017ஆம் ஆண்டில் நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் ஏஞ்சலா மெர்கல் 4 ஆவது தடவையாக ஜனாதி பதி பதவிக்கு போட்டியிடுகிறார். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை மீறி பல இலட்சம் அகதிகளுக்கு ஜேர்மனியில் அடைக்கலம் கொடுத்தார். இந்த நிலையில் ஜேர்மனியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திவரும் தாக்குதல் அவருக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

# 2 சுவர்களுக்கு இடையில் மாட்டித் தவித்த சிறுவன்



நைஜீரியாவில் மூன்று நாட்கள் சுவருக்கு மத்தியில் சிக்கித்தவித்த சிறுவனை பொதுமக்கள் காப்பாற்றியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நைஜீரியா நாட்டின் ஒடுடுவா பகுதியைச் சேர்ந்தவர் அடுராக்பிமி சுக (வயது 12). இவர் தன் வீட்டில் சுமார் 12 அடி அங்குலமுள்ள மதில் சுவர் ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது திடீரென்று சிறுவன் அந்த 12 அடி அங்குலமுள்ள சுவர் இடைவெளியில் விழுந்துள்ளான். இரு சுவருக்கும் மத்தியில் விழுந்ததால் அங்கிருந்தவர்கள் யாருக்கும் இச்சிறுவன் தென்படவில்லை.

ஆனால் கீழே விழுந்த பதற்றத்தில் சிறுவன் தொடர்ந்து கூச்சலிட்டுள்ளார். இது போன்று தொடர்ந்து மூன்று நாட்கள் சத்தம் போட்டுள்ளான். அங்கிருந்த பொது மக்கள் பதற்றமடைந்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், அந்த மதில் சுவரை உடைக்கும் படி கூறியுள்ளனர். மதில் சுவரை உடைக்கும் போது சிறுவன் தொடர்ந்து கூச்சலிட்டுள்ளான். இதனால் பதற்றமடைந்த அவர்கள் சற்று நிதானமாக சுவரை உடைக்கத் தொடங்கியுள்ளனர்.

அப்போது சிறுவன் தூசி படிந்த நிலையில் அழுது கொண்டிருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளனர். வெளியே வந்த சிறுவன் உடனடியாக தன் பாட்டியின் மடியில் அமர்ந்து அழுத சம்பவம் அங்கிருந்தவர்களை கண்கலங்க வைத்துள்ளது. (இ-10)

# துருக்கியில் ரஷ்ய தூதுவரை சுட்டுக்கொன்ற கொலையாளியின் பெற்றோரிடம் விசாரணை

(அங்காரா)

துருக்கியில் ரஷ்ய தூதுவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, கொலையாளியின் பெற்றோர் உள்ளிட்ட 6 பேரை பொலிஸார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

துருக்கி தலைநகர் அங்காராவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அந்நாட்டிற்கான ரஷ்ய தூதர் அண்ட்ரிவ் கொலோவ் கொல்லப்பட்டார். பின்னர் பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அந்த மர்ம நபரும் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் துருக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஆல்டின்டாஸ் என்பது விசாரணையில் தெரியவந்தது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அதே பகுதியில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் வெளியே மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தினார்.



அந்நடவடிக்கை செய்யப்பட்டுள்ள நிலையில், பிற பகுதிகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூடப்பட்டன. இந்நிலையில், தூதுவர் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தி பதில் அளிக்க வேண்டும் என் ரஷ்யா வலியுறுத்தியது. மேலும், இது பற்றி விசாரிப்பதற்காக ஒரு குழுவும் துருக்கிக்கு விரைந்தது.

இந்நிலையில், ரஷ்ய தூதுவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கொலை யாளி அல்டின்டாசின் தாய், தந்தை, சகோதரி, மாமா உள்ளிட்ட 6 பேரை பொலி ஸார் பிடித்து தீவிர விசா ரணை நடத்தி வருகின்ற னர்.

ஆட்சியை கவிழ்க்க முய ன்றதாக குற்றம்சாட்டப்பட் டுள்ள பெதுல்லா குலெனின் குழுவினருக்கும் இந்த தாக் குதல் நடத்திய நபருக்கும் தொடர்பு இருக்கலாம் என அங்காரா நகர மேயர் தெரி வித்துள்ளார். (இ-10)

# ஐசாக் நியூட்டனின் புத்தகம் ரூபாய் 25 கோடிக்கு ஏலம்




உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் எழுதிய புத்தகத்தின் பிரதி 37 இலட்சம் டொலருக்கு (சுமார் ரூ. 25 கோடி) ஏலத்தில் விற்பனையாகி சாதனை படைத்தது.

புவியீர்ப்பு விசை, பருப்பொருட்களின் இயக்க விதிகள் உள்ளிட்டவை ஐசாக் நியூட்டனின் மகத்தான கண்டுபிடிப்புகள். அவரது அறிவியல் கண்டுபிடிப்புகளை விபரித்து எழுதிய "பிரின்சிபியா மேத்தமேட்டிகா" என்ற புத்தகத்தை 1687ஆம் ஆண்டு வெளியிட்டார். லத்தீன் மொழியில் எழுதப்பட்ட அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதி ஏலத்தில் விற்பனைக்கு வந்தது. நியூயோர்க்கில் உள்ள பிரபல கிறிஸ்டீஸ் ஏல நிறுவனம் அதனை விற்பனைக்கு கொண்டு வந்தது. அந்தப் புத்தகம் 15 இலட்சம் டொலருக்கு (சுமார் ரூ. 10 கோடி) விற்பனையாகும் என்று கிறிஸ்டீஸ் நிறுவனம் கருதியது. இந்த நிலையில், அந்த அரிய புத்தகம் 37.9 இலட்சம் டொலருக்கு (சுமார் ரூ. 25 கோடி) ஏலத்தில் விற்பனையாகியது. அவ்வளவு பெரிய தொகை கொடுத்து வாங்கியது யார் என்பது தெரிவிக்கப்படவில்லை. விஞ்ஞான நூலொன்று இத்தனை அதிக விலைக்கு விற்பனையானது இதுவே முதல்முறை. இதற்கு முன் அதிக விலைக்கு விற்பனையான புத்தகமும் ஐசாக் நியூட்டனின் "பிரின்சிபியா மேத்தமேட்டிகா" தான் என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டன் அரசர் ஜேம்ஸுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட முதல் பதிப்புப் பிரதி இதே கிறிஸ்டீஸ் நியூயோர்க் ஏல விற்பனை நிலையத்தில் 25 இலட்சம் டொலருக்கு கடந்த 2013ஆம்ஆண்டு விற்பனையானது. (இ-10)

# குடும்பத்துடன் உயிர் தப்பிய அமீரக துணைப் பிரதமர்

பாகிஸ்தானின் தெற்கு மாகாணமான பலுசிஸ்தான் குச்சாக் பகுதியிலுள்ள பாஞ்குர் என்ற இடத்தில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் அமீரக துணைப்பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் உயிர் தப்பினர்.

அமீரக துணை பிரதமரும், உள்துறை அமைச்சருமான லெப்டினன்ட் ஜெனரல் ஷேக் சைப்பின் ஜாயித் அல் நஹ்யான், பறவைகளை வேட்டையாடுவதில் தேர்ச்சி பெற்றவர். இதன் காரணமாக பாகிஸ்தானில் நடைபெறும் ஹூப்ரா பறவை மற்றும் கழுகு வேட்டைக்காக குடும்பத்துடன் சென்றுள்ளார்.



பறவை வேட்டை நடக்கும் பாகிஸ்தானின் தெற்கு மாகாணமான பலுசிஸ்தான் குச்சாக் பகுதியில் உள்ள பாஞ்குர் என்ற இடத்திற்கு அரச குடும்பத்தை சேர்ந்தவர்களுடன் அமீரக துணை பிரதமர் ஷேக் சைப்பின் ஜாயித் அல்நஹ்யான் சென்றார். அங்கு பறவைகள் கூடும் பகுதியில் அனைவரும் நின்று பறவைகளை பார்த்துக்கொண்டு இருந்தபோது திடீரென்று மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம மனிதர்கள் 10 பேர் அந்த பகுதியை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் தங்கள் கைகளில் வைத்து இருந்த துப்பாக்கியை எடுத்து அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியாக சுட ஆரம்பித்தனர். உடனே அரச குடும்பத்தை சேர்ந்த அனைவரும் தரையில் படுத்து கொண்டனர்.

துப்பாக்கிச் சூடு நடக்கும் சத்தம் கேட்டதும் சிறிது தூரத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த பாகிஸ்தான் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தாக்குதல் நடத்தியவர்களை நோக்கி பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். அவர்கள் சரமாரியாக சுடத் தொடங்கியதும் மர்ம மனிதர்கள் 10 பேரும் அங்கிருந்து வேகமாக தலைமறைவாகி விட்டனர். அமீரக துணைப் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் உயிர் தப்பினர் என்று பாகிஸ்தான் பொலிஸ் மற்றும் வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது. (இ-10)

# சிறுவர் அரங்கம்

## புதையல்

...நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.


"வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது," என்று கேட்டான்.

"அப்படியே ஆகட்டும்," என்று குரல் வந்தது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான். "இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போலச் செல்வச் செழிப்புடன் வாழலாம்.

வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.



வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே," என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, "வண்டியை நன்றாகப் பார்," என்றான்.

நன்றாகப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின.

என்ன பிரயோஜனம். அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்த சாரதி.

(முற்றும்)

## 12.2016 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1790 - துருக்கியின் இஸ்மாயில் நகரை ரஷ்யாவின் சுவோரவ் என்பவனும் அவனது படைகளும் கைப்பற்றின.
- 1807 - வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகளை நிறுத்தும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டது.
- 1845 - பஞ்சாபில் ஃபெரோசிஷா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் சீக்கியர்களைத் தோற்கடித்தனர்.
- 1849 - ரஷ்ய எழுத்தாளர் பியோதர் தஸ்தயெவ்ஸ்கியின் மரணதண்டனை கடைசி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.
- 1851 - இந்தியாவின் முதலாவது சரக்கு ரயில் உத்தராஞ்சல் மாநிலத்தில் ரூர்க்கீ நகரத்தில் ஓடவிடப்பட்டது.
- 1915 - மலேசியாவின் இலங்கைத் தமிழரால் வாங்கப்பட்ட யாழ்ப்பாணம் என்ற விமானம் பிரித்தானிய வான்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 1937 - லிங்கன் சுரங்கம் நியூயோர்க் நகரில் பொதுமககளுக்காகத் திறந்துவிடப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: போரில் பாவிப்பதற்கென வீ-2 ஏவுகணைகளை உற்பத்தி செய்ய ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: வியட்நாமில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக வியட்நாம் மக்கள் இராணுவம் அமைக்கப்பட்டது.
- 1963 - லக்கோனியா என்ற டச்சுக் கப்பல் போர்த்துக்கலில் மூழ்கியதில் 128 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - ஒரு வார சண்டையின் பின்னர் இயோன் லியெஸ்கு, கம்யூனிச ஆட்சியாளரான நிக்கலாய் செய்செஸ்குவை வீழ்த்தி ருமேனியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1989 - கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் பேர்லினில் பிரித்த "பிராண்டன்பேர்க் கதவு" 30 ஆண்டுகளின் பின்னர் திறந்து விடப்பட்டது.
- 1990 - மார்ஷல் தீவுகள், மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஆகியன விடுதலையை டைந்தன.

### பிறப்புக்கள்

- 1666 - குரு கோவிந்த் சிங், சீக்கிய குரு. (இ. 1708)
- 1853 - அன்னை சாரதா தேவி. (இ. 1920)
- 1858 - ஜாக்கோமோ புச்சீனி, இத்தாலிய இசையமைப்பாளர். (இ. 1924)
- 1887 - இராமானுசன், இந்தியக் கணிதவியலாளர். (இ. 1920)

### இறப்புகள்

- 1995 - ஜேம்ஸ் மீட், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1907)
- 2006 - வி. நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர். (பி. 1910)
- 2008 - லான்சானா கொண்டே, கினியின் அரசுத் தலைவர். (பி. 1934)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 100 | 90 | 60 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 70 | 120 | 100 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 60 | 80 | 70 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 40 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 30 | 80 | 20 | 30 | 40 | 60 | 30 |
| கரட் | 100 | 80 | 80 | 80-140 | 80 | 160 | 100 |
| பூசணி | 60 | 50 | 35 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 70 | 50 | 60 | 70 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 100 | 110 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 220 | 120 | 240 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 70 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 90 | 80 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 100 | 100 | 70 |
| கறி மிளகாய் | 160 | 100 | 130 | 160 | 120 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 400 | — | 250 | — | 300 | 160 | — |
| போஞ்சி | 120 | 160 | 260 | 120 | 130 | 100 | 140 |
| கத்தரித்தும்பிள்ள | 30 | 40 | 50 | 40 | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 40 | 50 | 20 | 50 | 40 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 350 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 20-40 | 50 | 35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 300 | 400 | 210 | — | 300 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — | 240 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 50 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 120 | 50 | 80 | 80 | 100 | 70 |


# கலைத் தரிசனம்

## கலாபூஷணம் நடராசா இராமநாதன் அவர்களுடனான நேர்காணல்

***யாழ்ப்பாணம் அரியாலை மண்ணில் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி பிறந் தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.ஆனந்தா வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றார். 2015 இல் 'அழுத்தும் நிஜங்கள்' என்ற சிறு கதைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். கவிஞர், நடிகர், அறிவிப்பாளர், எழுத்தாளர் எனப் பல்துறைகளில் சிறந்து விளங்குகின்றார். இவர் கலாபூஷண,கலைச்சிகரம், நடிகமாமணி, விஸ்வம் ராமண்ணா, கலைச்சுடர் ஆகிய விருதுகளையும் பெற்றார். கலாபூஷணம் நடராசா இராமநா தன் அவர்கள் அரங்கிலே ஒலிவாங்கியைப் பிடித்து அறிவிப் புப் பணியைத் தொடர்ந்தால் அரங்கே அமைதியாகி ஆனந்தம் கொள்ளும். அவர் வலம்புரிக்கு அளித்த செவ்வியினை இங்கே தருகின்றோம்.***

**நீங்கள் இலக்கியத் துறைக்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

இலக்கியத் துறைக்குள் எப்போது நுழைந்தேன். எப்படி நுழைந்தேன் என்று சொல்ல முடியாது. மிகச் சிறுவயதில் இருந்தே எனக்கு வாசிப்புப் பழக்கம் அதிகம். அந்த வகையில் எங்கள் ஊரில் உள்ள சனசமூக நிலையங் ளில் சஞ்சிகைகள், பத்திரிகை கள் என்பவற்றைத் தேடித் திரிந்து வாசிப்பேன். தினந்தந்தியில் 'கன்னித்தீவு', கல்கியில் 'வீரவிஜயன்'



போன்றவற்றோடு அப்புலிமாமாவில் ஆரம்பித்தவாசிப்புப்பழக்கம் இன்று வரை தொடர்கின்றது. மேலும்வாசிப்போடுநின்றஎன்னை அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 'அறிவொளிக்கலை' காந்தி சனசமூக நிலையத்தின் 'உதயம்' அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 'கீரன்' ஆகிய கையெழுத்துச் சஞ்சிகைகள் எழுத்துலகில் கால்பதிக்க உதவின.

**நீங்கள் சிறந்த நடிகராகவும் சிறந்த அறிவிப்பாளராகவும் உள்ளீர்கள். இது பற்றி?**

அந்த நாட்களில் நாடகங்கள் பார்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். 'சினிமா' பார்க்க வேண்டுமானால் திரையரங்குகளுக்குத் தான் போக வேண்டும். அது தவிர்ந்த வேளைகளில் நாட கமே கலைப்பசிக்குத் தீனி போட்டது என்று சொல்லலாம். அந்த வகை யிலே நாடகம் எனது ஆவலைத் தூண்டியது. அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவின் நாடகங்கள் பலவற் றைப் பார்த் ததன் ஊடாக நாடகத்தின் பால் ஏற்பட்ட ஈர்ப்பு அதிகரித்தது. பல்வேறு நாடகமன்றங்களின் நாடகங்களையும் பாத்துப் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் என்னை நாடக நடிகனாக்கின.

கலாபூஷணம் V.K. பாலசிங்கம், V.K. இரத்தினம், V.K. செல்லத்தம்பி, கவிஞர் வே. ஐயாத்துரை , அரியாலை 'கர்ணன்' சண்முகலிங்கம் போன்றோரது பல்வேறு திறமைகளையும் என்னுள் உள்வாங்கி இந்த நாடகத் துறையில் நான் ஈடுபாடு கொண்டேன். மேலும் சமூக நாடகங்களில் ஈடுபாடு கொள்ள கலை ஞர்கள் இ.இராசையா, நா. அருமைலிங்கம் போன்றோரின் நடிப்பு, இயக்கம் என்பன எனக்கு உந்துசக்தியாக இருந்தன. கலைஞர்கள் செ.செல்வதாஸ், சி.முருகானந்தன், சு.மகேஸ்வரன் போன்றோரின் 'என்மீதான கவனமும்' என்னை சமூக நாட கத்துறையில் நிலை நிறுத்தியது எனலாம். இவற்றுடன் சிவாஜிகணேசன், S.S.ராஜேந்திரன் ஆகியோரின் நடிப்பும் வசனப் பேச்சும் என்னுள் சிறிதளவு தொற்றிக் கொண்டதால் சமூக நாடக உலகில் காலூன்ற முடிந்தது என்று எண்ணுகிறேன். அத்துடன் யாழ்.பல்கலைக்கழகமும் யாழ.மாவட்ட கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய 'நாடகமும் அரங்கியலும்' பயிற்சிப் பட்டறையில் ஒரு வருடகால கல்வியைக் கற்றதும் நாடக உலகில் நான் மிளிரக் காரணமாயிருந்தது என எண்ணுகிறேன்.

அறிவிப்பாளர் என்ற நிலைக்கு வர இலங்கை வானொலியே முதலில் ஊக்கத்தைத் தந்தது என்பேன். இலங்கை வானொலியின் அன்றைய அறிவிப்பாளர் திரு.மயில்வாகனம் அவர்களின் உச்சரிப்பும் குரல் இனிமையும் சிறந்த முறையிலான தமிழ்ப்பேச்சும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. தொடர்ந்து கலைமகளின் சீ.வைகுந்தசாமி ஆசிரியர் வே. நாகலிங்கம், அரியாலையின் லோகேஷ்,ரஞ்சன் ஆகியோரின் அறிவித்தல் முறைகளும் எனக்கு பற்பல பயிற்சிகளைத் தந்தன. இவற்றை மானசீகமாக ஏற்றுக்கற்றுக் கொண்டு அறிவிப்புத் துறையில் ஈடுபட்டேன். எனது தந்தையார் சொற்களின் இறுதி எழுத்துக்களை உச்சரிக்கும் முறையை அடிக்கடி நினைவூட்டுவார். அவற்றையும் கருத்திற்கொண்டு இன்று வரை அறிவிப்பாளனாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகிறேன்.

**நீங்கள் நடித்த நாடகங்கள் பற்றி...?**

நடித்த நாடகங்கள் பற்றிக் குறிப்பிடுவதானால் எனது 8 வயதில் இருந்து சரித்திர, புராண, சமூக, நவீன நாடகங்கள் என்ற வகையில் 37 நாடகங்கள் நடித்துள்ளேன். சரித்திர, புராண ,இசை நாடகங்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த காலப்பகுதியில் 1970 ஆம் ஆண்டு ஸ்ரீ கலை மகள் நாடக சபாவினால் மேடையேற்றப்பட்ட நெஞ்சம் மறக்குமா? என்ற நாடகம் மிகப்பெரிய வெற்றியை அளித்தது. இதில் செ.செல்வ தாஸும் நானும் இரண்டு கதா நாயகர்கள் வேடங்களில் நடித் தோம். வெறுமனே நாடகங்களை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு கதாநாயகன் அந்தஸ்துத் தந்து என்னை மேடையேற்றியவர் செ. செல்வ தாஸ் அவர்களே. தொடர் ந்து ச.புஸ்பராஜனின் கண்ணாடி, வசந்த வாழ்வு, சி.முருகானந்தனின் அந்தரத்தில் சில பறவைகள், குயிலோசை, அடுக்குச் செவ் வரத்தை, கவிஞர் நாவண்ணனின் 'பலியும் பழியும்' (இயேசு காவியம்) போன்ற நாடகங்கள் எனது நடிப்புத்திறனை வெளிக் காட்ட உதவின. அரியாலையூர் நாடகக் கலாமணி ப. செல் வரத்தினம் அவர்கள் சந்திரமதியாக நடித்த அரிச்சந்திரா மயான காண்டம் இசைநாடகத்தில் சத்தியகீர்த்தியாக நான் வேடந்தாங்க S.G.சாந்தன் அரிச்சந்திரனாக நடித்தார். மேலும் கலாபூஷணம் இ.கணேசரத்தினம், சுழிபுரம் சிவ ராசா, கலாபூஷணம் தெரியநாதன், இலங்கை வானொலி புகழ் S.விவேகானந்தன் ஆகியோர் அரிச்சந்திரனாக நடிக்க சத்திய கீர்த்தி வேடத்தில் நான் நடித்துள் ளேன். 'பண்டார வன்னியன்' இசை நாடகத்தில் கலைமகளின் கலைச்சிகரம் வ.கற்கண்டு அவர்கள் பண்டாரவன்னியனாக நடிக்க காக்கைவன்னியன் வேடத்தில் நான் நடித்துள்ளேன்.

**சிறந்த அறிவிப்பாளராக வருவதற்கு செய்ய வேண்டியது என்ன?**

அறிவிப்பாளராக வருவதற்கு முதலில் நல்ல குரல் வளம் இருக்க வேண்டும். மொழி அறிவு, அறிவிப்புக்களம் சார்ந்த அறிவு, தேடல் என்பன வேண்டும். உச்சரிப்பு சிறப்பாக இருக்க வேண்டும். அவைஞர்களுக்கு சங்கடம் ஏற்படாத வகையில் விடயத்தை விளக்கும் திறன் வேண்டும். ஒருமை, பன்மை, அஃறிணை, உயர்திணை என்பவற்றில் கூடுதல் கவனம் வேண்டும். எதற்கும் ஓர் அறிவிப்புக்களத்துக்குச் செல்ல முன் 'ஆயத்தப்படுத்தல்' என்பது மிக மிக முக்கியமாகின்றது. அறி விப்புக்களம் நாளுக்குநாள் மெருகு பெற்று புதுப்புது மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதால் அந்த மாற் றங்களுக்கேற்ப அறிவிப்பாளர் களும் தங்களை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையேல் அறிவிப்பு உலகில் இருந்து அவர் கள் காணாமற் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**2015 ஆம் ஆண்டு 'அழுத்தும் நிஜங்கள்' என்ற சிறு கதைத் தொகுப்பினை வெளியிட்டீர்களே. உங்களின் அடுத்த கட்ட படைப்புகள் பற்றி?**

'அழுத்தும் நிஜங்கள்' சிறுகதைத் தொகுதி பலராலும் பாராட்டப்பட்ட ஒரு நூலாக விளங்குகின்றது. அதில் இடம்பெற்ற அத்தனை சிறுகதைகளும் போட்டிகளின் போது தேர்வாளர்கள் பலரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுகள் பெற்ற கதைகளாக விளங்குகின்றன.

மேலும் 'அனல்மூச்சு' என்ற நாவலையும் கவிதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிடவுள் ளேன். இவற்றுடன் ஏழு சிறுகதைகள் அடங்கிய இறுவெட்டு ஒன்றை வெளியீடு செய்யும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

**கலையுலகில் நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

சமூகநாடகத்துறையிலே 1973 ஆம் ஆண்டு இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கத்தால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் 'காலத்தை வென்றவள்' என்ற நாடகம் முதற் பரிசைப் பெற்றது.

அதில் நான் டாக்டர் இராஜேந்திரன் என்ற கதாநாயகன் வேடத்தில் நடித்தேன். தொடர்ந்து நக்கீரன் கலைத்துறையின் அந்தரத்தில் சில பறவைகள், அடுக் குச் செவ்வரத்தை என்பன மன் றத்துக்கான தங்கப்பதக்கங்களை வென்று கொடுத்தன. சிறந்த நடிகனுக்கான விருதுகளை எனக்குப் பெற்றுத்தந்தன. நடிகர் போட்டிகளில் பல தடவைகள் முதற் பரிசுகளை பெற்றுள்ளேன். பாட்டுக்கேற்ற நடிப்பு, தேனிசை மழை பாடல் போட்டிகளிலும் பல பரிசுகள் பெற்றுள்ளேன். ஏழு நாடகங்களை எழுதி இயக்கியுள் ளேன்.

எழுத்துலகில் சிறுகதை கவிதை, பாடலாக்கம் போன்ற போட்டிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பரிசுகளைப் பெற்றுள்ளேன். ஜேர்மன் தமிழ்ச்சங்கம், கொழும்பு தமிழ்ச் சங்கம், அவுஸ்திரேலியாவில் எஸ். பொ. நினைவான சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளேன். அத்துடன் பிரதேச மாவட்ட மாகாண மட்ட கலைப் போட்டிகளில் முதற் பரிசுகள் பலவற்றைப் பெற்றமையை கலையுலகில் எனக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றிகளாகவே கருதுகின்றேன். விருதுகள் என்ற வகையில் இலங்கையின் அதி யுயர் விருதான கலாபூஷணம் விருது மற்றும் கலைமகளின் கலைச்சிகரம், நடிகமாமணி, விஸ்வம் ராமண்ணா, புதுக்குடி யிருப்பு பிரதேச செயலகத்தால் வழங்கப் பட்ட புதுவைக்கலைச் சுடர் போன்றவற்றைக் குறிப் பிடலாம்.

**உங்களின் 'அழுத்தும் நிஜங்கள்' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற பதினான்கு கதைகளில் தங்களுக்கு மிகப் பிடித்தமான கதையென்று எதைச் சொல்வீர்கள்? அதற்கான காரணத்தையும் கூறுங்கள்.**

எல்லாக்கதைகளுமே மிகச் சிறப்பான கதைகள்தான். இவற்றுள் 'மழை' என்ற சிறுகதை எனக்கு மிகவும் பிடித்த கதையாக அமைந்துள்ளது. இத்தொகுப்பில் மேசன் தொழி லாளர்கள் தொடர்பான மூன்று கதைகள் இடம்பிடித்துள்ளன.

'மழை' என்ற கதையும் மேசன் தொழிலாளர்களின் அவலத்தைச் சொல்லுகின்ற கதைதான். மாரிகாலத்து அடைமழை வேளை மேசன் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் படுகின்ற துன்பங்களை இதனூடு வெளிக் கொணர்ந்துள்ளேன். இந்த மேசன் தொழிலாளர்களின் விடிவிற்காக எனது பேனா சிந்திய மையினூடாக இவர்களுக்குஒருவிடிவுஏற்படவேண்டும்என்பதே எனது அவாவாக உள்ளது.

**இறுதியாக நீங்கள் கலை யுலகிற்கு யானறிந்து கூறுவது...?**

கலையுலக வாழ்வு என்பது மனதுக்கு அமைதியையும் நிறைவான திருப்தியையும் தரும் ஒரு புனித வாழ்வு. வெறுமனே களியாட்டமாகவோ இந்த கலையுலக வாழ்வைக் கருதாது மக்களின் விடிவுக்கான மார்க்கமாக இந்தக் கலை வாழ்வை நாம் பிரயோகித்தால் நமக்கு முழு அமைதியையும் திருப்தியையும் இந்தக் கலை வாழ்வு தரும் என்பது உண்மையே.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# பட்டாசு சந்தையில் திடீர் தீ! 31 பேர் பலி; 70 பேர் காயம்



மெக்சிக்கோவில் பட்டாசு விற்பனைச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் 31 பேர் பலியாகினர். 70 பேர் காயமடைந்தனர்.

மெக்சிக்கோ தலைநகர் மெக்சிக்கோ சிட்டியின் புறநகரான துல்டெப்க் பகுதியில் பட்டாசு விற்பனை செய்யும் சந்தை உள்ளது. இங்கு ஏராளமான பட்டாசு கடைகள் உள்ளன.

பொதுவாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் கிறிஸ்மஸ், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகை காலங்களில் பட்டாசுகளை கொளுத்தி வானவேடிக்கை நடத்துவது வழக்கம்.

தற்போது அப்பண்டிகைகள் வர இருப்பதால் அங்கு ஏராளமான ரக பட்டாசுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 2.50 மணி அளவில் (இந்திய நேரப்படி இரவு 8.50) ஒரு பட்டாசு கடையில் திடீரென தீப்பிடித்தது.

அந்த 'தீ' மளமளவென பரவி அடுத்தடுத்த கடைகளிலும் பிடித்தது. இறுதியில் அந்த சந்தையில் உள்ள அனைத்து கடைகளிலும் தீப்பிடித்தது. இதனால் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன.

இதனால் கடும் புகைமூட்டம் ஏற்பட்டது. இந்த தீ விபத்து நடந்த போது பட்டாசுகள் வாங்க ஏராளமானோர் குவிந்து இருந்தனர். அவர்கள் உயிர் தப்பிக்க அங்குமிங்கும் ஓட்டம் பிடித்தனர்.

தீயை அணைக்க ஏராளமான தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டன. இருந்தும் தீ விபத்தில் 31 பேர் உடல் கருகி பலியாகினர். 70இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலியானோர் எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.

இந்த தீ விபத்து மெக்சிக்கோவில் அனைவரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது. தீவிபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு மெக்சிக்கோ ஜனாதிபதி என்ரிக் பெனாநியடோ ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார். தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. அது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (இ-10)

# பாகிஸ்தானில் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் விரைவில் வாபஸ்

கறுப்பு பணத்தை ஒழிக்க இந்தியாவை தொடர்ந்து பாகிஸ்தானிலும் ரூ.5 ஆயிரம் நாணயத்தாள்கள் செல்லாது என அறிவிக்கப்பட்ட உள்ளது.

இந்தியாவில் ரூ.500 மற்றும் ரூ.1000 என உயர் மதிப்புடைய ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என பிரதமர் நரேந்திரமோடி கடந்த மாதம் (நவம்பர்) 8 ஆம் திகதி அறிவித்தார்.

கறுப்பு பணத்தை ஒழிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அண்டை நாடான பாகிஸ்தானிலும் ரூ.5 ஆயிரம் நாணயத்தாள்கள் செல்லாது என அறிவிக்கப்பட்ட உள்ளது.

அதற்கான தீர்மானம் 'செனட்' சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் பிரதான எதிர்க்கட்சியான 'பாகிஸ்தான் மக்கள் கட்சியின் உறுப்பினர் உஸ்மான் சபியுல்லா இந்த தீர்மானம் கொண்டு வந்து தாக்கல் செய்தார்.

சட்டவிரோதமான பணப் புழக்கம், வங்கிகள் மூலம் பணப்பரிமாற்றம் ஆவணங்கள் இல்லாத பொருளாதார செயற்பாட்டை குறைக்கவும் இத்தகைய நடவடிக்கை தேவை. நாட்டில் சட்டவிரோதமான பணப்பரிமாற்றம் மற்றும் கறுப்பு பண சுழற்சியில் ரூ.5 ஆயிரம் நாணயத்தாள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே, அவற்றை வாபஸ் பெற வேண்டும். இந்தியாவில் புழக்கத்தில் இருந்த ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்கள் வாபஸ் பெறப்பட்டன. இதனால் அங்கு தேவைகள் அதிகரித்துள்ளன. அது போன்று பாகிஸ்தானிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் மூலம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களின் மதிப்பீட்டையும், வரிஏய்ப்புகளையும் கண்டுபிடிக்க முடியும்' என்றார். (இ-10)

# தலைமைச் செயலாளர் வீட்டில் சோதனை

சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் மற்றும் அவரது உறவினர் வீடுகளிலும் வருமான வரித்துறையினர் நேற்றுக் காலை அதிரடி சோதனை நடத்தினர். சென்னை, சித்தூர், பெங்களூர் உட்பட 10இற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரேநேரத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தொழிலதிபர் சேகர் ரெட்டி, அவரது சகோதரர் மற்றும் உறவினர் வீடுகளில் நடத்தப்பட்ட வருமான வரித்துறை சோதனைகளின் தொடர்ச்சியாக நேற்று சோதனை நடத்தப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ஏற்கனவே சென்னை, வேலூர் உள்ளிட்ட இடங்களில் ரெட்டியின் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனைகளின்போது பல கோடி ரூபாய் புதிய நாணயத்தாள்கள், கணக்கில் காட்டப்படாத தங்க நகைகள் உள்ளிட்டவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை முதலே வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் இறங்கியுள்ளனர்.

முதல்வர் ஓ.பி.எஸ்., பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் இரண்டு நாட்கள் முன்புதான் சந்தித்து, வர்தா புயல் பாதிப்புக்கு 22,500 கோடி ரூபாய் நிவாரண உதவி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஊதியம் பெற்றுக்கொண்டு இந்தியாவில் தாக்குதல்களில் ஈடுபடும் தீவிரவாதிகள்



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் ஊதியம் பெற்றுக்கொண்டு தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது தற்போது அம்பலமாகியுள்ளது.

தீவிரவாதம் என்பது இப்போதெல்லாம் அமைப்புக்குள் செயற்படும் ஒரு தொழிலை போல மாறிவிட்டது. இதற்கு காஷ்மீரில் ஊதியம் கொடுத்து தீவிரவாதிகளை வேலைக்கு அமர்த்தி வைத்திருக்கும் தீவிரவாத அமைப்புகளே சான்று.

அதிக மதிப்பிலான ரூபாய் நாணயத்தாள்கள் வாபஸ் பெறப்பட்ட பிறகு காஷ்மீரில் உள்ளூர் தீவிரவாத சம்பவங்கள் வெகுவாக குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம், சம்பளம் சரியாக போய் சேராததுதான் என்கிறார்கள்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், தீவிரவாதிகளின் ஊதியம் குறித்த அறிக்கை ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வந்து இணையும் தீவிரவாதிகளுக்கு ஆரம்பத்தில் ரூ.50,000 முன்பணம்/ சம்பளமாக கொடுக்கப்படுகிறது. அதுவே உள்நாடு, உள் மாநில நபர்கள் எனில் முதலில் ரூபா 10 ஆயிரம் முதல் ரூபா 25 ஆயிரம் வரை கொடுக்கப்படும்.

மாத ஊதியம்: வெளிநாட்டினர் ரூ.15,000, உள்நாட்டினர்-ரூ.3,000 முதல் ரூ.10,000.

"ஓய்வு பெறும்" தீவிரவாதிக்கு அளிக்கப்படும் தொகை: வெளிநாட்டு தீவிரவாதி- 2,00,000. உள்நாட்டு தீவிரவாதி- 2,00,000.

சிறந்த தீவிரவாதியாக தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு வழங்கப்படும் விருதுக்குரிய தொகை வெளிநாடோ உள்நாடோ யாராக இருந்தாலும் தலா ஒரு இலட்சம் தீவிரவாத குழுக்களின் கொமாண்டர் பதவியிலிருப்பவர்களுக்கு மாத ஊதியம் ரூ.50 ஆயிரமாகும். இறந்து போன தீவிரவாதிகளின் குடும்பத்திற்கு முதலில் ரூ.50 ஆயிரமும், மாதா மாதம் 5 ஆயிரமும் உதவித் தொகையும் வழங்கப்படுகிறதாம்.

அதுவே உள்ளூர் தீவிரவாதி எனில் அவனது குடும்பத்தாருக்கு ரூ.25 ஆயிரம் முதலிலும், மாதா மாதம் 3 ஆயிரமும் கொடுக்கப்படுகிறதாம் என இந்திய ஊடகங்கள் பரபரப்பாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன. (இ-10)

## வழக்கு தொடர்ந்தவருக்கு ஒரு இலட்சம் அபராதம்

# 'ஜெ' சொத்துக்களை அரசு ஏற்க வேண்டும்

## வழக்குத் தள்ளுபடி

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தெலுங்கானா மாநிலத்தில் உள்ள சொத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழக முதலமைச்சராகவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளரகவும் பதவி வகித்து வந்த ஜெயலலிதா கடந்த 5ஆம் திகதி காலமானார். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் ஏராளமான சொத்துகள் உள்ளன.

தெலுங்கானா மாநிலத்தில் ஜெயலலிதாவின் பெயரில் உள்ள அனைத்து சொத்துகளையும் அம்மாநில அரசு ஏற்க வேண்டும் என கூறி கைரிப் கைடு என்ற அமைப்பின் சார்பில் ரிட் வழக்கு ஐதராபாத் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டது. ஜெயலலிதாவுக்கு வாரிசுகள் இல்லாததால் ஐதராபாத்தில் அவருக்கு சொந்தமான சொத்துக்களை தெலுங்கானா அரசு ஏற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

தலைமை நீதிபதி பொறுப்பு வகிக்கும் ரமேஷ் ரங்கநாதன் தலைமையிலான அமர்வு முன்பு இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரருக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன் ரூ.1 இலட்சம் அபராதமும் விதித்தும் உத்தரவிட்டனர்.

ஜெயலலிதாவுக்கு அண்ணன் மகன் மற்றும் அண்ணன் மகள் உள்ளனர். அப்படி இருக்கும் பட்சத்தில் அவருக்கு வாரிசு இல்லை என்று கூறி எப்படி வழக்கு தொடர முடிந்தது என்றும் நீதிபதிகள் வழக்கு விசாரணையின்போது தெரிவித்தனர்.

மேலும், "இது நீதிமன்ற நடைமுறைக்கு தவறான விடயம் ஆகும். மனுதாரர் செய்த தவறுக்கு அபராதம் கட்டியே ஆக வேண்டு. இதனை வேறுயாரும் உதாரணமாக எடுத்துக் கொள்ள கூடாது" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ஜெயலலிதாவுக்கு சொந்தமான சொத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என தொடரப்பட்ட இந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. (இ-10)

# பாலியல் குற்றச்சாட்டு விசாரணையில் உறுதி



(சான்சல்வடோர்)

மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோரில் கத்தோலிக்க சபையை சேர்ந்த சில பாதிரியார்கள் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

எனவே அவர்கள் மீது வாடிகன் கத்தோலிக்க திருச்சபை தலைமைப் பீடம் விசாரணை நடத்தியது.

இதில் பிரான்சிஸ்கோ கால்வேஸ், அன்டோனியோ மொலினா, ஜீசஸ் டெல்கடோ ஆகிய 3 பாதிரியார்களும் 1980 முதல் 2000 ஆம் வரையிலான காலகட்டத்தில் இது போன்ற குற்றங்களில் ஈடுபட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாக பேராயர் லூயிஸ் எஸ்கோபர் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து அவர்கள் 3 பேரையும் திருச்சபை நிர்வாகம் இடைநீக்கம் செய்து நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் இவர்களுக்கு எதிராக எல் சல்வடோரியன் அரசு சார்பில் குற்ற வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

எந்த காலத்திலும் பலவீனங்கள் உங்கள் மனதை வெல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்

வடக்கு மாகாண சபையில் நடக்கும் திருக்கூத்துக்களை மக்கள் நன்கு பார்த்து வருகின்றனர். வடக்கு மாகாண சபையைக் குழப்பியது, குழப்புவது யார்? என்பது மக்களுக்கு நன்கு புரியும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல்களில் கூட்டம் கூடி முதலமைச்சருக்கு எதிராகக் கடிதம் எழுதி உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கியது முதல் சமுகமளிக்காத உறுப்பினர்களின் கள்ளக் கையெழுத்து போட்டது வரை வடக்கு மாகாண சபையைக் குழப்புகின்ற முயற்சியில் ஈடுபடுவது யார் என்பதை தமிழ் மக்கள் மிகவும் தெளிவாக அறிந்து வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒரு தடவை வெற்றி பெற்றவர்கள் தாங்களே தொடர்ந்தும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்று நினைக்கின்றனர். இந்த நினைப்பு எல்லாரிடமும் இல்லை என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

மிகப்பெரியதொரு யுத்த அழிவுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்களின் பொன்னான வாக்குகளை மன விருப்போடு அளித்தது வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

யுத்தத்தில் இரண்டு கால்களையும் இழந்தவர்கள் கூட அரைந்தும் தவழ்ந்தும் வாக்களிக்கச் சென்றதைப் பார்த்து நெக்குருகாதவர்கள் இல்லை எனலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரே தலைமையின் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை ஏற்றுக் கொண்டு தமிழ் மக்கள் வாக்களிக்க,

வீட்டுச் சின்னத்தில் தும்புத்தடி போட்டியிட்டாலும் வெல்லும் என்றிருந்த நிலைமையில், மாகாண சபையில் பதவியைப் பெற்றவர்கள் உளர்.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் இவ்வாறு வெற்றி பெற்றவர்களில் சிலர் கொழும்பு தமிழ் அரசியல் தலைமையின் ஏவலில் வடக்கு மாகாண சபையைக் குழப்பி, வடக்கின் முதலமைச்சரை தாமாகப் பதவி விலகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் அந்தச் சதித்திட்டங்கள் வெற்றி பெறவில்லையாயினும் தமிழ் மக்களுக்கான சேவையை வடக்கு மாகாண சபை வழங்க முடியாத அளவில் களநிலைமையை மோசமாக்கி தமிழ் அரசின் செயற்பாட்டை நாசமறுத்தனர்.

இத்தகையவர்கள் சிறிது காலம் அமைதியாக இருந்தனராயினும் இப்போது மீண்டும் வடக்கு மாகாண சபையின் இயல்பு நிலைமையைக் குழப்பத் தலைப்பட்டுள்ளனர்.

இதற்கு அடிப்படைக் காரணம் புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை - உரிமையைத் தரும் என்பதில் நம்பிக்கை இல்லை என்று வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வெளிப்படையாகக் கூறியமைதான்.

அதாவது மேற்போந்தவாறு வடக்கின் முதலமைச்சர் கூறுவது, கொழும்பு ஆட்சியாளர்களுக்குத் தாம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறாமல் போகும் என்ற ஏக்கம் சிரசுக்கேற, வடக்கு மாகாண சபையை மீண்டும் குழப்பும் கொடுமைத்தனம் அரங்கேறியது என்பதே நிஜம்.

அதிலும் மிக நுட்பமாக வடக்கு மாகாண சபையை கடுமையாகக் குழப்புவது பின்னர் தாம் ஒற்றுமை போல நடித்து தமிழ் மக்களை ஏமாற்றுவது என்ற கபட நாடகம் தமிழினத்துக்கு செய்யப்படும் மிகப் பெரிய துரோகத்தனமாகும்.

எதுவாயினும் அன்புக்குரிய தமிழ் மக்களே! நீங்கள்தான் உயர்ந்த நீதிபதிகள் பத்திரிகையில் இவ்வாறு எழுதப்பட்டு விட்டது என்பதற்காக நீங்கள் இதை ஏற்க வேண்டும் என்றில்லை.

நீங்களே சிந்தியுங்கள். வடக்கு மாகாண சபையின் அமர்வுகளில் யார் யார் எப்படி நடந்தனர், நடக்கின்றனர் என்பதை அவதானியுங்கள். நீங்கள் நீதிபதிகள். அடுத்த தேர்தலில் உங்கள் தீர்ப்புத்தான் அடுத்த மாகாண அரசிலும் இதே குழப்பமா? கூத்தா? அல்லது இந்த சபை அடுத்த சபைக்கு நல்ல பாடமா? என்பதைத் தீர்மானியுங்கள்.

உங்கள் தீர்ப்பு தெளிவாக இருக்கட்டும். தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பைத் தரும் என்ற வள்ளுவனின் குறளை மனதிருத்தி வடக்கு மாகாண சபையின் அமர்வுகளை முன்னோக்கியும் பின்நோக்கியும் பாருங்கள்.

நீங்கள் வழங்கும் தீர்ப்பு சிலரின் அரசியல் துறவுக்கு அடி கோலட்டும்.

# வடக்கில் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோரை பராமரிக்க தனியான அரச இல்லங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிப்பதற்கு தனியான அரச இல்லங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முதியோரை பராமரிக்கும் முதியோர் இல்லங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார.

வடக்கு மாகாண முதலமைச்சருடைய அமைச்சின் கொள்கை விளக்கவுரை நேற்று முன்தினம் நடைபெற்ற சபையில் நடைபெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணத்திற்கென ஒரு மாகாண அலுவலகத்தினையும மற்றும் மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் தனித்தனியான மாவட்ட சமூகசேவைகள் அலுவலகங்களையும் அமைத்துக்கொண்டு அதன் ஊடாக அந்தந்த மாவட்டங்களின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் தனித்தனியான சமூக சேவைகள் அலுவலர்களை நியமித்து பிரதேச செயலாளர்கள் ஊடாக அவர்களின் சமூகசேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்றங்கள், அடைவுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தல் ஆகிய செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது.

வடக்கு மாகாணத்தின் முழுமையான சமூக சேவை செயற்பாட்டிற்கும் பொறுப்புக்கூறும் வகையிலான நாளாந்தச் செயற்பாடுகளான, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளை வழங்கல், அவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குதல், இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு அதிலிருந்து உடனடியாக மீண்டெழுவதற்கான இடர் உதவிக் கொடுப்பனவுகளை வழங்கல், இயற்கையாக அல்லது அனர்த்தங்களின் போது அவயவங்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை அவயவங்களை வழங்குதல், தொற்றும் மற்றும் தொற்றா நோய்கள் என்பனவற்றில் சில நோய்களான கசம், புற்றுநோய், தொழுநோய், தலசீமியா, சிறுநீரக நோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்கு குறிப்பிட்ட அளவு நோயாளர் கொடுப்பனவுகளை வழங்கி ஆற்றுப்படுத்தல் மற்றும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு வழங்கல் மற்றும் கைதடியில் அரச முதியோர் இல்லம் ஒன்றும் இத்திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் சுமார் 184 மூத்த பிரஜைகள் பராமரிக்கப்படுகின்றார்கள்.

மேற்படி நாளாந்த செயற்பாடுகள் மட்டுமல்லாது வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வரும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கும் அவற்றின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக கொடுப்பனவுகளை வழங்குதல், முதியோர மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பிலான சமூக அக்கறை, அவர்களின் பராமரிப்புத் தொடர்பான விழிப்புணர்வு, சமூகத்தில் நலிவுற்றோர்களை ஊக்கப்படுத்தல் போன்ற காரணங்களுக்காக இவர்களுக்கெனச் சர்வதேசத்தினால் பிரகடனப் படுத்தப்படும் விசேட தினங்களை கொண்டாடுதல்போன்ற செயறபாடுகளும் இத்திணைக்களத்தினூால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நலிவுற்ற மக்களின் குறைகேள் விருத்திச் செயற்பாடுகளுக்கும், அவர்களால் முன்வைக்கப்படும் முறைப் பாடுகளை சீர்செய்யும் நோக்குடனும் பல்வேறு பிரதேசங்களிலும் சமூக பராமரிப்பு நிலையங்களை நிறுவி அதனூடாகவும் சமூக சேவைச் செயற்பாடுகள் இத்திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படுகின்றது. இதற்கமைய இத்திணைக்களத்தின் கணகாணிப்பில் 77 முதியோர் சங்கங்களும 7 மாற்று வலுவுடையோர் இல்லங்களும், 8 தனியார் முதியோர் இல்லங்களும 7 முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களும் இயங்கி வருகின்றன.

முப்பதுவருடகாலக்கொடிய யுத்தத்தினால் எமது மாகாணம் பல இழப்புகளைச் சந்தித்துள்ளது. இதனால் நலிவடைந்த மக்கள் தொகை பன்மடங்காக உயர்ந்துள்ளது. இதிலிருந்து சடுதியாக மீள்வது மிகவும் பாரிய சவாலாகும். யுத்தத்திற்கு முன்னர் வினைதிறனுடன்இயங்கி வந்த பல முதியோர் பராமரிப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றின் கட்டடங்கள் பெருமளவில் அழிவுற்று மீண்டும் இயங்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. பல ஏக்கர் நிலப்பரப்பில் பல கட்டடத் தொகுதிகளைக் கொண்டதாக அழிவடைந்த நிலையில் உள்ள பல இல்லங்கள் தற்போது அடையாளங் காணப்பட்டுள்ளன.

இவற்றினை விட வடக்கு மாகாணத்தில் ஆதரவற்ற மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிப்பதற்கு தனியான அரச இல்லங்கள் ஏற்படுத்தப்படவேண்டியுள்ளது. மாற்று வலுவுள்ள சிறுவர்களைப் பராமரிப்பதற்கும் அரச இல்லங்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. மாற்று வலுவுள்ள இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரம் இன்னமும் கேள்விக்குரிய ஒன்றாகவே காணப்படுவதனால் அவர்களுக்கான வதிவிடத்துடன் கூடிய தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. (இ-4)

# தேசிய ரீதியில் யாழ்.மாவட்டம் மூன்றாமிடம்

2015 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்திதிறன் நிகழ்வில் பங்குபற்றி அரச துறை திணைக்களங்களுக்கான பிரிவில் தேசிய ரீதியில் யாழ். மாவட்டம் முதல் முறையாக மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

தேசிய உற்பந்திதிறன் விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அண்மையில் ரத்மலானை ஸ்டைன் மண்டபத்தில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் யாழ் மாவட்டச் செயலகம் முதன் முறையாக மூன்றாம் இடத்துக்கான விருதினை பெற்றுக்கொண்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் இந்த நிகழ்வு தேசியரீதியில் வருடந்தோறும் நடைபெற்று வருகிறது.

இம்முறை 1565 நிறுவனங்கள் இப் போட்டிகளுக்கு விண்ணப்பித்திருந்ததில் 998 நிறுவனங்களே உரிய தகைமையினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் 1ஆம் இடத்திற்கான விருதுகளை 12 நிறுவனங்களும் 2ஆம் இடத்திற்கான விருதுகளை 100 நிறுவனங்களும் 3ஆம் இடத்தினை 181 நிறுவனங்களும் பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ்வில் அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அமைச்சின் செயலாளர் கே.பீ. ரத்னசிறி,தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளர் ஜே.எம். திலகா ஜயசுந்தர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-9)

## சத்திய தரிசனம்



### நல்லதைச் செய்யும் நாளே நல்லநாள்

❖ ஞானியரின் ஒரே மொழி அமைதி. பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்க பழகிக் கொள்ள வேண்டும். இப்பழக்கம் ஒருவருக்குப் பல வழிகளில் உதவும். கால் தடுக்கிய காயம் ஆறிவிடும். ஆனால், நாக்குத் தவறியதால் உண்டாகும் பழிச் சொற்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்துவிடும்.

❖ நாக்கால் பொய் பேசுதல், புறங்கூறுதல், அளவுக்கு அதிகமாகப் பேசுதல், குற்றமுடையவற்றைப் பேசுதல் ஆகிய குற்றங்களைச்செய்யக்கூடாது.

❖ பிறரை விமர்சிப்பது, குற்றம் காண்பது ஆகியவை "நான்" எனும் அகம்பாவத்தினால் உண்டாவதாகும். இதற்குப் பதிலாக உங்கள் குற்றங்களை மனக்கண் முன் பரிசீலனை செய்யுங்கள். இந்த எண்ணத்தால் நம்மைத் திருத்திக் கொள்ள முடியும்.

❖ இறைவனின் திருவடிகளைப் போற்றுதல், பசித்தவர்களுக்குப் உணவிடுதல், நல்லவர்களை சந்தித்து நல்ல விஷயங்களை அறிந்து கொள்ளுதல் போன்ற செயல்களைச் செய்யும் நாட்களே பயனுள்ளவையாகும்.

❖ கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய உறுப்புக்களே துணையாகவும், தொல்லையாகவும் அமைந்துள்ளன. இந்த உறுப்புகளுக்கு அடிமையாகும் மனிதனுக்கு வேறு பகைவர்கள் தேவையில்லை. ஆனால், இந்த உறுப்புகளை அடக்கியாளக் கற்றுக் கொண்டால் அவை உதவி செய்யும் நண்பர்களாக மாறி விடும்.

# மரக்கன்றுகளுக்கான கூடுகள் திருடப்பட்டன

கரணவாய்குஞ்சர்கடைப் பகுதியில் மரக்கன்றுகளுக்கு அடைக்கப்பட்டிருந்த கூடுகள் திருடப்பட்டுள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதியில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. இவ்வாறு நாட்டப்பட்ட மரக்கன்றுகளை கால்நடைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக கூடுகள் அடைக்கப்பட்டன. இக் கூடுகள் கடந்த 19 ஆம் திகதி இரவில் இருந்து காணாமற் போயுள்ளன. (இ-60)

# இணக்கசபையினருக்கு இடையூறு விளைவித்தவருக்கு விளக்கமறியல்

இணக்க சபையினரை கடமையைச் செய்யவிடாது இடையூறு விளைவித்த நபர் ஒருவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் காணிப்பிரச்சினை இணக்க சபை மூலம் தீர்ப்பதற்காகக் கொண்டு செல்லப்பட்ட போது 25 வயதுடைய குடும்பஸ்தர் அவர்களுக்கு இடையூறு விளைவித்ததன் காரணமாக நெல்லியடிப் பொலிஸாரால் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 20 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (இ-60)

# முதல்வர் விக்கியை விமர்...

வடக்கு மாகாண ஆளுங்கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சரினை விமர்சித்து பேசியதால் சபையில் ஆளுங்கட்சிக்குள்ளேயே பெரும் அமளி துமளி ஏற்பட்டது. நான், நீ, போ, பேயா எனவும் கருத்து மோதல்கள் இடம்பெற்றமையால் அவையே நேற்று கலவரமாகியது. இந்த மோதல்களின் தொடர்ச்சியாக உறுப்பினர் சிவாஜிலிங்கம் செங்கோலை தூக்க முயன்றமையால் பெரும் குழப்பம் ஏற்பட்டு ஒருமணித்தியாலம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபையின் 71 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதம் நடைபெற்றது. இதில் பாதீடு தொடர்பில் கருத்துக்களை முன்வைக்காமல், முதலமைச்சரினை அரசியல் ரீதியாக விமர்சித்தமையும், தரக்குறைவான வார்த்தை பிரயோகங்களுமே குழப்பத்திற்கு காரணமாக அமைந்தது. இந்த குழப்பங்கள் அனைத்திலும் எதிர்க்கட்சி சம்பந்தப்படவில்லை.

மாறாக ஆளுந்தரப்பு தமக்குளளே மோதுண்டுதனை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர். வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சியினர் யார் என்று தெரியாத நிலைக்கு தலைகீழாக நேற்றைய சபை மாறியிருந்தது.

**சண்டை ஆரம்பம்**

முதலமைச்சு அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய அஸ்மின், வடக்கு மாகாண முதலமைச்சரினை சுற்றி இருப்பவர்கள் அவரை தவறாக வழிநடத்துகின்றார்கள். இங்கு உரையாற்றிய கொள்கை விளக்கவுரை யாரோ எழுதி குடுத்ததனை தான் வாசிக்கின்றார். எனவே முதலமைச்சர் தான் முதலமைச்சராக இங்கு வந்த போது மக்களின் எதிர்பார்ப்புக்கள் எவ்வாறு இருந்தது என முதலமைச்சர் சிந்தித்து பார்க்க வேண்டும். தன்னை சுற்றி இருப்பவர்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அஸ்மின் கூறினார்.

இவ்வாறு அஸ்மின் உரையாற்றி கொண்டு இருக்கும் போது ஏனைய சில உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதன் போது எழுந்த உறுப்பினரான சர்வேஸ்வரன், முதலமைச்சரின் தனிப்பட்ட விடயங்களை பேசுவது ஏற்க முடியாது. அவ்வாறு பேச வேண்டும் என்றால் அதனை கட்சி குழுக்கூட்டத்தில் பேச முடியும். மாறாக சபையில் முதலமைச்சரின் தனிப்பட்ட விடயம் தொடர்பில் கேள்விக்கு உட்படுத்த முடியாது என தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் ரவிகரன், தமிழ் மக்களின் உரிமை தேசியம் பற்றி யார் கதைப்பது என்று தெரியாத நிலை உள்ளது. முதலமைச்சர் பற்றி இப்போது பேசுபவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை என சாடினார். இங்கு கருத்து தெரிவித்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், உறுப்பினர் அஸ்மின் முதலமைச்சர் பற்றி கூறிய நிலையில்,

**நானா? நீயா?**

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன? தமிழ் மக்களுடைய தீர்வு தொடர்பில் யார் சொல்வது சரி? என்பது தொடர்பில் எங்கு என்றாலும் நாம் விவாதிக்க தயார். ஆகவே அரசியல் பேசுவதற்கு எங்களுக்கும் போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என சிவாஜிலிங்கம் ஆவேசமாக கூறினார். இதன் போது சபையில் மேலும் சலசலப்பு ஏற்பட அவைத்தலைவர் ஓரளவு சமாளிப்புக்குள் கொண்டுவந்தார்.

எனினும் மீண்டும் எழுந்த உறுப்பினர் அஸ்மின், வடக்கு மாகாண முதலமைச்சர் அடுத்த வருட ஆரம்பத்திலாவது தான் இப்போது சென்று கொண்டிருக்கும் பாதையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். தன்னை சூழ உள்ளவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். எதிர்வரும் ஆண்டிலாவது அவர் வடக்கு மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்ற முன்வர வேண்டும் எனவும் மீளவும் கூறினார்.

எனினும் முதலமைச்சரினை அஸ்மின் மீளவும் தாக்கி பேசியதால் உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதன் போது எழுந்த உறுப்பினர் சுகிர்தன், உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி வழங்கும் போது அனைவருக்கும் சமனாக வழங்க வேண்டும் என அவைத் தலைவரை நோக்கி கூறினார். பின்னர் எழுந்த உறுப்பினர் இந்திரராசா, ஆயுதப்போராட்டத்தை கொச்சைபடுத்தி பேசிய அஸ்மினுக்கு கண்டனத்தை தெரிவிப்பதாக கூறி, வடக்கு மாகாண சபை ஆயுத போராட்டத்தினால் தான் உருவாகியிருந்தது எனவும் கூறினார்.

**அருகதையற்றவர்கள்**

இதன் போது கருத்து தெரிவித்த உறுப்பினர் சயந்தன், முதலமைச்சர் ஆயுத போராட்டத்தில் ஈடுபடவில்லை, அதை தான் அஸ்மின் கறைபடியவில்லை என கூறினார். மாறாக ஆயுத போராட்டத்தை கொச்சைப்படுத்தவில்லை என தெளிவுபடுத்தினார். இதன் பின்னர் எழுந்த உறுப்பினர் விந்தன், இப்போது பேசுபவர்கள் எல்லோரும் ஆயுதப் போராட்டம் பற்றி பேசுவதற்கு அருகதையற்றவர்கள். சில்லறைத்தனமாக இந்த உறுப்பினர்கள் பேசுகின்றார்கள். அது தொடர்பில் அலட்டிக் கொள்ள தேவையில்லை எனவும் கூறினார்.

மீண்டும் கருத்து தெரிவித்த உறுப்பினர் இந்திரராசா, தம்மால் ஒதுக்கப்படும் நிதிக்கு என்ன நடைபெறுகின்றது? என்பது குறித்து எமக்கு தெரியப்படுத்தப்படுவதில்லை. அரச அலுவலர்கள் தாம் நினைத்தபடி, எம்மால் குறிப்பிடப்படாத வீதிகளையும் செப்பனிடுகின்றனர் என அரச அதிகாரிகளை சாடினார். இதே போன்று குறித்த மோதல் சம்பவத்தில் இருந்து சபை விடுபட்டு, மீண்டும் ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கு அவை சென்றது.

**யார் எதிர்க்கட்சி என்று தெரியவில்லை**

எனினும் மீண்டும் உறுப்பினர் சயந்தன் உரையாற்றும் போது, விவாதம் என்பது குறைகளை சுட்டிக்காட்டத்தான். ஆனால் இங்கே நிறைகளை மட்டுமே கூற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு என்றால், விவாதமே தேவையில்லை. ஒன்றும் இல்லாமல் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிவட்டு-போய்விடலாம் என சயந்தன் கூறினார்.

இதன் போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா, இங்கு யார் எதிர்க்கட்சியினர் என்று தெரியவில்லை. நாங்கள் செய்ய வேண்டியதை ஆளுங்கட்சியினரே செய்து கொள்கின்றனர் என ஒரு குத்தல் போட்டார். எதிர்க்கட்சி தலைவர் ஆளுங்கட்சியின் தயவில் தான் பதவியில் உள்ளார். ஆகையால் தான் அவரது வேலையை நாங்கள் செய்கின்றோம் என சயந்தன் பதிலுக்கு குத்தல் போட்டார்.

**குழப்பத்துக்கு இடம் கொடுத்த அவைத்தலைவர்**

தொடர்ந்தும் பேசிய சயந்தன், உள்ளூராட்சி அமைச்சின் செயற்பாடுகள் சிறந்த முறையில் அமையவில்லை எனவும், முதலமைச்சர் வெளி இடங்களில் உரையாற்றும் போது சில உறுப்பினர்கள் சபையை குழப்புவதாகவும் விகாரைகள் கட்டப்படுவதற்கு தமிழ் தலைமைகள் துணை போவதாகவும் உரையாற்றியுள்ளார். இலண்டனில் உரையாற்றும் போதும் முதலமைச்சர் உறுப்பினர்கள் சிலர் சபையை குழப்புகின்றனர் எனவும் கூறினார். இதன் போது குறுக்கிட்ட சர்வேஸ்வரன், சபை மீண்டும் வேறு திசை நோக்கி செல்கின்றது.

முதலமைச்சரினை தனிப்பட்ட ரீதியாக உறுப்பினர் ஒருவர் விமர்சித்து கொண்டு உள்ளார். அதற்கு அவைத்தலைவராகிய நீங்கள் இடம் கொடுத்து கொண்டுள்ளீர்கள். இவ்வாறு பக்கச்சார்பான முறையில் செயற்படுவதனை தவிருங்கள் எனவும் அவைத்தலைவரிடம் சர்வேஸ்வரன் கூறினார். மேலும் ஆயுதப்போராட்டம் தொடர்பில் முதலமைச்சர் ஆரம்பத்தில் ஒரு விமர்சனம் ஒன்றை செய்திருந்தார். அது தொடர்பில் நான் பத்திரிகைகள் மூலம் தான் விளக்கமளித்தேன். எனவே பேச வேண்டியவற்றை, பதில் அளிக்க வேண்டியவற்றை, அந்த இடங்களிலேயே வழங்குங்கள் என சிவாஜிலிங்கம் கூறினார்.

**குழப்பம் ஆரம்பம்**

வடக்கு மாகாண முதலமைச்சரினை தெரிவு செய்யும் போது தமிழரசு கட்சியும் தான் பங்கு பற்றி இருந்தது என சிவாஜிலிங்கம் கூற, எவ்வாறு கட்சி பெயரை சபையில் பயன்படுத்தலாம் என உறுப்பினர்களான, அஸ்மின், ஆனோல்ட், பரஞ்சோதி மற்றும் அவைத்தலைவர் சிவஞானம் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து பேசினார்கள். எனினும் தான் கட்சியை இழிவுபடுத்தி கூறவில்லை அனைத்து கட்சிகளோடும் தமிழரசு கட்சியும் இருந்தது என்று தான் கூறினேன் என தெளிவுபடுத்தினார்.

சபை குழம்பி கொண்டு உள்ளது, உறுப்பினர்கள் கட்டுப்படுகின்றனர் இல்லை என அவைத்தலைவர் கூற, உறுப்பினர்கள் வேறு சம்பவம் தொடர்பில் பேசத்தொடங்கி விட்டார்கள். எனவே சபையை ஒத்திவைக்கலாம் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் மீண்டும் கூறினார். அது எனக்கு தெரியும் நீ இரு, என கூறிய அவைத்தலைவர், சும்மா கதைத்து பிரயோசனம் இல்லை. வடக்கு மாகாண சபையை கலைக்குமாறு கூறியவர் தான் நீர் என சிவாஜிலிங்கத்தை சாடினார்.

**செங்கோலை தூக்க முயன்றதால் பதற்றம்**

உங்களுடைய கருத்துக்களை யோசித்து பேசுங்கள் என தனது இருக்கையில் இருந்து சிவாஜிலிங்கம் கூற, மீண்டும் அவைத்தலைவர் முரண்பட சிவாஜிலிங்கம் செங்கோலை நோக்கி வேகமாக சென்றார். இவ்வாறு சிவாஜிலிங்கம் செல்ல தனது இருக்கையில் இருந்து அவைத்தலைவர் எழும்பி வா வா போயா பேயா என ஏட்டிக்கு போட்டிக்கு நின்றார். இதனால் அருகில் இருந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து செங்கோல் நோக்கி சென்ற சிவாஜியை சமாதானப்படுத்தினார்கள்.

இந்த சம்பவத்தில் அனைத்து உறுப்பினர்கள் அனைவரும் பதற்றத்தினால் தமது இருக்கைகளில் இருந்து எழுந்தனர். ஒருசில உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம் மீது நடவடிக்கை எடுக்க வேணடும் எனவும், இல்லாவிட்டால் சபை நடத்தேலாது என உறுப்பினர் பரஞ்சோதி உரத்த குரலில் கூறினார். மேலும் சபையை வெளிநடப்பு செய்ய போவதாகவும் உறுப்பினர்களான பரஞ்சோதி, அஸ்மின், ஆனோல்ட் ஆகியோர் கூறி, வெளிநடப்பு செய்ய ஆயத்தமானார்கள். உடனடியாக குழு நிலையிலிருந்த அவையை சபை நிலைக்கு கொண்டுவருவதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

**பின்னணி கண்டறியப்பட வேண்டும்**

இதற்கிடையில் கருத்து தெரிவித்த உறுப்பினர் விந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை கோபம் ஏற்படுத்தும் வகையிலும் இயக்கங்களை கீழ்த்தரமாக கூறியும் வேண்டுமென்று சிலர் குழப்பியுள்ளனர். அவர் செங்கோலை தூக்க முயன்றதற்கு இங்கே இருக்கும் ஒருசிலர் தான் காரணம். போராட்ட இயக்கங்களை கொச்சை படுத்தும் வகையில் இங்கே சில உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள். அவ்வாறு பேசியதால் தான் சிவாஜிலிங்கம் கோபமடைந்தார். இவற்றை விட பாராளுமன்றத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனினும் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை அந்தளவு நிலைக்கு தள்ள கூடாது அதனை பார்த்து கொள்ள வேண்டிய பொறுப்பு அவைத்தலைவருக்கு உண்டு.

ஆரம்பம் முதலே வேண்டுமென்றே சபை சிலரால் குழப்பப்பட்டு வந்தது. இந்த பின்னணிகள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என விந்தன் கூறினார். இதன் போது உறுப்பினர் ஆனோல்ட்டுக்கும் விந்தனுக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒவ்வொரு உறுப்பினர்களும் தாமாக பேசிக் கொண்டு இருந்தார்கள். இந்த சத்தத்தினால் வெளியில் இருந்தவர்கள் காதை பொத்தியதனையும் காண முடிந்தது. தாம் ஆயுத போராட்டத்தை கொச்சை படுத்தவில்லை எனவும், இங்கே ஆயுதப்போராட்டம் தொடர்பில் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை எனவும் விந்தனுடைய கருத்தை மறுத்து பேசினார் உறுப்பினர் ஆனோல்ட்.

**ஒரு மணிநேரத்திற்கு திடீர் ஒத்திவைப்பு!**

இந்த குழப்ப நிலைகளால் சபையில் ஒருவித பதற்றம் ஏற்பட்டு கொண்டிருக்க சபையை உடனடியாக ஒரு மணித்தியாலத்திற்கு ஒத்திவைப்பதாக அவைத்தலைவர் அறிவித்தார். இதன் போது உறுப்பினர் சிவாஜிலிங்கத்துடன் கோபமாக நடந்து கொண்டதற்கு மன்னிப்பு கோரினார். இந்த ஒத்திவைப்பு நேரத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதன் பின்னர் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் சபை கூடியது. மீண்டும் சபை மதிய உணவின் பின்னர் கூடிய போது சபையில் ஏற்பட்ட குழப்பத்திற்கு உறுப்பினர்களின் வேண்டுதலுக்கு அமைய மன வருத்தத்தை தெரிவிப்பதாக கூறினார்.

அதனை தாம் பெருந்தன்மையுடன் ஏற்பதாக உறுப்பினர் சயந்தன் கூறினார். இவ்வாறான சங்கடங்கள் ஜனநாயக அமைப்பில் ஏற்படுவது வழமை தான். நான் மிகவும் மதிப்பு வைத்துள்ள உறுப்பினர்களில் ஒருவர் தான் சிவாஜிலிங்கம். ஏதோ தவறுதலாக நடைபெற்று விட்டது என அவைத்தலைவர் சிவஞானம் கூறினார். இதன் பின்னர் உரையாற்றிய உறுப்பினர் ரவிகரன், எமது நிலங்கள் பறி போய் கொண்டிருக்கின்றது. ஆனால் நாம் சண்டை போட்டு கொண்டுள்ளோம் என ஆவேசத்துடன் கூறினார். இதன் பின்னர் சபை அமைதிக்கு வந்தது.

**உறுப்பினர்களுக்கு உறைக்கும் சிறுகதை**

வானம்பாடி என்றொரு பறவை உண்டு, அந்த பறவை பகல் முழுவதும் பறந்து கொண்டே இருக்கும். பின்னர் இரவு நேரத்தில் காலை மேலே வைத்து தலைகீழாக தான் தூங்கும். ஏனென்றால் வானத்தை தான் பகல் முழுவதும் தனது முதுகில் தாங்கியது என்று. இந்த நினைப்பில் தான் இங்கு பல உறுப்பினர்கள் பேசிக்கொண்டு உள்ளார்கள். இங்குள்ள உறுப்பினர்கள் கதைத்ததை எல்லாம் சேர்த்து பார்த்தால் ஒன்றுமே பிரயோசனம் இல்லை என்று தான் தோன்றும்.

இங்குள்ள உறுப்பினர்களில் ஐந்து பேர்களை தவிர ஏனையோர மாகாண சபை மீது நம்பிக்கையுற்ற நிலையில் தான் உள்ளனர். மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் பொறுப்பை உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மாறாக தேவையற்ற விதத்தில் ஒருவரினை சுரண்டி பார்க்கும் வகையில் ஒருவரின் கருத்து அமைய கூடாது என உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அறிவுரை கூறினார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் மயூரன், இங்குள்ள உறுப்பினர்கள் சிலரை குழப்பவாதிகளாக தான் மக்கள் பார்க்கின்றனர் என ஒரு உண்மையை போட்டுடைத்தார்.

**முதலமைச்சரை யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன்!**

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் எனக்கும் முரண்பாடு உண்டு என்பதனை நான் நேரடியாக கூறுகின்றேன். மற்றவர்கள் போன்று முன்னால் புகழ்ந்து விட்டு, பின்னால் இகழ்பவன் அல்ல. உறுப்பினர் அஸ்மின் கூறுவது போன்று முதலமைச்சரினை யாரும் செயற்படுத்தவில்லை. அவ்வாறு யாரும் இருந்தாலும் அவர்கள் சொல்வதை கேட்டு செயற்படும் ஆள் முதலமைச்சர் இல்லை. எமது முதலமைச்சர் ஒரு நீதியரசர் அவருக்கு தீர்ப்பு எழுத தெரியும் என புகழ்ந்து பேசினார்.

இதே போன்று மதிய உணவிற்கு முன்னர் சண்டை பிடித்த உறுப்பினர்கள் மதிய உணவின் பின்னர் ஒற்றுமையுடன் பேசி கூடி குலாவி மகிழ்ந்தனர். அவைத் தலைவரும் தனது மனக்கிடைக்களை அவையில் கொட்டி தீர்த்தார். எதிர் வரும் ஆண்டிலாவது நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் செயற்படுவோம் எனவும் அவைத்தலைவர் மீண்டும்மீண்டும்கூறினார். இதனை அடுத்து அவையில் ஏற்பட்ட குழப்பம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (4)



## ஆட்சியை மாற்றிய...

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய இந்தியா அதில் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் கட்டுப்படுத்தும் இந்தியாவின் அணுகுமுறை தோல்வியடைந்துள்ளதாகவும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்காண்டவாறு தெரிவித்துள்ளார். (11)

(விரிவான செய்தி 16-ம் பக்கத்தில்)

## அறிக்கை கையளி...

செயலணியின் பரிந்துரை உள்ளடங்கியுள்ள அறிக்கை நேற்றுக்காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் கையளிக்கப்படவுள்ளதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த அறிக்கை நேற்று கையளிக்கப்படவில்லை என நல்லிணக்க செயலணியின் அங்கத்தவர்களில் ஒருவரான சட்டத்தரணியும், சிரேஷ்ட பத்திரிகையாளருமான கே.யூ.ஜனரஞ்சன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதியிடம் அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதில் காலதாமதம் ஏற்பட்டமைக்கு தமது கட்டுப்பாட்டை மீறிய சூழ்நிலைகளே காரணமாக அமைந்துள்ளதாகவும்.

மேலும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கான திகதி உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் தாம் அந்த அறிக்கையாக வெளியிடவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (11)

## 12 இந்திய மீன...

ரின் உதவியுடன் கடற்பாதுகாப்பு திணைக்களத்தினர் இவர்களைக் கைதுசெய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த மீனவர்கள் வசமிருந்த இரண்டு படகுகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, தமிழகத்தை சேர்ந்த ஏழு மீனவர்கள் எல்லை தாண்டியதாக குற்றம்சாட்டப்பட்டு நேற்று முன்தினமும் நெடுந்தீவில் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (11)

## சிங்களவர்களின்...

இந்த சந்திப்பின் போது நீதியமைச்சருடன் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரும் மட்டக்களப்புக்கு சென்றிருந்தார்.

மாங்களாராம தலைமை பிக்குவுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபான்மையாக வாழும் சிங்கள மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

குறிப்பாக சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து கடிதம் மூலம் தெரிவிக்கும் போது சிங்கள மொழி தெரிந்த ஏனைய இனங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகள் அவற்றை குப்பை கூடைகளில் போடப்படுவதாலேயே மட்டக்களப்பில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (11)

## யானைக்கு வைத்...

வசிக்கும் அழகன் -செல்வநாதன் (வயது 42) என்ற குடும்பஸ்தர் தனது வீட்டுக்கு அருகில் இருக்கும் தன்னுடைய நெல் வயலை யானையிடம் இருந்து பாதுகாக்க மின்சாரத்திலான பொறியை வைத்துள்ளார்.

பின்னர் பொறி வைத்ததை மறந்து விட்டு மீண்டும் வயல் பிரதேசத்திற்கு சென்ற போதே மின்சார பொறியின் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இதே வேளை, கடந்த 19-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் மாடுகளை பட்டியில் அடைப் பதற்காகச் சென்ற பனங்காமம் நட்டாங்கண்டல் கிராமத்தை எஸ்.குணசிங்கம் (வயது 60) என்னும் குடும்பஸ்தர் யானையினால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் நடைபெற்று மறுநாள் மீண்டும் ஒரு மரணம் ஏற்பட்டமை கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (15-250)

## முஸ்லிம் மீள்குடி...

தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வின் போது முஸ்லிம் மக்கள் மீள்குடியேறுவதற்கு எந்த நடவடிக்கையும் முதலமைச்சருடைய அமைச்சு எடுக்கவில்லை.

முஸ்லிம் மக்களுக்கான காணிகளையும் வடக்கு மாகாண சபை வழங்கவில்லை என உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார்.

மேற்படி குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கு வகையில் நேற்றைய தினம் மேற்படி தகவலை முதலமைச்சர் வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதிலிருந்து 2013 இலிருந்து முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் எவ்வளவு என்று பார்த்தால்.

வவுனியாவில் சாழம்பை கிராமத்தில் 272,செட்டிக்குளத்தில் சூடு வெந்தகுளத்தில் பாவற்குள கிராமத்தில் 133, முசலி மருதமடுவில் 210, வேப்பங்குளம் 348, கரடி குழி 294, மறிச்சுக்கட்டி 424, பாலைக்குழி 238, முசலியில் பிச்சை வாணிபம்குளம் 32, அகத்திமுறிப்பு 226, வேப்பங்குளம் 153, எஸ்.பி பொற்கேணி 154, பி.பி.பொற்கேணி 149, முசலியில் கபடி குழி 52, கொண்டைச்சியில் 423, கயாக்குளியில் 38 என, கிட்டத்தட்ட மூவாயிரம் முஸ்லிம் மக்களுக்கு வடக்கு மாகாண சபையால் காணி உறுதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் முஸ்லிம் மக்களை வடக்கு மாகாண சபை புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என முதலமைச்சர் தெரிவித்தார். (4)

## ரவிராஜ் கொலை...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலை தொடர்பில் இதன்போது 25 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

பிரதிவாதிகள் சார்பில் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றத்தில் இன்று ஆஜராகுமாறு அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிலந்த ஜயவர்தனவிற்கு நேற்று அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சேனாபதி லியனகே, நடராஜா ரவிராஜின் கொலை தொடர்பில் 31 ஆவது சாட்சியாளராக நேற்று சாட்சியம் வழங்கியிருந்தார்.

நடராஜா ரவிராஜை கொலை செய்வதற்கு, ஆயுதமேந்திய புலனாய்வுப் படையினர் கருணா அம்மான் தரப்பினருக்கு வழங்கிய ரி 56 ரக துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

இராணுவப் படையணி நிலையத்தின் ஆயுதமேந்திய புலனாய்வுப் பிரிவினரால், நட்பு பிரிவினருக்கு வழங்கப்பட்ட ரி56 ரக துப்பாக்கியே இந்த கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவரும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## பிரதமர் ரணில்...

அங்கிருந்து விமானம் மூலமாக ரேனிகுண்டா விமான நிலையத்திற்கு வந்து பின்னர், கார் மூலமாக திருப்பதிக்கு ரணில் விக்கிரமசிங்க வந்தார்.

திருப்பதி திருமலையில் உள்ள ஸ்ரீகிருஷ்ணா விருந்தினர் மாளிகையில் சிறிது நேரம் ஓய்வு எடுத்த பிரதமர், பின்னர் சாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது. அவரது மனைவி மைத்திரி விக்ரமசிங்கவும் உடனிருந்தார்.

இன்று வியாழக்கிழமை அதிகாலை மீண்டும் சாமி தரிசனம் செய்யும் விக்கிரமசிங்க, அங்கிருந்து சென்னை வந்து விமானம் மூலமாக கொழும்பு திரும்புகிறார். (11)

## வடக்கு மக்கள்...

ஆகையால் இராணுவத்தின் உதவியை வடக்கு மாகாண சபை பெறலாமா? என முதலமைச்சரிடம் கேட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கிற்கு என இராணுவத்திடம் இருந்து உதவிகளை பெற்றால் அவர்களை ஆயிரம் வருடங்கள் சென்றாலும் வடக்கிலிருந்து வெளியேற்ற முடியாது. சில மாதங்களுக்கு முன்னர் இரணைமடு குளத்தை நானும் ஜனாதிபதியும் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் கிளிநொச்சியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் மதிய போசனத்தை எடுத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி என்னிடம் கேட்டார்.

நாங்கள் இராணுவத்தை இங்கிருந்து வெளியேறுமாறு கூறிக்கொண்டு இராணுவத்திடம் உணவு உண்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என கூறியிருந்தேன் என முதலமைச்சர் தெரிவித்தார். (4)


# மரண அறிவித்தல்



## திருமதி பரமேஸ்வரி தங்கவேலாயுதம்

*வடமராட்சி கிழக்கு மாமுனையைப் பிறப்பிடமாகவும், பொற்பதி குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி தங்கவேலாயுதம் கடந்த (19.12.2016) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.*

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - இரத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற வேலாயுதம் - பூரத்தம்மா தம்பதியினரின் மருமகளும், தங்கவேலாயுதம் (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், தங்கவதனி (பிரான்ஸ்), தங்கலதா (பிரான்ஸ்), தவனிதன் (பிரான்ஸ்), துஷ்யந்தினி (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வெற்றிவேல் (பிரான்ஸ்), மரியோ ஜோய்(பிரான்ஸ்), ஷெரின் (பிரான்ஸ்), சபேசன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr.ஆறுமுகம் (இங்கிலாந்து), யோகேஸ்வரி, காந்தலட்சுமி (பிரான்ஸ்), தனலட்சுமி, யோகலட்சுமி (பிரான்ஸ்), ஆனந்தராசா (இங்கிலாந்து), ஜெயலட்சுமி (விரிவுரையாளர்- யா/தேசிய கல்வியியற் கல்லூரி), விஜயலட்சுமி (இங்கிலாந்து), மகேஸ்வரி (ஆசிரியர் - யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), அம்பிக்குமார் (ஆசிரியர் - யா/ஞானசாரியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாருஷன், மதுஷன், ஷெரீனா, ஹ்ருதிக், லக்ஷமி, சமந்தா, சஞ்செய், ஷாமிக்கா, அக்ஷயா, நிஷா, நிது ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொற்பதி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி, குடத்தனை. (C-6827) தகவல் : குடும்பத்தினர்

# பொதுமக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 23.12.2016ஆம் திகதி தொடக்கம் 29.12.2016ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத் தருகின்றேன்.

வேலணை பிரதேச சபை
21.12.2016

திரு.அ.குருநாதன்
செயலாளர்

(C-6829)

# யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல்

## 24.12.2016 சனிக்கிழமை

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் 24.12.2016 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கீழ்க் குறிப்பிட்ட விபரப்படி வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அறிவித்தலுக்கமைய நடைபெற உள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

| தொடர் இல | கிளைஇல | கிளை பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | முனீஸ்வரன் | யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்.தலை.காரி. |
| 02 | 02 | குருநகர் | யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்.தலை.காரி. |
| 03 | 03 | இராசாவின்தோட்டம் | யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்.தலை.காரி. |
| 04 | 08 | நாவாந்துறை | அன்னா சனசமூக நிலையம் |
| 05 | 09 | சுங்கத்துறைமுகம் | யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்.தலை.காரி |
| 06 | 10 | பிறவுண் வீதி | கலைவாணி சனசமூக நிலையம் |
| 07 | 11 | ஓட்டுமடம் | ஞானவைரவர் கோவிலடி கல்திட்டி |
| 08 | 13 | நங்கா வீதி | வட.மா.ப.தெ.அ.கூ.சாங்.சமாசம் |

இங்ஙனம்
கூட். சேவையிலுள்ள
சி.குணரட்ணம்
கௌரவ செயலாளர்
யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

14.12.2016
330, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C-6830)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

**021 221 5656**
**070 330 5500**

அன்னா & கோ (C-6822)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

## V2 TRAVELS



குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

(C-6756)

தொடர்புகளுக்கு: **0768226236**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## FLC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER

## பிரெஞ்சு மொழி வகுப்பு

(C-6777)

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்க்கான...
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007.
DELF A1, A2,B1 இல் 100 % சித்தி. இதுவரை 1173 மாணவர்கள்

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**



## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com

(C-6793)

## A/L தொழில்நுட்ப பிரிவு கல்வி நிறுவன தொடக்க விழா அழைப்பு

A/L 2019, 2018, 2017 தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான பட்டதாரி ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப்படுகின்ற கல்வி நிறுவனத்தின் தொடக்க விழா

**பிரதம விருந்தினர்**
கலாநிதி சிவமதி சிவச்சந்திரன்
தலைவர் :- பயிரியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

**கௌரவ விருந்தினர்கள்**
திருமதி நிவேதிகா அஜிதன்
(விரிவுரையாளர், தொழில்நுட்ப பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

திருமதி ரஜிதா சுந்தர்
(விரிவுரையாளர், தொழில்நுட்ப பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
இரா.அருட்செல்வம் (A.T.C கல்வி நிறுவனம்)
S.சிவகுமார் (இரசாயனவியல் ஆசிரியர், New Science World)
A.சியாமளரூபன் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

**இடம் :-**
உயர்கலைக் கல்லூரி
(குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு)
திகதி :- 23.12.2016 வெள்ளிக்கிழமை
நேரம் காலை 9.30 மணி

பிரபல பாடசாலை தொழில்நுட்ப பிரிவு ஆசிரியர்களின் பாடத்தெரிவு பற்றிய கருத்தரங்கும் இடம்பெறும், (யாழ்.இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி

A/L 2019,2018,2017ற்கான அனுமதிகள் வழங்கப்படும்
மாணவர்கள், பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(C-6824)

# NEW SCIENCE HALL

## 2019 A/L கணித, உயிரியல் பிரிவு

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
| --- | --- |
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S.சோதிலிங்கம் திரு.G.பிரபா | MR. S.SOTHILINGAM |
| திரு.K.செல்வன் திரு.N.கபிலன் | MR. K.SELVAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு.K.சிவத்திரன் திரு.N.மகேஸ்வரன் | MR. N.MAHESWARAN |
| திரு.G.BENO திரு.T.சுசாந்தன் | MR. G.BENO |
| திரு.J.றஞ்சித்காந் | |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு.T.தம்பிராஜா | MR. T.THAMBIRAJAH |
| எமது வழமையான ஆசிரியர் | OUR USUAL TEACHER |
| திரு.T.கெங்காதரன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு.P. செந்தில்நாதன் திரு.S. சிவகரன் | MR. S.SIVAKARAN |
| புதிய பாடத்திட்டத்துக்கமைவானது ஆரம்பம்: 23.12.2016 | NEW SYLLABUS COMMENCING ON 23.12.2016 |

(C-6820)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,5 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.